அத்வைத விளக்கம்

(ஐந்தாம் பாகம்)

CONNEMARA PUBLIC LIBR
17 JUN 1956

இராமாயணம்

அல்லது

ஞான யோகம்

ஆசிரியர் :

K. கோபாலகிருஷ்ணையர்

ரிடையர்டு போஸ்ட் மாஸ்டர்

PRINTED BY

THE C. M. V. PRESS

MADURAI

All rights Reserved. **1951** **1/Re.**

முதல் பதிப்பு 1951.

★

கிடைக்குமிடம் :

K. கோபாலகிருஷ்ணையர்,

27, தெற்குச் சித்திரை வீதி,

மதுரை.

★

விலை ரூ. 1/-]

[தபால் செலவு வேறு.

★

இந்த லேககனுக்கு

ஞானோபதேசம் செய்தருளிய

ஸ்ரீ ஜெகத் குரு ஸ்ருங்கேரி

ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளின்

பாத பத்மங்களில்

இந்த க்ரந்தம் அதி விநயத்துடன்

சமர்ப்பிக்கப்பெற்றது.

★

கற்றோர்கள் தாமுகப்பர், கல்விதன்னி லாசையுள்ளோர்
பெற்றோமென உகந்து பின்பு கற்பர்—மற்றோர்கள்
மாச்சர்யத்தாலிகழில் வந்ததென்? நெஞ்சே! இகழ்க்கை
ஆச்சர்யமோ தானவர்க்கு.

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

அஞ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்சன சலாகயா
சக்ஷுர் ருன்மீலிதம் யேன தஸ்மைஸ்ரீ குரவே நம:

தேசிக ராஜ போற்றி தெரிந்துள பெரியோய் போற்றி
பாச மற்றவனே போற்றி பரம உத்தமனே போற்றி
ஏசிலா ஏக இன்ப விரதமா முருவே போற்றி
மாசிலா விபுவே போற்றி மாவருட் கடலே போற்றி

குருபர வுன்தன் எந்தக் குற்ற மில்லாத ஜோதி
வரையிலா தகீலமான வடிவ மாகப் பிறங்கும்
ஒருமையா யகண்டா நந்த வுண்மையாம் அந்த ஜோதி
உருவமே நோக்கி யென்றும் உவந்து நான் போற்றல்
செய்வேன்

CONNEMARA PUBLIC LIBRARY
17 JUN 1956
MADRAS



ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள்.

உ

CONNEMARA PUBLIC LIBRA

ஓம்: தத் சத்:

ஆலவாய் க்ஷேத்ராமிருத வித்வான்

பிர்ம்மஸ்ரீ A. R. சுப்பையரவர்கள்

மனமகிழ்ந்தளித்த

சாற்றுப்பா.

விருத்தம்

கைதனில் வெண்ணெய் கண்டும் கடைநாடி நெய்க்கலைவார்
காலடி மருந்திருக்கக் கானகம் நாடிப் போவார்
பொய்தனைக் காண்பார்வேத புராணத்தின் கருத்தை யோரார்
புண்ணிய பாபம் தேறார் புருஷனையறிய மாட்டார்
செய்தவம் பலவிருக்கத் தீமையை விரும்பிச் செய்வார்
க்ஷேத்திரம் தெரியாதெங்கும் தேடியே உழன்று நைவார்
மெய்தனில் உள்ள தேவன் மேன்மையை அறியார் அந்தோ
மிளிர்ந்திடும் இன்னோர் செய்கை விளம்புவதெவரோ அம்மா!

கரதலா மலகம் போலக் கைவெண்ணெய் தனில்நெய் காட்டிக்
காலடி மருந்து காட்டிக் கழறிடும் புராண நூல்கள்
சரதமாய்க் கூறும் ஞான சாஸ்திரம் துலக்கிக் காட்டி
சத்யமே பிர்ம்ம மென்றும் சரீரமே கோவி லென்றும்
விரதமார் மனிதன் தானே விளங்கிடும் தெய்வ மென்றும்
மிளிர்ராம சரிதந் தன்னை மெய்ஞ்ஞான யோகமாக
வரதகோ பால கிருஷ்ணன் வரைந்தவிந் நூலின் சாரம்
மக்களுக் கமுத மாகும் வரம்பிலா வீடுமாமே.

★

வேத வியாக்கியானங்களான
இதிஹாச புராண தத்வங்களை
எனக்கு விளக்கிப் போதித்தருளிய
திருவனந்தபுரம் நாராயண மகரிஷிகளின்
ஞாபகார்த்தமாக
இந்நூல் இயற்றப்பெற்றது.

— *ஆசிரியர்.*

★

Select opinions on the first four parts of

"அத்வைத விளக்கம்"

..............You are doing really great spiritual work and opening the eyes of the slumbering many.

— *Swami Sivanantha Rishikesh.*

*   *   *   *

.... I have been impressed with your unconventional and suggestive approach to many problems.

— *Sir C. P. Ramasamy Iyer.*

*   *   *   *

..............There is much that is interesting and ingenious in these small books whose author attempts to give a survey of the entire background of the Gita and its teachings.

— *"The Hindu"*

*   *   *   *

.... I commend these booklets to the earnest notice of all young men particularly students.

— *P. Mahadevan, Principal Madurai College.*

*   *   *   *

.............அறிவை விளக்கவென்று நவநாகரீக முறையில் புஸ்தகங்கள் பல மலிந்துவரும் இந்நாளில் பெரிய விஷயங்களை இச்சிறு புஸ்தகங்களில் அரியமுறையில் விளக்க ஆசிரியர் செய்திருக்கும் முயற்சி போற்றத்தக்கது.

ஸ்வாமிகள்,

ஆசிரியர், "ஜீவியப்ரதர்சினி"

............அத்வைதக் கொள்கையை வேதவியாசர் முதல் ஸ்ரீ சங்கரர், ஸ்வாமி விவேகானந்தர் வரையில் பல மகான்கள் வியாக்யானம் செய்து விளக்கிக் கூற முயன்றிருக்கிறார்கள். அப்படி யிருக்க அந்த அத்வைத விளக்கத்தை ஒரு சிறு நூல் மூலம் செய்வ தென்றால் அது பிரமாதமான காரியந்தானே? உபநிஷதங்களையும், வேதாகமங்களையும், கீதையையும், பிரமாணங்களாகக் கொண்டு ஆசிரியர் இந்நூலில் அத்வைத விளக்கம் செய்திருக்கிறார்.

"கல்கி"

* * * *

............மெய்ப்பொருள் விளக்கம் செய்யும் இவைபோன்ற சிறு புஸ்தகங்கள் இந்நாட்டிற்கு இக்காலத்தில் மிக அவசியமாகும். பாமரஜனங்களுக்கு நயத்தாலும் பயத்தாலும் தெய்வ நம்பிக்கை யுண்டுபண்ணி, அந்த தெய்வத்தை வெளியில் தேடுவதில் பிரயோஜனமில்லை யென்பதை, தன்னைத் தானே சோதிக்கச்செய்து தன்னுடைய தேகம், மனம், புத்தி, இந்திரியங்கள், தானாகவிருக்க முடியாதென்பதை விளக்கிக் காட்டி, ஆத்மாவே தான் என்பதை நிரூபித்து, அந்த ஆத்மாதான் அந்தர்யாமி யென்றும் கடலின்றி அலையில்லாதது போல் அந்தர்யாமியின்றி உலகத்தோற்ற மில்லை யென்றும் விளங்கவைப்பதே உபநிஷத்துக்களின் நோக்கம் என்பதை ஆசிரியர் நன்றாய் விளக்கியிருக்கிறார். கடோபநிஷத்துக்கும், நசிகேதஸ் உபாக்யானத்துக்கும் யோகசாஸ்திர தத்வரீதியாய் விளக்கம் தருகிறார்.

"தினமணி"

CONNEMARA PUBLIC LIBRARY
17 JUN 1956
MADRAS



ரிடயர்டு, போஸ்ட்மாஸ்டர்

K. கோபாலகிருஷ்ணையர், மதுரை.

CONNEMARA PUBLIC LIBRARY
17 JUN 1956
MADRAS

முன்னுரை.

அத்வைத விளக்கம் 5-ம் பாகமாகிய இந் நூலில் ராமாயணத்தை ஞானயோகமாக விளக்கப்பட்டிருக்கிறது. முந்தின 4 பாகங்களிலும் பாகவதத்தை பக்தியோக மாகவும், மகாபாரதத்தைக் கர்மயோகமாகவும், விவரிக்கப் பட்டது.

இதிஹாச புராணங்கள் இந்தியா தேசத்துப் பூர்வீக சரித்திர சம்பந்தப்பட்டவைகளல்ல; வேத வேதாந்தங் களின் மெய்ப்பொருளை கதாரூபமாய் பாமரர்களும் அறிந் துய்யுமாறு அநாதிகாலம் தொட்டு பரம்பரையாய் ஜாதி, மத, பேதமில்லாமல் உலகிலுள்ள சகல ஜனங்களுக்கும் முன்னோர்களால் காப்பாற்றி வைக்கப்பட்ட ஆத்மீக பொக்கிஷமேயாகும்.

ஜம்பூத்வீபம், பாரதவர்ஷம், பரதக்கண்டம் என்பவை களின் தத்வங்களைத் தெரிந்து, ஜாதிச் செருக்கையும், மதாபிமானத்தையும், பிற தேசத்வேஷத்தையும் அறவே நீக்கி, உலக மக்கள் யாவரும் பிர்ம்மஸ்வ ரூபந்தானென்ற நிச்சயபுத்தியை, நம் தேசத்து இளைஞர்கள் (Younger educated generation) உணரவேண்டுமென்ற பேரவா வால் தூண்டப்பட்டு இந்நூல்களை இயற்றலானேன்.

முதல் நான்கு பாகங்களுக்கும் விமர்சனமளித்த பல பத்திரிகாசிரியர்களுக்கும், ஊக்கமளித்த Sir. C. P. ராமசாமி அய்யர், மதுரைக் கல்லூரித் தலைவர்களான P. மகாதேவன், K. சுப்பிரமணியம், இவர்களுக்கும், எனது நன்றி உரித்தாகும்.

இப் புஸ்தகங்களை இலவசமாய் அச்சிட்டுக் கொடுத்துதவிய C. M. V. பிரஸ் புரோப்ரைட்டர், ஸ்ரீமான் C. M. V. கிருஷ்ணமாச்சாரியவர்களை எக்காலத்தும் மறக்க முடியாது.

என்னை மதித்து முன்னூல்களுக்கு மதிப்புரை எழுதி அனுப்பின ரிஷிகேசம் மஹா சந்நிதானம் சிவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் பொற்பாத கமலங்களை நமஸ்கரித்து அவர்களின் ஆசியைக்கோறும்,

K. கோபாலகிருஷ்ணன்
21, கீழ அனுமந்தராயன் கோவில் தெரு,
மதுரை.

CONNEMARA PUBLIC LIBRARY
17 JUN 1956
MADRAS

உ

ஓம் தத் ஸத்.

முகவுரை.

'ஓம்' என்ற அக்ஷரமே பரப்பிர்ம்மத்தைக் குறிக்கும் வாக்கு. காயத்ரி மந்திரமே அதை வர்ணிக்கும் வாசகம். காயத்ரியை வேதமாதாவாகவும், பிர்ம்மாவின் சக்தியாகவும் சாஸ்திரம் கூறுகிறது.

இராமாயணம் காயத்ரி ஸ்வரூபமென்று வர்ணிக்கப் பட்டிருக்கிறது. காயத்ரி இருபத்திநான்கு அக்ஷரங்களை யுடைய மந்திரம். இந்த மந்திரத்தை இதிஹாசமாக ஒரு தேவதையாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இராமாயணம் 24000 ஸ்லோகங்களையுடையது. காயத்ரி மந்திரத்தின் 24 அக்ஷரங்களும் 24000 ஸ்லோகங்களின் ஒவ்வொரு ஆயிரத் தின் முதல் அக்ஷரமாக வரிசைக்கிரமமாக அமைக்கப்பட் டிருக்கிறது. அப்படி ஏற்பட்ட 24 ஸ்லோகங்களும் காயத்ரி இராமாயணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அத்வைத விளக்கம் 4-ம் பாகத்தில் விவரிக்கப்பட்ட மஹாபாரதத்தைப்போல, இராமாயணம் ஓர் இதிஹாச மாகும். தத்வஞான விஷயத்தைக் கதாரூபமாக வர்ணித் துச்சொல்வதே இதிஹாசமாகும். கதையில் காணப்படும் ஸ்திரீ, புருஷர் முதலானவர்கள் கல்பனையேயாம்.

"இதிஹாச புராணப்யாம் வேதம்
சமுப ப்ரம்மயேத்"

இதிஹாசம், புராணம் இவையிரண்டுகளையுங்கொண்டு வேதத்தை வியாக்யானம் செய்து வேத விஷயங்களை யறிந்துகொள்ள வேண்டியது. கதைகளாகச் சொல்லி யிருப்பதற்கெல்லாம் வேத சம்பந்தமான அர்த்தம் தெரிந்து கொள்ளாவிடில் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இந்தக் கதைகள் நான்கு வர்ணத்தார்களுக்கும் சொந்தமானது. அத்வைத விளக்கம் 4-ம் பாகத்தில் நான்கு வர்ணங்களின் தத்வங்கள் விளக்கப் பட்டிருக்கின்றன.

மேற்கண்ட நான்கு வர்ணத்தாரும் இந்துக்களாவார்கள். திருக்குறளில் திருவள்ளுவர் இந்துக்களையே அந்தணரென்கிறார்.

> " அந்தணரேன்போர் அறவோர் மற்றேவுயிர்க்கும்,
> சேந்தண்மை பூண்டோழுகலால்"

மனுதர்ம சாஸ்திரத்தில் நான்கு வர்ணத்தாருக்கும் அஹிம்சா தர்மம் முக்கியமாக விதிக்கப்பட்டிருக்கிறது.

" அஹிம்சா பரமோதர்ம:" என்பது பொதுவிதி.

" ஹிம்சாயாம் தூயதே யஸ்மாத் ஹிந்து ருத்யபிதீயதே"

என்று சாஸ்திர வாக்கியம். அதாவது துன்பம் என்ற சொல்லைக் கேட்டவுடனே மனம் துடிப்பவனே ஹிந்துவாகிறான்.

ஆகையால் இந்துவானவன் ஒரு குறிப்பிட்ட தேசத்தவனல்லன். இந்தியாவில் பிறந்தவனெல்லாம் இந்துவாக

மாட்டான். அஹிம்சா தர்மத்தைக் கைக்கொண்டவன் எந்த தேசத்தானாயினும் ஹிந்துவாவான்.

இந்துமதத் தர்மம் இருவகைத்து. ஒன்று சாமான்யம்; மற்றது விசேஷம். பிராணிவதை செய்யா திருத்தலே சாமான்ய தர்மமாகும். விசேஷ மென்பது பிர்மம் சத்தியமென்றும், ஜகத்து பொய்த் தோற்றமென் றும் உணர்ந்து ஆத்ம சிந்தையோடு இருத்தலேயாம். இவ் விசேஷ தர்மத்தைக் கைக்கொண்டவர்களே பிர்மஞானிக ளாகிறார்கள்.

சாமான்ய தர்மத்தைக் கையாளுபவர்களை இருவகை யாகப் பிரிக்கலாம். இவர்களே ஆரியரும், திராவிடரு மாவார்கள். ஆரியர்களை வடநாட்டுப் பிராமணர்களென்றும் திராவிடர்களைத் தென்னாட்டுத் தமிழரென்றும் கூறுவதற்கு யாதொரு ஆதாரமும் கிடையாது. அப்படிச் சொல்வதில் அர்த்தமுமில்லை. தமிழர்களில் பிரமாணரில்லை யென்பதும், தென்னாட்டில் ஆரியர்களில்லை யென்பதும், சாஸ்திரமும், சரித்திரமும் அறியாதார் கூற்றேயாகும்.

திருக்குறளில், புலால் மறுத்தல், கொல்லாமை, இன்னா செய்யாமை, என்ற மூன்று அதிகாரங்களில் சொல் லியபடி நடப்பவனே இந்து தர்மத்தைக் கைக்கொண்டவனா வான். ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, புறங் கூறாமை, பயனில் சொல்லாமை, முதலிய உத்தம நெறி களைக் கடைப்பிடித்தவன் ஆரியனாவான். அன்புடைமை, இனியவை கூறல், அருளுடைமை ஆகிய நற்குணங்களை

யுடையவன் திராவிடனுவான். யோக்கியமான ஒழுக்கத்தை யுடையவனே ஆரியனென்றும், கடவுள் பக்தியும் ஜீவ காருண்யமு முள்ளவனே திராவிடனென்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன் கணீர் பூசறறும்' என்ற குறளுக்கிணங்க பக்தியினுலும், அன்பினுலும் மனங் கசிந்துருகி கண்ணீர் பெருக்குகிறவனே திராவிடனுவான்.

செய்யா மொழியாகிய வேதமும், பொய்யா மொழி யாகிய குறளும் அகில உலகிற்கும் பொதுவான பரந்த தத்வங்களை யுடயவை. தேகாபிமானமும், பாஷாபிமான மும், மதாபிமானமும், தேசாபிமானமும் குறுகிய சுயநல மனப்பான்மையைக் காட்டுகின்றன. சகல ஜீவப்பிராணி களின் தேஹங்களும் பஞ்ச பூதாம்சங்கங்கள் தாமென்றும், பாஷைகள் வாக்கின் வேறுபாடுகள் தாமென்றும், விஷய வெறுப்பும் ஆத்மசிந்தனையுமே மதங்களின் கருத்தென்றும், மண்ணிலும், விண்ணிலும், நீரிலும், வித்தியாசமில்லை யென்றும் அவைகள் சகல ஜீவராசிகளுக்கும் பொதுவான இருப்பிடமென்றும் ஒவ்வொருவரும் உணரவேண்டும். அவ்வுணர்ச்சி யுண்டானுல் ராமராஜ்யம் நடைபெறும்.

தரையில் நடந்தால் கல்லும், முள்ளும், காலில் தைக்கிற தென்று பூமி முழுதும் ரப்பரினுலும் தோலி னுலும் விரிப்பு செய்து பரப்புவது அசாத்தியமாகும். ஆனுல் தனித்தனி மனிதன் தன் காலுக்குத் தகுந்த

செருப்பை வாங்கி உபயோகித்துக் கொண்டால் போது மானது. உலகில் ராமராஜியத்தை ஒருவன் நிலைக்கச் செய்யத் துணிவது இழுக்காம். ஆனால் தனிப்பட்ட மனிதன் தன் தேஹத்தை அயோத்தியாகவும், அந்தராத்மாவை ராமனாகவும் பாவிக்க முடியும். இதற்கு உபாயந்தான் இராமாயண சாஸ்திரத்தால் விளக்கப்படு கிறது.

ஞானவாசிஷ்டத்தில் வால்மீகி கதா உபாயம் மோக்ஷ உபாயமென இரண்டுவித இராமாயணங்களைச் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. லவ, குசர்களால் ராமன் சன்னதி யில் அஸ்வமேதயாகசாலையில் கானம் செய்யப்பட்டதாகக் கல்பிக்கப்பட்ட 24000 ஸ்லோகங்களை யுடையது வால்மீகி ராமாயணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வசிஷ்டர் ராமனுக்கு உபதேசித்ததாகக் கல்பிக்கப்பட்ட நூல் மகா ராமாயணம் அல்லது ஞானவாசிஷ்ட மென்று சொல்லப் பட்டிருக்கிறது. வால்மீகியால் செய்யப்பட்டதை வசிஷ்டர் ராமனுக்கு உபதேசித்தாரா? அல்லது வசிஷ்டர் உபதேசித்ததை வால்மீகி செய்தாரா? என்பதற்குச் சரியான பதில் சொல்ல முடியாது.

பாரதயுத்தத்தில் இரு சைநியங்களும் யுத்த சந்நத்தரா யிருக்கும்போது கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் பகவத்கீதா உபதேசம் செய்ததாகக் கல்பிக்கப்பட்டது போல, ராமா யணத்தில் விஸ்வாமித்திரர் யாகத்துக்கு ராமலெக்ஷ்மணர் களை அவசரமாய்க் கூட்டிக்கொண்டுபோக வந்திருக்கும் சமயத்தில் வசிஷ்டர் ராமனுக்கு ஞானவாசிஷ்டம் உபதே சித்ததாகக் கல்பனை.

பகவத்கீதையில் 18 அத்தியாயங்களிலுள்ள கர்ம யோக சாஸ்திரத்தை பாரதத்தின் 18-நாள் யுத்தமாக இதிஹாசமாய் வர்ணிக்கப்பட்டதென்று தெரிந்துகொள்வதுபோல, வாசிஷ்டத்தில் சொல்லப்பட்ட ஏழு ஞான பூமிகளின் தத்துவங்களை, ராமாயணத்தில் ஏழு காண்டங்களில் சரித்திரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். வால்மீகி ராமாயணத்தைக் கதா உபாயமென்றே சொல்லுகிறார். வாசிஷ்டத்தில் பாலன் கதையைப் படித்துணர்ந்தால் உண்மை விளங்கும்.

அஸ்வமேத யாகசாலையில் லவ, குசர்கள் இராமாயண கானம் செய்யும்போது, ஸ்ரீ ராமர் அவர்களைப் பார்த்து "இந்தக் காவியமானது எவ்வளவு பிரமாண முடையது? இதற்கு மூலம் எது? இதை உங்களுக்கு உபதேசம் செய்த குரு எங்கேயிருக்கிறார்?" என்று கேட்டதாகவும் அவர்கள் ஸ்ரீ ராமரைப் பார்த்து, "இந்த தங்களது சரித்திரத்தை உபதேசித்த வால்மீகி பகவான் யாக பூமியில் வந்திருக்கிறார். இது 24000 ஸ்லோகங்களுடையது. ஏழு காண்டங்களை யுடையது. இந்த உலகமுள்ளவரை இந்த சரித்திரம் விளங்கும். நாங்கள் கானம் செய்யும் இந்த காவியத்தை ஸ்ரவணம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று பதில் சொன்னதாகவும் பொருளுள்ள ஸ்லோகங்கள் ஏற்கனவே வால்மீகியால் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிற 24000 ஸ்லோகங்களுக்குள் சேர்ந்திருக்கின்றன. லவ, குசர்களால் கானம் செய்யப்பட்டதை வால்மீகி பின்பு செய்தாரோ என்ற சந்தேகத்தை யுண்டாக்குகிறது.

அப்படியானுல் ஏற்கனவே 24000 ஸ்லோகங்களையும் லவ, குசர்கள் வால்மீகியிடம் கற்றிருக்க முடியாது. ஆகையால் ராமாயணத்தை வேதத்தைப் போல் அமானுஷேயம் அல்லது மனிதனுல் செய்யப்படாத தென்று தெரிந்து கொண்டாலன்றி உண்மை விளங்காது. இது எப்படி உண்டாயிற்றென்று சொல்ல முடியாத மாயையால் கல்பிக்கப்பட்ட வேத துல்யமானது. கதாபாத்திரங்களைப் போலவே வால்மீகி யென்ற கர்த்தாவும் கல்பிதம். ராமாயணத்தை ஞான யோக சாஸ்திரமாகவும், வால்மீகியை யோகாப்யாச முறையாகவும் தெரிந்துகொள்ளவேண்டும்.

உபநிஷத்துகள் வேதத்தின் ஞான காண்டத்தைச் சேர்ந்தவை. ராமாயணம் ஞானயோக சாஸ்திரமாகையால் உபநிஷத்தில் சம்பந்தப்பட்ட தாகும். ராமாயணத்தில் சம்பந்தப்பட்ட முக்கியமான சில ரிஷிகளின் உற்பத்தியைப் பற்றி வஜ்ரசூசிகா உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது:- ரிஸ்யஸ்ருங்கர் மான் வயிற்றிலும், கௌசிகர் தர்ப்பைப் புல்லிலும், வால்மீகி கரையான் புத்திலும் கௌதமர் முயலின் முதுகிலும், அகஸ்தியர் கும்பத்திலும், வசிஷ்டர் தேவதாசியிடத்தும் உண்டானுர்கள் என்று வர்ணனை. இந்த அமானுஷ்யமான கல்பனு புருஷர்களை மண்ணுலக சம்பந்தப்பட்டவர்களென்று எப்படிச் சொல்ல முடியும். மேலும் கதாநாயகனுன இராமனுக்கும், கதாநாயகியான சீதைக்கும் தனித்தனி உபநிஷத்துகளிருக்கின்றன. முக்திகோபனிஷத்தில் கண்ட விஷயங்களை ஸ்ரீ ராமன் ஹனுமாருக்கு உபதேசம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பாகவதம் 5-வது ஸ்கந்தம் 19-வது அத்தியாயத்தில் ஸ்ரீ ராமர் இப்பொழுதும் கிம்புருஷ வர்ஷத்தில் ப்ரசன்னராயிருக்கிறு ரென்றும், ஹனுமார் அவரை உபாசித்துக் கொண்டிருக்கிறு ரென்றும் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. ஜம்பூத்வீபத்தில் ஒன்பது வர்ஷங்கள் அடங்கியிருக்கின்றன. அவையாவன:—இளாவிருதம், ரம்யகம், ஹிரண்மயம், குரு, ஹரி, கிம்புருஷம், பாரத, கெதுமாலம், பத்ராஸ்வம், என்பவையாம். இந்த வர்ஷங்கள் மண் பூமி சம்பந்தப் பட்டவை யல்ல. பாரத வர்ஷத்தின் தத்வார்த்தத்தை அத்வைத விளக்கம் 4-ம் பாகத்தில் விவரித்திருக்கிறது. பாரத வர்ஷத்தை இந்தியா தேசமென்று சொல்லுகிறவர்கள், மற்றய எட்டு வர்ஷங்களையும் எந்த தேசங்களாகச் சொல்லுவார்களோ தெரியவில்லை. வால்மீகி இராமாயணம் உத்தரகாண்டம் 87, 88-வது சர்க்கங்களில் கிம்புருஷ உற்பத்தியைப்பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இல மகாராஜன் ஸ்திரீரூபத்தையடைந்த விபரமும், கடவுள் கிருபையால் மாதாமாதம் ரூபம் மாறின விஷயமும், கடைசியில் அஸ்வமேதயாக பலத்தால் ஸ்திரமாய் புருஷ ரூபத்தைப் பெற்ற கதையும் பாகவத புராணத்திலும், ராமாயணத்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

கிம்புருஷன் என்றால் 'ஆத்மாவாகிய புருஷன் யார்?' என்று விசாரிக்கும் புத்தியேயாம். மனது உலகநாட்டத்திலிருக்கும் வரை இந்த விசாரணை ஏற்படுகிறதில்லை. மனதாகிய குதிரையை யடக்கியாளக் கூடிய சக்தி வெளியில் இல்லை. ஆத்ம ஞானத்தால் தான் அது அடங்கும் என்ற உண்மையை வெளியிடுவதற்காகவே அஸ்வமேத யாகம்

என்ற வர்ணனை பிரஹதாரணிய உபநிஷதத் துடக்கத்தில் விளங்குகிறது. இதிஹாசமாக மனதைக் குதிரையாகவும் வெளிநாட்டத்தை உலகமாகவும், ஞானத்தை யாக அக்கினி யாகவும் உருவகப் படுத்தியிருக்கிறது. அஸ்வம் என்றால் நிலைத்திராத மன தென்றும், மேதஸ் என்றால் சங்கல்ப மாகிய கொழுப்பென்றும், யாகமென்றால் சங்கல்பமாகிய கொழுப்பை ஞானாக்னியில் ஹோமம் செய்வதென்றும் கருத்து. மஹாபாரதத்தில் சிகண்டியை ஆணும், பெண்ணு மல்லாத அலியென்றும், அசங்கல்பம் என்ற த்வஜம் அல்லது கொடியைத் தாங்கினவ னென்றும் வர்ணித்திருப்பதின் தத்வத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டும். மனம் நசித்தாலொழிய பேதபுத்தி ஒழியாது. பேதபுத்தி மாறினா லன்றி ஆத்மாவாகிய புருஷனைத் தெரிந்து கொள்ள முடியாது.

ஆத்மாவாகிய புருஷன் யாரென்று வால்மீகிரிஷி கேட்டதாகவும் நாரதர் பதிலளித்ததாகவும் கல்பிக்கப்பட்ட நூல் ராமாயணமாகும். இதர ஞான நூல்களைப் போலவே ராமாயணமும் குருசிஷ்ய சம்வாதம் போலவே ஆரம்பித் திருக்கிறது. குருவினுடைய பெயரும், சிஷ்யனுடைய பெயரும் கல்பனைகளே. நாரம் என்றால் தத்வஞானம். நாரதர் என்றால் தத்வஞானத்தைக் கொடுக்கிறவர். வால்மீகி என்றால் வால்மீகம் என்ற மண் புத்திலிருந்து வெளிவந்தவர்—மண்ணாசை அல்லது உலகப்பற்றற்றவர் என்று பொருள். ராமாயணத்தைச் சொல்லவும் கேட்கவும் அதிகாரிகளின் லக்ஷணம் நாரதர் வால்மீகி என்ற சொற் களால் விளங்குகிறது.

பாரத வர்ஷமாகிய மஹா பாரதத்தைச் சொல்லவும் கேட்கவும் அதிகாரிகள் கர்ம யோகிகள். ஆனல் கிம்புருஷ வர்ஷமாகிய ராமாயணத்தைச் சொல்லவும் கேட்கவும் அதிகாரிகள் ஞானயோகிகளாவார்கள். சொல்லுகிறவர்களை ஞானயோகீஸ்வரராகவும் கேட்கிறவர்களை யோகாப்யாசிகளாகவும் கருத வேண்டும். இவர்களே கிம்புருஷவர்ஷ வாசிகளாவார்கள். ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியமே ஞானயோகமாகும். பரமாத்மாவை சூரியனுக உருவகப் படுத்தியிருப்பதால் தசரதர் முதலானவர்களை சூரிய வம்சத்தரசர்களென்று இதிஹாசமாகக் கூறப்பட்டிருக்கிறது.

பாலர்களான ராஜ குமாரர்களுக்குப் பஞ்சதந்திரக் கதைகள் மூலம் அரசாங்க ஞானத்தைப் போதித்தது போல, மந்தாதிகாரிகளுக்கு வேதாந்த ஞானத்தைப் போதிப்பதற்காகவே இதிஹாச புராணங்கள் அநாதியாகவே ஏற்பட்டிருக்கின்றன. கதைகளின் கருத்துரையைக் கவனித்துக் கதை கல்பனையென்று தெரிந்துகொண்ட ராஜ குமாரர்களைப் போல இதிஹாச புராணங்களின் தத்வத்தை யுணர்ந்து கதாபாகத்தைக் கல்பனை யென்றறியவேண்டும்.

பாகவதத்தில் வர்ணிக்கப்பட்ட அனேக உபாக்யானங்களுள், ராமாயணமும் அடங்கியிருக்கிறது. 12-வது ஸ்கந்தத்தில் சுகர் பரீக்ஷித்திடம் சொல்லுகிருர் :-

" மேலே சொல்லப்பட்ட கதைகளைக் கேட்டு விஷயங்களில் வைராக்கியத்தை யடைந்து ஞானத்தை சம்பாதிக்க

வேண்டும். விஷயங்களில் வைராக்கிய முண்டாக்குவதற் காகவே முந்திய அரசர்களுடைய கதைகள் நிர்மாணிக்கப் பட்டன. அவைகள் பாரமார்த்திகமல்ல.''

ராமாயணம் நூறுகோடி ஸ்லோகங்களை யுடையது என்று ஆனந்த ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. வால்மீகியே இந்த நூறுகோடி ஸ்லோகங்களையும் செய்தா ரென்றும் தேவர்களும், அசுரர்களும், ரிஷிகளும் அதைத் தங்கள் தங்கள் லோகங்களுக்குக் கொண்டுபோக முயற்சித் தார்களென்றும், விஷ்ணுவின் மத்யஸ்தத்தின் பேரில் அதை மூன்ருய்ப் பிரித்து ஒவ்வொருவரும் 33,33,33,333 ஸ்லோகங்களையும் 10 அக்ஷரங்களையும் எடுத்துக்கொண்ட பின் இரண்டு அக்ஷரங்கள் மிஞ்சிற்றென்றும் வர்ணிக்கப் பட்டிருக்கிறது; அவைகள் தாம் ரா, ம என்ற எழுத்துக் கள். இவைகளை சிவன் எடுத்துக் கொண்டார். ரிஷிகளால் பெறப்பட்ட பாகத்தை கருடன் பூமிக்குக் கொண்டு வந்தார். அது ஏழு பங்காக்கப்பட்டு ஏழுத்வீபங்களுக்கும் கொடுக்கப்பட்டது. அதில் நான்கு ஸ்லோகங்கள் மிஞ்சின. இதை பிர்மா நாரதருக்குபதேசித்தார். நாரதரால் அது வியாசருக்குச் சொல்லப்பட்டது. வியாசர் அதை விஸ்தரித்து பாகவத புராணத்தைச் செய்தார். நாரதரும் அதையே வால்மீகிக்கு உபதேசம் செய்தார். வால்மீகி அதையே 24000 ஸ்லோகங்களால் சோக ராமாயணத்தை யுண்டாக்கினர். ஜம்பூத்வீபத்துக்குக் கிடைத்த பாகத்தை ஒன்பது பங்காக்கி ஒரு பாகம் பாரத வர்ஷத்துக்குக் கிடைத்த தென்றும், மஹாபாரதமும் 18 புராணங்களும் அந்த ஒரு பாகத்தைச் சேர்ந்த தென்றும் சிவனல்

பார்வதிக்கு உபதேசிக்கப் பட்டதாகச் சொல்லப் பட்டதும் வால்மீகியால் செய்யப்பட்டதுமான ஆனந்த ராமாயாணத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

சிவனால் பார்வதிக்கு உபதேசிக்கப் பட்டதை வால்மீகி உண்டாக்கினாரா, வால்மீகியால் செய்யப்பட்டதை சிவன் பார்வதிக்கு உபதேசித்தாரா வென்ற கேள்விக்குப் பதில் தேவை. இதற்குப் பதில் சொல்லுகிறவர்கள் சிவனுக்குக் காலத்தையும் ரூபத்தையும் கல்பிக்க வேண்டும். சிவன் சம்பந்தப் பட்டிருப்பதால் ஒரு சாரார் ஆனந்த ராமாயணத்தை ஒரு ஞான நூலாக ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். விஷ்ணுவே ராமனாயவதரித்தா ரென்றும் சொல்லப்படுகிறதினால் ஒரு சாரார் ராமாயணத்தையே ஒரு சாஸ்திரமாக ஒப்புக் கொள்ளுகிறார்களில்லை. சச்சிதானந்தமான ஞான ஸ்வரூபத்தையே திரிமூர்த்திகளாக உருவகப்படுத்தி யிருக்கிற தென்பதை யுணராதவர்கள் நாம, ரூப ப்ரமையால் மயங்கி ஞான நூல்களையும் வெறுக்கிறார்கள்.

சதகோடி ராமாயண ஸ்லோகங்களையும் கொண்டு போன தேவர்களும், அசுரர்களும் ரிஷிகளும் எங்கே இருக்கிறார்கள்; அவைகளை எப்படி உபயோகிக்கிறார்கள்; என்று விசாரிப்பவர்களைக் காண்பதரிதா யிருக்கிறது. தேவர்களை இந்திரியங்களாகவும், அசுரர்களைப் பிராணங்களாகவும், ரிஷிகளை பூதங்களாகவும், சாஸ்திரங்களில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் எல்லோரும் ஆகாயத்தில் தனித்தனி லோகங்களில்

மறைந்து வசிக்கிறார்களென்று நினைப்பதற்கிடமில்லை. இந்திரியங்களால் கிரகிக்க வேண்டிய சங்கீத சாஸ்திரம் சில்பசாஸ்திரம், பாகசாஸ்திரம், காமசாஸ்திரம், முதலியவைகளும், பிராணனைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய ஆயுர்வேத சாஸ்திரமும், மண் பூமியைப் பற்றிய பூகோள சாஸ்திரமும், சாஸ்திர பூமியைப் பற்றிய வேத வேதாந்த சாஸ்திரங்களும், சதகோடி ராமாயணத்தில் சேர்ந்தவை தானென்றறிய வேண்டும். இதை யுத்தேசித்துத்தான் சகல சாஸ்திரங்களுக்கும் ராமாயணம் ஆதாரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வியாசரால் செய்யப்பட்டதான பிரஹத்தர்ம புராணத்தில் :—

மஹாபாரதம் நரநாராயணர்களாய் வர்ணிக்கப்பட்ட ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும் வர்ணிக்கிறதென்றும் ராமாயணம் ராமனென பரமாத்மாவை மட்டுந்தான் வர்ணிக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனந்த ராமாயணத்தில் அநேக ராமாயணங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவைகளாவன :— யோக வாசிஷ்டம், அத்யாத்மம், அனுமத், நாரத, லெகு, பிரஹத், அகஸ்த்ய, சார, தேஹ, விருத்த, பிர்ம, பாரத்வாஜ, சிவ, க்ரௌஞ்ச, பரத, ஜெய்ம்னி, ஆத்மதர்ம, ஸ்வேதகேது, ஜடாயு, ரவி, புலஸ்திய, தேவி, குஹ்யக, மங்கள, காதிஜ, சுதீட்சிண, சுக்ரீவ, விபீஷண, ஆனந்த முதலியன. வால்மீகியே இத்தனைக்கும் கர்த்தா வென்றும் சொல்லப்

பட்டிருக்கிறது. ஆகையால் ராமாயணம் என்ற பெயர் கொண்ட ஒவ்வொரு நூலும் ஞானயோகத்தையே பலவித மாக வர்ணிக்கிறதென்றே அறிதல் வேண்டும்.

வால்மீகி ராமாயணம் என்று வழங்கிவரும் நூலுக்கு சோகராமாயணமென்றும் பெயர். பாகவதம் ரதிராமாயண மென்றும் மஹாபாரதம் யுத்தராமாயண மென்றும் சொல்லப்படுகிறது. சதகோடி என்றால் வஜ்ராயுதம் என்று பொருளிருக்கிறது. வஜ்ராயுதம் அழிவில்லாமல் என்று மிருக்கும் என்பது போல சத கோடி ராமாயணம் என்றும் அழிவில்லாமலிருக்கு மென்று கருதவேண்டும்.

ஆனந்த ராமாயணம் ஒன்பது காண்டங்களுள்ளது. அதில் 109 சர்க்கங்களும் 12252 ஸ்லோகங்களு மிருக் கின்றன. விலாச காண்டத்தில் தேஹராமாயணம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதன் சாரம் பின் வருமாறு:-

"சச்சிதானந்த ரூபமாகிய விஷ்ணுவே சமுத்திரம். பூ பாரத்தை நிவர்த்தி செய்யவேண்டு மென்ற விருப்பமே அலை. அதிலிருந்து சிதரும் துளியே ஆத்மா. அயோத்தியே ஹிருதயம். தசரதர் சுத்தமான அந்தக்கரணம். கௌசல்யை சாத்வீக குணம். ராமன் ஆத்மாவின் துரீயா வஸ்தை. லக்ஷ்மணன் ஜாக்ரதாவஸ்தை. பரதன் ஸ்வப்னவஸ்தை. சத்ருக்னன் சுஷுப்தி அவஸ்தை. விஸ்வாமித்திரருடைய யாகத்தைக் காப்பாற்ற அயோத்தியை விட்டு ராமன் போனானென்பது துரீயாத்மா மனதால் இழுக்கப்படுதல். தாடகை சம்ஹாரம் மனதின்

கெட்ட விர்த்தியின் நாசம். சிவதனுசை ராமன் முரித்தது மனோவேக பங்கம். சீதை விவாகம் சுத்தமாயா சம்பந்தம். பரசுராமனை ஜயித்தல் பூர்வ வாசனாக்ஷயம். கைகேயின் தூண்டுதலால் தண்டகாவன ப்ரவேசம் தமோகுணத்தால் சம்சார முண்டாவது. விராதனைக் கொன்றது டம்பநாசம். பஞ்சவடியில் பர்ணகசாலையில் வசித்தல் பஞ்சபூதங் களாலான நிலையற்ற சரீரத்திலிருந்து ஸ்ரமம் தீர்ப்பது. சூர்ப்பனகையின் காது, மூக்குகளை யறுப்பது ஆசையை யடக்குவது. கரன், தூஷணன், திரிசிரஸ் இவர்களின் வதை காமம், க்ரோதம், லோபம் இவைகளை யழித்தல். மாரீசனைக் கொன்றது மோஹ ஒழிவு. சீதையைவிட்டுப் பிரிதல் சுத்த மாயையைவிட்டுப் பிரிதல். சீதையை ராவணன் அபகரிப்பது சுத்தமாயையை அஹங்காரம் கலந்து கொண்டதாகும். கபந்தனைக் கொன்றது துக்க நாசம். ஹனுமானைச் சந்தித்தது பக்தி யுண்டாகுதல். சுக்ரீவனை யண்டினது விவேகத்தையடைவதாம். வாலியைக் கொன்றது அவிவேக நாசம். விபீஷணன் ஸ்நேகம் உத்சாகத்தை யடைதல். சமுத்திரத்தை அணைகட்டுதல் அஞ்ஞானத்தைத் தாண்டும் உபாயம். திரிகூடமலை மேலுள்ள லங்கை முக்குணங்களுள்ள லிங்கசரீரம். கும்ப கர்ணவதம் மமதையை யழித்தல். இந்திரசித்தைக் கொல்வது மாத்சர்யத்தை யடக்குவது. ராவணவதம் அஹங்காரம் ஒழிவு. சீதை அக்னிப்ரவேசம் செய்வது அஹங்கார சம்பந்தத்தாலுண்டாகும் அசுத்தம நீங்கி மாயை சுத்தமாக்குவது. லங்கையைவிட்டுப் பிரிந்தது லிங்க சரீரத்தை விடுதல். மறுபடியும் அயோத்தி நகரத்தை யடைவது ஹிருதயாகாசத்தை யடைதலாம். அவ்விடத்தில்

ராஜ்யபோக அனுபவம் ஆனந்தசுக அனுபவம். சீதையை ஆஸ்ரம சமீபத்தில் விட்டுவிடுதல் மாயையின் பரித்யாகம். மறுபடியும் சீதையை அங்கீகரித்தல் சாத்வீக மாயையின் பரிக்ரஹம். முடிவில் சரயூநதி ப்ரவேசம் ஹிருதயா காசத்தை மஹாகாசத்தில் லயப்படுத்தி சச்சிதானந்த ரூபப்ரவேசமாகும். அதுவே மோக்ஷம்."

ஸ்ரீ ராம ஜெனனத்தை வர்ணிக்கும்போது ஒரு முக்கிய மான விஷயம் கவனிக்கப்பட வேண்டும். சித்திரைமீ, சுக்லபக்ஷம், நவமிதிதி, புனர்வசு நக்ஷத்திரம் கூடிய சுப யோக சுபதினத்தில் ராமர் பிறந்தார் என்று சொல்லப்படு கிறது. பிரபவ முதலான 60 வருஷங்களில் எந்த வருஷத் தில் பிறந்தாரென்று எங்கும் சொல்லப்படவில்லை. ஆனந்த ராமாயணம் மனோஹர காண்டத்தில் விஷ்ணுவினுடைய பத்து அவதாரங்களுக்கும் ஜாதகம் கல்பிக்கப்பட்டிருக் கிறது. ஒரு அவதாரத்துக்காவது வருஷங் கிடையாது. மாசம், பக்ஷம், திதி, நக்ஷத்திரம், லெக்னம் முதலியவை மட்டும் சொல்லப் பட்டிருக்கிறது. உபாசகர்கள் தாங்கள் வழிபடும் மூர்த்திகளுக்கு உத்சவம் கொண்டாடுவதற்காக காலபேதங்கள் கல்பிக்கப் பட்டிருக்கின்றன. நாமரூப மில் லாத பிர்மத்திற்கு உபாசகர்களின் நிமித்தம் நாமமும் ரூபமும் கல்பிக்கப் பட்டிருக்கின்றன வென்று சாஸ்திரம் கூறுகிறது. வேதத்திலும், உபநிஷத்திலும் நிர்க்குணியா யிருப்பதாகச் சொல்லப்பட்ட பிர்மத்தை இதிஹாச புராணங்களில் சகுணமூர்த்தியாக வர்ணிக்கப் பட்டிருப் பதே அவதாரமாகும். உபாசகர்கள் அவதார மூர்த்திகளை அகக் கண்ணால் தங்கள் ஹிருதயத்தில்தான் பார்க்கிறார்

கள். புறக்கண்ணுல் மூர்த்தியின் பிம்பங்களைத்தான் பார்க்கக் கூடும். அத்வைத விளக்கம் முதல் பாகத்தில் அவதாரங்களின் தத்வம் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது.

வசிஷ்டர் தன் பிறப்பைப் பற்றி ஸ்ரீ ராமரிடம் பின் வருமாறு சொன்னதாக வர்ணனை :—

"ஆதியில் பிர்ம்மா ஜீவப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கும் போது வியாதிகளையும் துன்பங்களையும் உண்டு பண்ணினுர். பின்பு அவர்களுடைய கஷ்டத்தைப் பார்த்துப் பரிதபித்து, தபஸ், தானம், சத்யம், தீர்த்தம் முதலியவைகளை உண்டாக்கினுர். இவைகளினுல் துக்க நிவர்த்தி ஏற்படாம லிருந்ததைப் பார்த்து என்னைத் தன் மனதினுல் ஸ்ருஷ்டித் தார். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. உடனே அவர் எனக்கு ஞான உபதேசம் செய்தார். எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன். சாதாரண ஜனங்களுக்கு கர்ம மார்க்கத்தையும், வைராக்கிய மடைந்த முமுக்ஷுக்களுக்கு ஞானமார்க்கத்தையும் உபதேசிக்கும்படி கட்டளை யிட்டார். உலகத்தில் மனுஷ்யர்கள் உள்ள வரையிலும் நானும் இருப்பேன்." இது ஞான அவதரண வரலாறு. வசிஷ்டரை ஞானத்தின் உருவகமென்றே தெரிந்துகொள்ள வேண்டுமே யன்றி உலகத்தில் பிறந்த மனிதனென்று சொல்ல ஆதாரமே யில்லை. சூரியவம்ச ராஜாக்களுக் கெல்லாம் இவர் குரு வென்று சொல்லப்பட்டதின் கருத்து என்ன வென்பது இப்பொழுது விளங்கும். ஞானயோகிகளே சூரியவம்சத் தரசர்களாக வர்ணிக்கப் படுகிருர்கள்.

வால்மீகி தன் பிறப்பைப் பற்றி ஸ்ரீ ராமரிடம் பின் வருமாறு சொல்லுகிறார் :—

“நான் இதற்கு முன் இரண்டு ஜன்ம மெடுத்திருக் கிறேன். இது மூன்றாவது ஜன்மம். முதலாவது பிறப்பில் நான் பிராமணவித்வானா யிருந்தும் தர்மபத்னியை யடைந் திருந்தும், ஒழுக்கங்கெட்டு ஓர் கீழ்ஜாதி ஸ்திரீயுடன் வசித் தேன். இரண்டாவது ஜன்மத்தில் ஒரு வேடனாய்ப் பிறந் திறந்தேன். இந்த மூன்றாவது ஜன்மத்தின் விவரம் பின் வருமாறு:— க்ரது என்ற மகரிஷி உக்கிரமான தபஸ் செய்து முடித்து நிஷ்டைகலைந்தவுடன் அவருடைய கண்ணி லிருந்து ஒரு தேஜஸ் வெளிப்பட்டுக் கீழேவிழ ஒரு சர்ப்பம் அதை விழுங்கிவிட்டது. உடனே அது கர்ப்பம் தரித்துப் பிரசவித்தது. அந்தக் குழந்தையான என்னை வேடர்கள் எடுத்து வளர்த்தார்கள். வயது வந்தவுடன் நான் அவர்கள் ஜாதிப்பெண்ணை மணந்து பல குழந்தைகளுக்குத் தகப்ப னானேன். குடும்ப ரட்சணத்திற்காக வழிப்போக்கர்களை அடித்துப் பறித்துப் பொருள்தேடி வசித்துவந்தேன். ஒரு சமயம் சப்த ரிஷிகளும் என் வழியே வந்தார்கள். அவர் களை யாரென்றறியாத நான் வழிமறித்துத் தாக்க ஆரம்பித் தேன். அவர்கள் என்னை இப்படிப் பாபகரமான வேலையைச் செய்யலாமா வென்று கேட்டார்கள். என் குடும்பத்தைக் காப்பாற்ற இத்தொழிலைக் கைக்கொண்டேன் என்று சொன்னேன். அப்படியானால் உன் மனைவி மக்கள் இந்தப் பாபத்திற்கு உடந்தையாவார்களா வென்று கேட்டார்கள். “ஆம்” என்றேன். அவர்களைக் கேட்டுச் சொல்லு வென்று சொன்னார்கள். நான் அப்படியே போய்க் கேட்டேன்.

அது என் கடமை யென்றும், அவர்களுக்கு யாதொரு பாபமுமில்லை யென்றும் சொன்னூர்கள். உடனே ஓடிவந்து அந்த ரிஷிகளின் காலில் வீழ்ந்து பாபமின்றி வாழ மார்க்கத்தை உபதேசிக்கும்படி வேண்டினேன். அவர்கள் கருணை கூர்ந்து 'மரா' வென்ற மந்திரத்தை உபதேசித்து விட்டுப் போய்விட்டார்கள். அந்த மந்திரத்தை மனனம் செய்து கொண்டேயிருந்து என்னையே மறந்து 1000 யுகங்கள் காலபரியந்தமிருக்க மேலே மண்மூடி புத்துவளர்ந்து விட்டது. மறுபடியும் அதே ரிஷிகள் அந்தப் புத்தண்டை வந்து கூப்பிட்டார்கள். நிஷ்டை கலைந்து வெளிப்பட்டேன். வால்மீகமென்ற புத்திலிருந்து வெளிவந்ததால் என்னை வால்மீகி என்றழைத்தார்கள்."

வால்மீகியின் மூன்று பிறப்புகளையும் சற்று கவனிப்போம்:—

முதலாவது ஜந்மத்தில் பிராமணனுய்ப் பிறந்தும் அன்னியஜாதி ஸ்திரீ சம்பந்த மேற்பட்டிருந்ததால், ஆத்மாவே தானென்றறியாமல் அன்னிய தெய்வமிருப்பதாக நினைத்து பக்திமார்க்கத்தை பின்பற்றினவனுகவும், இரண்டாவது ஜந்மத்தில் வேடனுய் வசித்ததால் காமக்ரோதாதி மிருகங்களை த்யானத்தால் வதைத்து சித்தசுத்தியடைந்த கர்மயோகியாகவும், மூன்றுவது ஜந்மத்தில் ரிஷியினுடைய வீரியத்தையுண்ட பாம்பின் வயிற்றில் பிறந்தவனுபடியால் ஞானயோகியாகவும் (யோகசாஸ்திரத்தில் குண்டலினியை பாம்பாக வர்ணித்திருக்கிறது), கிராதகர்களால் வளர்க்கப் பட்டு கள்ளனுய்க் குடும்ப சம்ரக்ஷணைக்

காக வழிப்பறி செய்து பிழைத்தது பூர்வ வாசனை என்றும், சப்தரிஷிகளின் சந்திப்பு சாது சங்கமென்றும், அவர்களுடைய உபதேசத்தால் விஞ்ஞானமும், தபசால் வாசனு க்ஷயமும் மனோநாசமும் ஏற்பட்டதென்றும், மண்புத்திலிருந்து வெளிவந்ததால் உலகப் பற்றற்றுவிட்டதென்றும், தெரிந்துகொள்ளலாம். பஞ்ச இந்திரியங்கள், மனம், புத்தியாகிய ஏழும் சப்தரிஷிகளென்று சொல்லப் பட்டிருக்கிறது. சப்த ரிஷிகளையும், வால்மீகியையும் மானிடப் பிறவிகள் என்று ரூபிக்க முடியாது.

விஸ்வாமித்திரர் தன் வரலாற்றைப் பின்வருமாறு சொல்லுகிறார் :—

“பிர்ம்மாவினுடைய மானசீக புத்திரன் குசன். அவருடைய குமாரன் குசம்பன். குசம்பனுடைய குமாரன் காதி. நான் காதியினுடைய புத்திரன். குசன் வம்சத்தில் பிறந்ததால் கௌசிகன் என்றும் எனக்குப் பெயர்.”

பிர்ம்மா வென்றால் அந்தர் முகசித்தம். மானசீக புத்திரன் என்பதனால் கல்பனை யென்றறிய வேண்டும். விஸ்வம் என்பது விஷ்ணுவின் பெயர். விஷ்ணு அந்தர் முகசித்த விர்த்தியாகும். விஸ்வாமித்திர னென்றதனால் பிர்ம்மஞானத்தை இச்சிப்பவன் என்று பொருள்.

கௌதமரிஷி :— இவர் சப்தரிஷிகளி லொருவர். வால்மீகிக்கு ‘மரா’ என்ற மந்திரத்தை உபதேசம் செய்த பிறகு 1000 யுகங்கள் கழிந்தபின் வந்து அவருக்கு வால்மீகி என்ற நாமம் கொடுத்தவர்களில் ஒருவர். கடோபனிஷத்

தில் சொல்லியபடி தன் புத்திரனை நசுகேதசை எமனுக்குக் கொடுத்தவர் இவர். பிரஹதாரணிய உபநிஷத்தில் சொல்லியபடி பாஞ்சால தேசத்தரசனுடன் வாதம் செய்த ஸ்வேதகேதுவின் பிதாவும் இவரே தான். ராமனுடைய பாத ஸ்பரிசத்தால் சாப விமோசன மடைந்ததாக வர்ணிக்கப்பட்ட அஹல்யையின் பர்த்தாவுமிவரே.

ராமாயண காலம் வேறு, உபநிஷத்காலம் வேறு என்று வாதிப்பவர்கள், ராமாயணத்தில் ரிஷிசம்பந்த மிருப்பதைக் கவனிக்கவேண்டும்.

அகஸ்தியர் :— இவர் கும்பரிஷியென்று சொல்லப்படு கிறார்- மித்திரன், வருணன் என்ற இருவர்களின் வீரியத்தை ஊர்வசி என்ற தேவதாசி ஒரு கலசத்தில் சேர்த்து வைத்திருந்தாள். அதிலிருந்து ஒருரிஷி உண்டானார். அதனால் அவருக்குக் கும்பரிஷி யென்று பெயர். தேவதாசி யென்றால் தெய்வீக சித்தி யென்று பொருள். ஒரு விலை மாதல்ல. யோக சாஸ்திரத்தில் பிராணனை மித்திரனாகவும், அபானத்தை வருணனாகவும் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. பிராணவாயுவை யுட்கொள்ளுதல் பூரகம், அபானவாயுவை வெளியிடுவது ரேசகம், வாயுவை அடக்குதல் கும்பகம் இது பிராணாயாம விஷயம். பிராணாயாமம் அனேக சித்திகளுக்குக் காரணமாகும். ஞானயோகிகளின் பிராணாயாமம் வேறு. ஜகத்து மித்தை யென்று பாவிப்பது ரேசகம், பிர்மம் சத்திய மென்று பாவிப்பது பூரகம், அஹம் பிர்மாஸ்மி என்ற பாவனை கும்பகம். இப்படி கும்பகப் பிராயணாயாமம் செய்கிறவன் அகஸ்தியனாவான். அகம்

என்ருல் கும்பம் அல்லது கலசம். அதிலிருந்து வந்ததால் அகஸ்தியர் என்று வர்ணனை. அகம் என்ருல் மலை. விந்திய மலையை யமுக்கினதால் அகஸ்தியர் என்று பெயர். விந்திய மலை சூரியமண்டலத்தையே மறைத்ததாயும் அதை அகஸ்தியர் அழுத்தித் தாழ்த்திஞரென்றும் இதிஹாச வர்ணனை. இங்கு சூரியனை ஆத்மாவாகவும், விந்தியமலையை அஞ்ஞானமாகவும் பொருள் கொண்டு கும்பகப் பிராணுயா மத்தால் ஆத்மஞானத்தை யடையலாமென்று தாத்பரியம். அகஸ்தியர் சமுத்திரத்தைப் பானம் செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அஞ்ஞானத்தை சம்சார சாகர மென்கிருேம். சாகரமென்ருல் சமுத்திரம். ஆத்மஞானத் தால் அஞ்ஞானம் நீங்கும் என்று அறிதல் வேண்டும். அகஸ்தியர் இல்வலன், வாதாபி என்ற இரண்டு அசுரர்களைக் கொன்ருரென்று ஒரு இதிஹாச மிருக்கிறது:—

„ இல்வலன் ஒரு பிராமணன் போல் வேஷம் போட்டுக் கொண்டு ஸ்ரார்த்தம் செய்கிறதாகச் சொல்லி ஒரு பிராமணனைக் கூப்பிட்டு மேஷம் (ஆடு) போல் உருவத்தை யெடுத்துக் கொண்ட வாதாபியைக் கொன்று சமைத்து அவருக்குப் பரிமாறுவான். அந்தப் பிராமணன் சாப்பிட்ட வுடன் இல்வலன் "வாதாபீ வெளியே வா" என்று கூப்பிடு வான். உடனே வாதாபி பிராமணனுடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே உயிருடன் வந்து விடுவான். பின்னர் இரு அசுரர்களும் அந்தப் பிராமணனுடைய சரீரத்தைத்தின்று விடுவார்கள். ஒரு நாள் அகஸ்தியர் அந்த அசுரர்களிருக்கு மிடத்திற்கு வந்தார். அவரை ஸ்ரார்த்தப் பிராமணராக வரித்தார்கள். வழக்கம் போல்

பிராமணன் சாப்பிட்டானவுடன் இல்வலன் வாதாபியை வெளியில் வரும்படி கூப்பிட்டான். அகஸ்தியர் வாதாபி ஜீரணமாய் விட்டான் இனி வெளியில் வரமாட்டான். என்று சொன்னர். இல்வலன் அகஸ்தியரைக் கொல்ல முயன்றுன். ஆனல் அகஸ்தியரின் ஞானக்கினி அவனை யெரித்து விட்டது:-

அகஸ்தியரை கட்டைவிரல் ப்ரமாண முள்ள ஒரு ஆளாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவர் ஒரு முழு ஆட்டினுடைய மாமிசத்தை எப்படிப் புஜித்தார்? எவ்விதம் உடனே ஜிரணமாயிற்று? அங்கம் என்றுல் மனது. அங்குஷ்டம் என்றதனல் மனதுக்குள்ளிருப்பது என்று பொருள். வாதாபி என்பது வாதம் அல்லது காற்றை யுட்கொள்ளுதல். இல்வலன் என்றுல் வெளியே தள்ளுவது. கும்பகம் செய்யாமல் மூச்சை யிழுப்பதும் விடுவதும் ஜீவ ஜெந்துக்களின் இயற்கை. சாதாரணமாய் ஒவ்வொருவரும் தினந்தோறும் 21600 தரம் ஸ்வாசம் விடுகிறேம். இதற்கு அதிகமாய்ப் போனல் ஆயுள் குறையும். குறைந்தால் ஆயுள் ஜாஸ்தியாகும். ரிஷிகள் கும்பகம் செய்வதால் நெடுங்காலம் ஜீவிக்கிறுர்கள். ஆடு மேஷ மென்று சொல்லப்படுகிறது. மேஷத்தை பஞ்ச பூதங்களின் ஒன்றுக சொல்லப்பட்டிருக்கிறது (நிருக்தம்). வாதம் அல்லது காற்றை மேஷமாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. ரேசக, பூரகங்களை அசுரர்களாகவும், (மேஷம்) ஆட்டை ஸ்வாசமாகவும், அகஸ்தியரைக்கும்பகப் பிராணுயாமமாகவும் தெரிந்து கொண்டால் மேற்கண்ட இதிஹாசத்தின் மெய்ப்பொருள் விளங்கும். இல்லாவிட்டால் முற்காலத்தில் அசுரர் என்ற ஜாதியார்

இருந்தார்களென்றும் நினைத்த உருவத்தை எடுக்க வல்லவர்கள் என்றும் அவர்கள் நரமாம்சதாரிகளென்றும், பிராமணர்கள் ஸ்ரார்த்தத்தில் ஆட்டு மாமிசத்தை உபயோகப் படுத்தினார்களென்றும் பலரும் நம்புவார்கள். பிராணி வதத்தைக் கண்டிக்கும் இந்து தர்மத்தில் மேற்கண்டபடி ஒரு கொள்கையிருக்க முடியுமா? யோக சாஸ்திரத்தில் மௌனம் மாம்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரார்த்த காலத்தில் பிராமணர்கள் மௌனத்துடன் அதாவது பேச்சில்லாமல் சாப்பிட வேண்டுமென்பது விதி. வாக்கு அல்லது பேச்சை மனசில் அடக்கி மனசை புத்தியில் அடக்குவது சாஸ்திரீயமௌன மாகும். விபரீதமாகப் பொருள் கொண்டதற்குக் காரணம் இதிஹாச புராணங்களின் தத்வார்த்தத்தை யறியாததேயாம்.

ரிஸ்யஸ்ருங்கர் :— இவர் விபண்டு ரிஷியின் குமாரர். பெண்மான் வயிற்றில் பிறந்தவர். தசரதன் புத்திரியும் அங்கதேசத் தரசனால் வளர்க்கப்பட்டவளுமான சாந்தாவை மணந்தார். அவர் சென்றவிட மெல்லாம் மழை பெய்து கொண்டிருக்கும்.

ஸ்ருங்கம் என்றால் காமம். ரிஸ்ய என்றால் அழிவு. ரிஸ்யஸ்ருங்கர் என்றால் பற்றற்றவனென்று பொருள். பெண்மான் மிருகி என்று சொல்லப்படும். மிருகி என்றால் விசாரணை யென்று பொருள். விபண்டு நிச்சய புத்தியைக் குறிக்கும் சொல்லாகும். ஆகையால் நிச்சய புத்தியுடன் ஆத்ம விசாரணை செய்பவனே ரிஸ்யஸ்ருங்கனாவான். அங்கம் என்பது மனசு, சாந்தா என்றால் சஞ்சலமற்ற புத்தி.

இது ஆத்ம விசாரணை செய்பவரின் குணமேயாம். ஆகையால் ரிஸ்யஸ்ருங்கர் சாந்தாவை விவாகம் செய்து கொண்டதாக வர்ணனை. இது ஞானயோக உருவகம். ஞானயோகியினிடம் ஞானம்ருதம் பொழிந்து கொண்டே யிருக்கு மென்பதை ரிஸ்யஸ்ருங்கர் சென்றவிட மெல்லாம் மழை பெய்துகொண்டே யிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஓய்வில்லாமல் மழை பெய்து கொண்டிருந்தால் அங்கு வசிக்க முடியுமா? இந்திரிய நிக்ரஹம் செய்தவனே சாந்தத்தை யடைய முடியுமாதலால் சாந்தா தசரதனின் புத்திரி யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சரபங்கர் :—சரம்=பிராணவாயுவு, பங்கம்=ஒடித்தல், பிராணுயாமம் செய்கிறவன் சரபங்கனுவான். பிராணுயாமம் செய்கிறவனுக்கு ஆத்ம ஞான முண்டாகு மென்பதை விளக்கவே ராமர் அவருடைய ஆஸ்ரமத்துக்கு வந்தா ரென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆத்ம ஞானத்தால் மனிதன் நித்யத்வத்தை யடையலா மென்பதை சூசிப்பிக்க சரபங்கர் குமரனுக மாறினு ரென்று சொல்லப் பட்டிருக்கிறது. ராமன் வரு முன்னே இந்திரன் வந்து சரபங்கரை பிரம்ம லோகத்துக்கு வரும்படி சொன்னதாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

இந்திரன் தேவர்களுக்கு அரசன். சுத்த இந்திரியங்களை தேவர்களாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இந்திரியங்களை யடக்கியாளுகிறவன் இந்திரன். அவைகள் உலக விஷயத்தை நாடினுல் இந்திரன் அவைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லா விடில் அவைகள் அசுரத்தன்

மையை யடையுமன்றி இந்திரன் தன் பதவியை யிழப்பான். ஆகையால் ஒவ்வொருவரும் ஐம்புலங்களையும் அடக்கி இந்திரனாக முயற்சிக்க வேண்டும். பஞ்ச தந்மாத்திரை களான சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமாகியவைகளை பிதுர்க்களாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இவைகள் பரா சக்தியின் காரியங்கள். பிர்ம்ம சக்தியே பராசக்தியாகும். இந்த சக்தியின்றி மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய இந்திரியங்கள் வேலை செய்ய முடியாது. இந்த இந்திரியங் களின் வேலை நின்றால் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், என்ற பூதங்கள் தோன்றா—இந்த பூதங்களை ரிஷிகளாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. தேவர்களையும், ரிஷிகளையும், பிதுர்க்களையும் பரஸ்பரம் தகப்பனும், மகனு மாக சாஸ்திரம் வர்ணிக்கிறது. இவர்களுக்கு பத்னிகளும், புத்திரர்களும், கன்னிகைகளும் கல்பிக்கப் பட்டிருக் கின்றன. அவர்களை சக்திகளாகவும், குணத்தத்வங்களாக வும் தெரிந்து கொள்ளாமல் ஸ்திரீ புருஷர்கள் என்று நினைப்பது தவறு. பிதுர் கன்னிகை யென்றால் என்ன. கன்னிகையாயிறந்து போய் பிதுர் லோக மெனப்படும் ஓர் லோகத்திலிருப்பவளா? அல்லது பிதுர் லோகத்தில் கன்னிகைகள் பிறக்கிறார்களா?

ராவணன் தேவ கன்னிகைகள், பிதுர் கன்னிகைகள், ரிஷி கன்னிகைகளாகியவர்களை, சிறைப்பிடித்தான் என்ற வர்ணனையின் பொருளென்ன? ராவண தத்வத்தை யறிந்து கொண்டாலன்றி ராமாயணத்தின் மெய்ப் பொருள் விளங்காது.

ராக்ஷசர்கள் யார்? மேல் நாட்டார்கள் இயற்றிய நூல்களில், ராக்ஷசர்களை முற்காலத்தில் தென்னிந்தியா விலும், இலங்கைத் தீவிலும் வசித்த நாகரீக மற்ற, நரமாம்ச பக்ஷணிக ளென்று வர்ணித்திருக்கிறார்கள். இவ்வாறு எழுதுவதற்கு ஆதாரம் அவர்களுடைய அறியா மையும், அசூயையுமே யாம். ராமாயணத்தை ஒரு மஹத்தான சாஸ்திர மென்றுணர்ந்து பக்தி விஸ்வாசத் துடன் ஆராய்ந்தாலன்றி தத்வம் விளங்காது.

ராக்ஷசர்கள் நினைத்த உருவத்தை எடுத்துக்கொள்ள வல்லவர்கள், எல்லாரும் ஒரே வயசுடையவர்கள், நித்தியநைமித்திய கர்மாக்களைத் தவறாமல் ஒழுங்காகச் செய்கிறவர்கள், மஹாபலிஷ்டர்கள், சிவபக்தர்கள், தபஸ்விகள், வரப்ரசாதம் பெற்றவர்கள் என்று வர்ணிக்கப் பட்டிருப்பதை பலரும் கவனிக்காமல் உபேட்சை செய் கிறார்கள். தினந்தோறும் ராமாயணம் பாராயணம் செய்யும் ஆஸ்திகர்கள் கூட ராவணனை நிந்திக்கிறார்கள்.

ஒவ்வொரு இந்துவும் வால்மீகி ராமாயணத்தை ஆதி முதல் அந்தம் வரை விடாமல் ஏழு காண்டங்களையும் தானே படித்தறிய வேண்டும். வயிற்றுப் பிழைப்புக்காக பகவத் கதைகளைச் சொல்லுகிறவர்களிட மிருந்து தத்வார்த்தம் அறியமுடியா தென்று பாகவத மகாத்ம்யத்தில் கூறப் பட்டிருக்கிறது.

வால்மீகி ராமாயணம் பால காண்டம் 4-வது சர்க்கம் 30-வது ஸ்லோகத்தில் நாரதர்:—

'விசித்ரார்த்த பதசம்யுக்தம்' என்று ராமாயணத்தைப் பற்றிச் சொல்லுகிறார். சித்திரம் என்றால் சிந்தையாலுண்டான வர்ணிப்பு அல்லது கல்பனை யென்று பொருள். விசித்திர மென்றால் விசேஷ கல்பனையாம். ராமாயணம் விசேஷமான கல்பனையையுடைய பதங்கள் சேர்ந்துண்டானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தை நிருக்தத்தைக் கொண்டு வியாக்கியானம் செய்ய வேண்டுமே யன்றி நிகண்டுவைப்பார்த்தறிதல் உபயோகமாகாதது போல வேத துல்லியமான ராமாயணத்தை வேதாந்த சம்மந்த மில்லாத லௌகிக முறையில் கவனித்து சாதாரண தர்மங்களை மட்டும் தெரிந்துகொண்டு, விசேஷ தர்மங்களை அனாதரவு செய்யக்கூடாது.

ஆதி சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் பிர்ம்ம நாமாவளியில் பிர்ம்மத்தை ஆத்மா ராமனென்றும், ஆத்ம போதத்தில் ராமனை ஆத்மாவாகவும், சீதையை சாந்தமாகவும் வர்ணிக்கிறார்கள். நாரதர் வால்மீகிக்கு பால காண்டத்தைச் சொல்லும்போது இக்ஷ்வாகு வம்சத்தவரான ராமனைப் பற்றி ஜனங்கள் கேள்விப்படக் கூடும் என்று சொல்லுகிறாரே யொழிய பார்க்கக்கூடு மென்று சொல்ல வில்லை. ராம சரித்திரத்தைக் கேட்கலாமே யொழிய ராமனை யாரும் பார்க்கமுடியாது என்று பொருளாகிறது. பிர்ம்மமே ராமனானபடியால் மனசுக்கும் வாக்குக்கு மெட்டாத பொருளை ஜனங்கள் கண்டார்களென்று சொல்லக் கூடாது என அறிதல் வேண்டும். (பாலகாண்டம் முதல் சர்க்கம் 8-வது ஸ்லோகம்).

ராவணன் முதலிய ராக்ஷசர்களின் வரலாற்றை அகஸ்தியர் ராமனுக்குச் சொன்னதாக உத்தர காண்டத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது பின் வருமாறு:—

"பூர்வத்தில் பிர்ம்மா மனுஷ்யர்களையும், (ஆப:) ஜலங்களையும் ஸ்ருஷ்டித்தார். சிலர் பசிக்கிறதென்று சொல்லி ஜலங்களைக் குடித்து விட்டார்கள். சிலர் அவைகளை ரக்ஷித்தார்கள். ரக்ஷித்தவர்களை ராக்ஷசர்களென்றும், பக்ஷித்தவர்களை யக்ஷர்களென்றும், பிர்ம்மா கூப்பிட்டார்."

மேற் கண்டவர்ணனையில் ஜலங்கள் என்ற பொருளுள்ள 'ஆப:' என்பதை ரக்ஷிப்பதெப்படி. ராமாயண வியாக்கியானங்கள் பலவற்றிலும் இது விளக்கப் படாமலே யிருக்கிறது. ஆப: என்றால் தத்வங்கள்; கோரிய பொருளை யடைவிக்கும் சாதனங்கள் ஆப: என்று சொல்லப்பட்டிருக்கிறது; மோக்ஷ சாதனங்களே தத்வங் களாகும். தத்வத்தை யறிந்தால்தான் பிர்ம்மத்தை யறிய முடியும். உபாசனை, பக்தி, கிரியை முதலியவைகள் சாதனங்கள் தான்; ஓடத்தை நதியைத் தாண்டும் சாதனமாகத் தெரிந்து அதில் ஏறி நதியைக் கடந்து அக்கரை சேரவேண்டுமே யல்லாது, ஓடத்திலேயே காலங் கழித்தல் அறியாமையே யாகும். அதேபோல் மேற்கண்ட சாதனங் களைச் செய்து கொண்டே வேதாந்த விசாரத்தால் தன்னைத் தான் ஆத்மாராம னென்று தெரிந்து கொண்டு சர்வகர்ம பரித்யாகம் செய்யவேண்டும். விசாரணையில்லாமல் சாதனத்தையே கைக்கொண்டு காலங்கழிப்பவர்களை

ராக்ஷசர்களென்றும், தத்வத்தை யுணர்ந்து சாதனத்தை விட்டு மேற்போனவர்களை யக்ஷர்களென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஹனுமார் லங்கையைச் சுற்றிப் பார்த்தபோது ஒவ்வொரு வீட்டிலும் ஔபாசனம், அக்னிஹோத்ரம், யாகம், எக்ஞும் முதலிய கர்மாக்கள் நடந்து கொண்டிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ராக்ஷசர்களுடைய தலைவன் ராவணன் எப்பேற்பட்டவனு யிருக்கவேண்டும்? அவனை மஹாப் பெரிய சிவபக்தனென்று வர்ணித்திருக்கிறது. பஞ்ச பூதங்களையும் தன் சேவகர்களாயும், நவக்கிரஹங்களை யும் தன் சிம்மாசனத்தின் படிகளாயும் கொண்டு ஈஸ்வர பதவியையும் பெற்ற ராவணேஸ்வரனை காமாதுரனென்றும், மூர்க்கனென்றும் எப்படி சொல்லலாம்.

ராவணன் விஸ்ரவசின் குமாரன். விஸ்ரவஸ் புலஸ்திய ரிஷியின் புத்திரன். புலஸ்தியர் பிர்ம்மாவின் மானசீக புத்திரன். ஆகையால் ராவணனை அந்தர்முகவிர்த்தியின் ஒரு அம்சமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். பிர்ம்மாவை சுத்தமான மனசாக சாஸ்திரம் கூறுவதாலும் மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்கும் அந்தக்கரணவிர்த்தி களானபடியாலும் ராவணனை அஹங்கார தத்வ உருவக மென்றே ஆனந்த ராமாயணத்திலும், அத்யாத்ம ராமாயணத்திலும் வர்ணித்திருக்கிறது.

ஒவ்வொரு ராக்ஷசனும் தன்னைத்தானே பிர்ம்மா வென்றும், விஷ்ணுவென்றும், ருத்திரனென்றும் சொல்லிக் கொண்டதாக உத்தரகாண்டத்தில் வர்ணித்திருப்பதால்

ராவணனாகிய ராக்ஷச ராஜனை மகத்தான அஹங்கார மென்றே கருத வேண்டும். இந்த அஹங்கார நாசத்தைத் தான் ராவண வதமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மஹாவிஷ்ணுவினுடைய த்வாரபாலகர்களான ஜய விஜயர்கள் சனகாதி ரிஷிகளால் சபிக்கப்பட்டு ராவண கும்பகர்ணர்களாகப் பிறந்தார்களென்றும், மஹாவிஷ்ணு வும் அந்த ரிஷிகளின் சாபத்தால் மனுஷ்யனாய்ப் பிறந்தா ரென்றும் புராணவர்ணனை.

வால்மீகி ராமாயணத்துக்கு சோகராமாயண மென்றும் பெயருண்டு. ஏனென்றால் அதில் 14 வருஷம் வனவாசமும் வனத்தில் சீதையை பறிகொடுத்த விஷயமும் வர்ணிக்கப் பட்டிருக்கின்றது. இந்த இதிஹாசத்தை ஏழு காண்டங் களாகப் பிரித்திருக்கிறது. ஞானயோகத்தில் ஏழு பூமி கள் கல்பிக்கப் பட்டிருக்கின்றன. இந்த பூமிகளின் தத்வங் கள் ஏற்கனவே முதலாவது புஸ்தகத்தில் விளக்கப்பட்டிருக் கின்றன. சுபேச்சை முதலாவது பூமியாகச் சொல்லப் பட்டிருக்கிறது. துற்சங்க நிவர்த்தியும் ஆத்மஞான விருப்பமுமே சுபேச்சையாகும். இதிஹாசமாக இந்தக் கல்பனா பூமி பாலகாண்டமாக விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது.

ஓம் தத் சத்!

ஓம் தத் ஸத்

ஸ்வரூப ஸ்துதி.

அறிவின் ஸ்புரிப்பே அளவில் மதங்கள்
அறிவே நமது மதமாயின்—வெறியுண்டோ
அங்கே அதைவணங்கி அங்கே அதுவாவோம்
எங்கும் துணை வேறிலை

நூல் முகம்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள்)

நாஸ்திகந்தன்னை நன்றெனக் கொள்ளாது
ஆஸ்திமொழியெனச் சாற்று மிந்நூலே.

எப்பொரு ளெவ்வா றிருக்கு மப்பொருள்
செப்புமெய்யெனலைச் சிதைக்கு மிந்நூலே.

தத்துவமுடிவில் தாக்கற நிற்போர்
நித்தமுவப்புற நிகழ்த்து மிந்நூலே.

பொய்ப்பொருள் தன்னைப் பொய்யெனக் காண
மெய்ப்பொருள் இனதென விளக்கு மிந்நூலே.

சமயவாதிகள் சாற்று மயக்கம்
அமைதற்கிடங்கொடா தகற்று மிந்நூலே.

ஊகமுளதேல் சிறுவருரையுங் கொள்க
ஒழிந்தது அயனுரைசெயினுந் திரணமொப்ப
ஏகவிடுவாய்........................ (ஞான வாசிஷ்டம்)

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

CONNEMARA PUBLIC LIBRARY
17 JUN 1956
MADRAS

சுபேச்சை
அல்லது
பாலகாண்டம்.

சுபேச்சை என்பது துற்சங்க நிவிர்த்தியும், ஆத்ம ஞான விருப்பமுமேயாம். பகவத் கீதாப்யாசமான கர்ம யோகத்தால் சித்த சுத்தியுண்டானவுடனே ஜீவேஸ்வர வித்தியாசம் நீங்கிவிடுகிறது. ஜீவோபாதி நீங்கினுல் ஈஸ்வரோபாதியும் நீங்கும். இரண்டும் நீங்கினுல் பிர்மந்தான் மிச்சம். இந்த நிலையையடைய வாசனுக்ஷயம், மனோநாசம், விஞ்ஞானம் ஆகிய மூன்றும் தேவை. சப்தப்ரகிருதிகளான சப்தரிஷிகளின் சம்பந்தத்தால் வாசனுக்ஷயமும், 1000 யுகம் மண் புற்றிலிருந்து வெளிவந்ததால் மனோ நாசமும், உண்டாகப்பெற்ற வால்மீகி இருப்பிடத்திற்கு நாரத ரிஷி வந்தார்.

தத்வஞானத்தைக் கொடுப்பவரே நாரதரென்று ஏற்கனவே பன்முறையும் விளக்கப்பட்டிருக்கிறது. வால்மீகி சப்தப்பிர்ம ஞானத்தை யடைந்தாரென்று தாத்பரியம். வேதமே சப்தப்பிர்மம். ஆகையால் ராமாயணம் வேததுல்யமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாரதரிடத்தில் ராமாயணத்தைக் கேட்டவுடனேயே வால்மீகி ஞான திருஷ்டியைப் பெற்றுர் என்று வர்ணனை. ஆத்மா ராமனே உத்தமமான புருஷன். சகல ஜீவஜந்துக்களுக்குள்ளும் இந்தப் புருஷனிருக்கிறுன். தன்னை ஆத்ம ஸ்வரூபமாகத் தெரிந்து

கொள்ளாத மனுஷ்யன் புருஷனுமல்ல. ஒரு ஸ்திரீ தன்னை ஆத்ம ஸ்வரூபமாயறிந்து கொண்டால் அவள் புருஷனுவாள்.

வால்மீகி, ராமாயணத்தை, நாரதரிடம் கேட்டறிந்து கொண்டவுடனே கங்கைக்கு அருகேயுள்ள தமசா நதிக்குத் தன் சிஷ்யன் பரத்வாஜ ரிஷியுடன் சென்றார். கங்கைக்கு அருகில் தமசா என்ற நதி இல்லை. தமஸ் என்றால் அஞ்ஞானம். தமசா என்றதனுல் அஞ்ஞான நீக்கம் என்று பொருள். கங்கை என்பது ஞானம்ருதம். ஞானத்துக்கு சமீபத்தில்தான் அஞ்ஞான நீக்கமிருக்கும்.

சாஸ்வதமாயும், அன்னியோன்னியமாயும் வசித்துக் கொண்டிருந்த இரண்டு க்ரௌஞ்ச பக்ஷிகளில் காமமோஹிதமான ஒன்றை ஒரு வேடன் அம்பினுலெய்து கொன்றதை வால்மீகி பகவான் பார்த்தார்.

உடனே அவருடைய வாக்கினின்றும் ஒரு ஸ்லோகம் வெளிவந்தது. தான் அந்த வேடனை சபித்ததாகத் தோன்றிற்று. மனதில் துக்கம் ஏற்பட்டது. ஆஸ்ரமத்துக்குத் திரும்பி வந்தார். சிந்தனையிலாழ்ந்தார். பிர்ம்மா அவர் முன் தோன்றினுர். வால்மீகியின் சோகத்தை நீக்கினுர். உடனே மறைந்தார். வால்மீகி தான் நாரதரிடம் கேட்ட சுருக்கமான ராமாயணத்தை மனோ விலாசத்தால் விளக்கினுர்.

ஜீவனும், ஈசனும், சாஸ்வதமும், அன்னியோன்னியமுமான பக்ஷிகளாகவும், ஞான வைராக்கியத்தை நிச்சய புத்தி

யுடைய வேடனாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஜீவனுக்கு ஈஸ்வர பக்தியும், ஈஸ்வரனுக்கு ஜீவகருணையுமிருப்பதை காமமோஹிதமென்றும், ஜீவனுள்ளவரை ஈஸ்வரனுமிருப்பதால் சாஸ்வதமென்றும், ஜீவனும் ஈஸ்வரனும் பிரிவதை சோகத் தோற்றமென்றும், சோகத்தால் மோஹமுண்டாகிறதென்றும், அதுவே சாபத்துக்குக் காரணமென்றும் அறியவேண்டும்.

சோகத்தால் ஸ்லோகமுண்டாயிற்று என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்லோகமென்றால் கீர்த்தி. ஜீவ உபாதி நீங்கினால் ஈஸ்வரனாய் விடுகிறோமென்ற சந்தோஷமும், கீர்த்தியுந்தானேற்படும். ஞானமுண்டாகும் வரைக்குந்தான் வைராக்கியம் அவசியப்படுகிறது. ஆகையால் அது சபிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்மயோகத்தால் சித்த சுத்தியுண்டானபின் ஞான யோகம் ஆரம்பிக்கப்படுகிறது. மஹாபாரத யுத்தமென்று வர்ணிக்கப்பட்ட கர்மயோகத்தில் அர்ஜுனன், கிருஷ்ணன் என்று சொல்லப்பட்ட ஜீவனும், ஈஸ்வரனும் சம்பந்தப்படுகின்றன. ராமாயணமாகிய ஞானயோகத்தில் அர்ச்சுனனாகிய ஜீவ சம்பந்தமில்லை. கிருஷ்ணனே ராமனாகிறான். ஜீவனுள்ள வரையில் அசுத்த மாயையுண்டு. ஈஸ்வரன் சுத்தமாயையில் பிரதிபலிக்கிறான். ஆகையால்தான் சீதையை சுத்தமாயை யென்றும் மூலப்ரகிருதி யென்றும் சீதா உபநிஷத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

உலகத்தில் மலைகளும், நதிகளும் உள்ளளவும் வால்மீகி ஏழுலோகங்களிலும் மேலுங்கீழுமாய்ச் சுற்றிக்கொண்டே

யிருப்பாரென்று பிர்மா அவரை ஆசிர்வதித்ததாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. நாடியை நதியாகவும், மலையைச் சக்கரமாகவும் யோக சாஸ்திரத்தில் வர்ணித்திருக்கிறது. மூலாதாரம் முதல் பிர்மரந்திரம் வரையுள்ள சக்ரங்களில் பிராணனை நிறுத்துவதை லோகங்களில் யோகி சஞ்சரிப்பதாகச் சொல்லுகிறார்கள்.

ராமாயணத்தை வேதத்துக்கு சமானமானது என்றும், ராமன் வேத புருஷனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தில் கர்ம காண்டம், ஞான காண்டம் என்றிரண்டு இருப்பதுபோல, ராமனுக்கும் லவன், குசன் என்று இருகுமாரர்கள் கல்பனை. தர்ப்பையின் அடிக்கட்டைக்கு லவம் என்றும் நுனிக்கு குசம் என்றும் பெயர். கூர்மையான புத்தியுடையவனை குசாக்ர புத்தியுடையவனென்கிறோம். வால்மீகி ஞான வாசிஷ்டத்தை மோட்ச உபாயமாயும், ராமாயணத்தைக் கதா உபாயமாயும் செய்திருக்கிறதாக வாசிஷ்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அவைகள் ஆத்மஞானத்தையடைவிக்கும் உபாயங்கள் அல்லது சாதனங்களென்றேயறிய வேண்டும்.

ராமாயணக் கதையில் காணப்படும் சாமான்ய தர்மங்களான பிதுர்வாக்கிய பரிபாலனம், ஸ்திரீ தர்மம், சத்யாக்ரஹம், துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம், முதலியவை தர்ப்பையின் அடிக்கட்டையான லவனுடைய அம்சங்களான கர்ம காண்டத்தைச் சேர்ந்தவை. விசேஷ தர்மங்களான ஞானயோக விஷயங்கள் தர்ப்பையின் நுனிப்பாகமான குசனுடைய அம்சங்களான ஞான காண்டத்தைச் சேர்ந்தவை.

ஈஸ்வரன் வேறு, தான் வேறு என்ற கொள்கையுடன் பக்திமார்க்கத்தையும், கர்ம மார்க்கத்தையும் கைக்கொண்டவர்கள் லவனுடைய தத்வமாகிய சாமான்ய தர்மங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டும், ஜீவப்பிர்ம ஐக்கியத்தை யுணர்ந்தவர்கள் குசனுடைய தத்வமாகிய விசேஷ தர்மத்தைக் கையாளும்படிக்கும், கர்ம காண்டத்தையும், ஞான காண்டத்தையும் தன்னுள்ளடக்கியிருக்கிற வேத துல்யமாக ராமாயணம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சாமான்ய தர்மங்களை வெளிப்படையாகக் காட்டுகிற கதாபாகத்தை பலரும் அறிவார்கள். ஆகையால் விசேஷ தர்மமாகிய ஞானயோக தத்வத்தை வெளிப்படுத்தி ப்ரகாசப் படுத்துவதே இந்நூலின் நோக்கம்.

அயோத்தி யென்றால் யுத்தத்தினால் ஜயிக்கமுடியாத ஸ்தானம் என்று பொருள். அது 12 யோஜனை நீளமும், 3 யோஜனை அகலமுமுள்ள ஒரே ஒழுங்கான வீதியை யுடையதென்றும், தினந்தோறும் தண்ணீர் தெளிக்கப் படுகிறதென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஒரு யோஜனை யென்பது 8 மைல். 96 மைல் நீளமும் 24 மைல் அகலமுமுள்ள ஒரே தெருவு இருந்ததாகவும், அது தினந்தோறும் தண்ணீர் தெளிக்கப்பட்டதென்றும், அந்த நகரம் ஜயிக்கப் படமுடியாதென்றும் இதிஹாச வர்ணனை.

12 யோஜனை நீளமென்பதை 10 இந்திரியங்களும், மனதும், புத்தியுமென்றும், 3 யோஜனை அகலமென்பதை முக்குணங்களென்றும், ஒழுங்கான ஒரே ரஸ்தாவென்பதை

ஞானமார்க்கமென்றும், தினம் தண்ணீர் தெளிக்கப்பட்ட தென்பதை யோகாப்யாச காலத்தில் யோகிகள் பருகுகிற ஞானம்ருதமென்றும் அறியவேண்டும்.

மேலும் அயோத்யா நகரம் வைவஸ்வதமனுவினால் நிர்மாணிக்கப் பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. வைவஸ்வதன் சூரியனுடைய புத்திரன். மனுவென்றால் மனது. சூரியன் என்பது ஆத்மா. ஆத்மீகவுணர்ச்சியுடைய மனமே வைஸ்வதமனுவாகும். ஆகையால் நிர்மலமான சித்தத்தையுடையவனே அயோத்தியை யுண்டாக்கமுடியும் என்று கருத்து.

தசரதன் என்றால் 10 ரதங்களை யுடையவன். தசேந்திரியங்களையும் அடக்கினவனே தசரதனாவான். அவனுக்கு எட்டுமந்திரிகளும் இரண்டு குருக்களுமுண்டு. அவர்கள் தசரதருக்கு மட்டும் சேவை செய்தவர்களல்ல. சூரிய குலத்தரசர்கள் எல்லோருக்கும் அவர்கள் மந்திரிகளாகவும், குருமார்களாகவுமிருந்தார்கள். சூரிய குல அரசர்களை ஞானயோகிகளென்றும், எட்டு மந்திரிகளையும் யோகத்தின் எட்டு அங்கங்களாகவும், இரண்டு குருக்களையும் அந்தர்முகமாகவும், பகிர்முகமாகவும் தெரிந்துகொள்ள வேண்டும்.

அஸ்வமேதயாக மென்றால் ஒரு குதிரையை ஒரு வருஷகாலம் பூமியைச் சுற்றிவரும்படி செய்து, பின்பு அதை அக்கினியில் ஹோமம் செய்வதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. பூமண்டலத்திலுள்ள எல்லா நதிகளையும், மலைகளையும், சமுத்திரங்களையும், தேசங்களையும் கடந்து

சென்று திரும்பி யாகசாலைக்கு ஒரு வருஷத்துக்குள் ஒரு குதிரை வரவேண்டும். இது புராணவர்ணனை. பிரஹ தாரண்ய உபநிஷத்தில் சொல்லியபடி யாகக்குதிரையை மனசாக பாவிக்கவேண்டும்.

தசரதர் புத்திரகாம இஷ்டி என்ற யாகத்தைச் செய் தார். 60000 வருஷம் அரசாண்ட பின்புதான் அவருக்கு புத்திரனில்லையென்ற துக்கம் ஏற்பட்டதாம். இந்திரிய நிக்ரஹம் செய்தவனுக்கு உலக இச்சையிருக்குமா? புத்திரன் என்றால் ஆத்ம ஞானம் என்று பொருள். சாந் தமும், நிராசையுமின்றி ஞானமுண்டாகாது. ஆகையால் ரிஸ்யஸ்ருங்கர் சாந்தாவுடன் தசரதரால் யாகத்துக்கு வர வழைக்கப்பட்டதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

60000 வருஷங்கள் தசரதன் அரசாண்டான் என்று வர்ணித்திருப்பதிலிருந்து, ஆத்ம ஞானமின்றி நெடுங்கால மாக கணக்கில்லாத கர்மாக்களும், உபாசனைகளும் செய்யப் பட்டனவென்று தெரிகிறது.

ஸ்ரீ சங்கராச்சாரியார் விவேக சூடாமணியில் சொல் லுகிறார் :—

"ஓதிய பலவா நூலை ஒழுங்குறப் படித்துமென்ன
தீதிலாத் தேவர் தம்மைத்தினமு மர்ச்சித்துமென்ன
நீதியாம் கன்மம் யாவும் நித்தியம் செய்துமென்ன
கோதிலாத் தேவர் தம்மைக்குறித் துபாசித்துமென்ன
ஈதலால் இன்னும் இங்ஙன் எத்தனை யியற்றியென்ன
ஆதியாம் பரஜீவைக்கிய மறிந்துடு மறிவாலன்றி

ஒதோணுக் கல்பகோடியுற்ற காலத்திஞலும்
கோதிலா முக்திசித்தி கூடுவதென்றுமில்லை"

தன்னைத்தான் தேஹமல்ல, பிர்ம்மந்தானென்ற திட பாவனை வந்தாலன்றி எத்தனை காலம் வேறு எத்தவம் செய்தாலும் ஞானசித்தியுண்டாகாது என்று கருத்து.

அக்னி குண்டத்திலிருந்து ஒரு பூதம் பாயசத்தைக் கொண்டு வந்து தசரதனிடம் கொடுக்க அதை அவர் தன் மனைவிகளான கௌசலை, சுமத்ரை, கைகேயி ஆகிய மூவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அவர்கள் உடனே கர்ப்பவதிகளானர்கள்.

ஞாஞக்னியில் சர்வத்தையும் த்யாகம் செய்தால் ஞானமுண்டாகிறது. ஞான யோகியின் மனதை தசரதனுகவும், சத்வ, ரஜஸ், தமோ குணங்களை அவனுடைய பத்னிகளாகவும் உருவகப்படுத்தியிருக்கிறது.

சாதாரண மனுஷ்யனுக்கு விழிப்பு, ஸ்வப்னம், தூக்கம் என்ற மூன்று நிலைகளுண்டு. இந்த நிலைகளுக்கு அவஸ்தைகளென்று பெயர். ஞான யோகிகளுக்கு இன்னுமொரு அவஸ்தையுண்டு. அது துரீயமெனப்படும். தன்னை மறந்து நிஷ்டையிலிருக்கும் நிலையேயது. அந்த நிலையில் ஆத்மாவுக்கு ராமனென்று பெயர். இந்த ஆத்மா குணுதீதமானது. ஜாக்ரதாவஸ்தையில் லெட்சுமணனென்றும், ஸ்வப்னவஸ்தையில் பரதனென்றும், சுஷுப்தி அல்லது தூக்கத்தில் சத்ருக்னனென்றும் பெயர்கள் கல்பனை செய்யப்பட்டிருக்கின்றன. ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்தி அவஸ்

தைகள் குணசம்பந்தப்பட்டவை. துரீயத்தில் குணசம்பந்தமில்லை. யோகி துரீயநிலையிலிருக்கும் போது பிராணனுடன் கூடித்தானிருக்க வேண்டும். பிராணனுடைய ஒத்துழைப்பினல் தான் ஜாக்ரதாவஸ்தை நிலைக்கிறது. ஆகையால் துரீயாவஸ்தையிலுள்ள ராமனேடு கூடவே லெட்சுமணன் சதாகாலமும் இருக்கிறதாக வர்ணித்திருக்கிறது. தூக்க காலத்தில் ஸ்வப்பனம் கூடயிருப்பதை அனுமானப் படுத்தி பரதனேடு கூடவே சத்ருக்னன் எப்போதுமிருப்பதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

விஸ்வம் என்றல் விஷ்ணு. (விஷ்ணு சஹஸ்ரநாமாக்களில் முதலாவது). எக்ஞம் அல்லது த்யாகத்தை விஷ்ணு என்று சொல்லப்பட்டிருக்கிறது. விஸ்வாமித்திரர் என்றல் சர்வத்தையும் த்யாகம் செய்யவேண்டுமென்ற புத்தியையுடையவன் என்று பொருள். துரியாவஸ்தையே சர்வத்தையும் த்யாகம் செய்த நிலையானபடியால் விஸ்வாமித்திரர் யாகத்துக்கு ஸ்ரீ ராமனை அழைத்துக்கொண்டு போகிறர் என்ற கல்பனை செய்திருக்கிறது.

த்யாகமே யாகமாகும். காமம், குரோதம், மோகம் ஆகியவைகள் த்யாகம் செய்வதைத் தடுக்கும். அவைகளை மாரீசன், சுபாகு, தாடகை யென்ற ராக்ஷசர்களாக வர்ணித்திருக்கிறது. ஞானத்தால் மேற்கண்ட ராக்ஷசர்களான தீயகுணம்சங்கள் நாசமாகின்றன. ஞானயோகிக்கு பசி, தாகங்களால் நிஷ்டைகலையும்; மந்த்ரயோகத்தால் பசி, தாகத்தையும் ஜயிக்கலாமென்பதை விஸ்வாமித்திரர் ராம, லெக்ஷ்மணர்களுக்கு பலா, அதிபலாவென்ற மந்திரங்

களை யுபதேசித்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. பின்பு விஸ்வாமித்திரர் ராம, லெக்ஷ்மணர்களை சித்தாஸ்ரமத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிறார். அந்த விடத்தில் கங்கையும், சரயூநதியும் கூடுகிறதென்று சொல்லப்படுகிறது. கங்கையென்றால் ஞானம். சரயூவென்றால் ப்ராணன். இரண்டும் கூடுமிடத்தை புருவத்தின் மத்தி ஸ்தானமென்று சொல்லுகிறார்கள். சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்து மன்மதனை எரித்தயிடமென்றும் இதிஹாசவர்ணனை. மனதை ஒரு முகப்படுத்தி புருவமத்தியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் இந்திரியங்களின் சேஷ்டைகள் குறைவதை அனுபவத்தில் பார்க்கலாம்.

விஸ்வாமித்திரர் ராம, லெக்ஷ்மணர்களுக்கு அஸ்த்ர ப்ரயோகங்களையும், சம்ஹாரங்களையும் கற்றுக்கொடுத்தார் என்று வர்ணனை. இங்கு அஸ்த்ரம் என்றால், யுத்தத்திற்கு உபயோகப்படுகிற வில், அம்பு, பாணம் முதலிய கருவிகளல்ல. இவைகள் யுத்தத்தில் எதிராளியின்பேரில் செலுத்தப்பட்டால் திரும்பி அனுப்பினவரிடம் வந்து சேரமாட்டா. ஆனால் அஸ்த்ரங்கள் திரும்பி ராமனிடம் வருகின்றன. திரும்பி வருவதை சம்ஹாரம் என்று சொல்லப்படுகிறது. பஞ்ச ஞானேந்திரியங்களால் பஞ்ச பூதங்களையும் கவனித்துப்பார்த்துத் தத்வங்களை யுணர்வதே அஸ்த்ரங்களுடைய வேலையாகும். இந்திரயங்களையடக்கி மனதை அந்தர் முகமாய்த் திருப்புவது சம்ஹாரமாகும். அப்படிச்செய்வதால் அவித்யா காரியங்களான உலக விஷயாதிகள் ஒன்றும் பாதிக்காது. ஞானயோகிக்கு இவைகள்தான் சத்துருக்

கள். இவைகளைத்தான் அசுரர்களாகவும், ராக்ஷசர்களாகவும் உருவகப்படுத்தியிருக்கிறார்கள்.

கங்காவதரணம் :— ஹிமவான் மேருவின் புத்திரியான மனோரமையை மணந்து கங்கை, உமை யென்ற இரண்டு புத்திரிகளைப் பெற்றான். உமையை சிவன் கல்யாணம் செய்துகொண்டார். கங்கையைத் தேவர்கள் தங்கள் லோகத்துக்குக் கொண்டுபோனார்கள். கபிலரால் சபிக்கப் பட்டுச் சாம்பலாய்ப்போன தன்னுடைய 60000 புத்திரர் களையும் புனிதமாக்கும் வண்ணம் சகரராஜன் தேவலோகத் திலிருந்து கங்கையை பூமிக்குக் கொண்டுவர இச்சித்தான். 30000 வருஷம் தவம்செய்தும் முடியவில்லை. அவனுடைய மகன் அம்சுமானும் 30000 வருஷம் முயற்சித்தான். முடிய வில்லை. அவனுடைய புத்ரன் பகீரதன் நெடுங்காலம் தபஸ் செய்து கங்கையை சிவனுடைய சிரசில் வரும்படி செய் தான். கங்கை அங்கிருந்து பிந்துசரத்தில் விழுந்து அங் கிருந்து ஏழு கிளைகளாய்ப் பிரிந்து, மூன்று கிழக்கை நோக்கி யும் மூன்று மேற்கே நோக்கியும் செல்ல, ஒன்று மாத்திரம் பகீரதனோடு பூமிக்குவந்தது. அதை ஜஂஹுஎன்ற ரிஷி குடித்துவிட்டார். தேவர்களும், ரிஷிகளும் அவரைப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டதின் பேரில் தன் காது களின் வழியாய் அதை வெளியேவிட்டார். அது ரசாதலத்துக்குச் சென்று சகரபுத்திரர்களின் சாம்பலைச் சுத்தி செய்து அவர்களை உத்தமலோகங்களை யடையும்படி செய்தது :—

மேற்கண்ட வர்ணனையில் ஹிமவான் என்றமலை மேரு

வென்றமலைக்கு மாப்பிள்ளை ஸ்தானத்தை ஏற்கிறது. மேரு வென்றால் வேதஞானம். அதனுடைய புத்ரியான மனோரமை என்றால் சுத்தமான மனது; ஹிமவான் என்றால் குளிர்ந்த சாந்த நிலை. சித்த சுத்தியும் சாந்தமும் கூடின ஸ்தானமே கங்கையாகிய ஞானம். தசரதனுக்கு 60000 வருஷம் சென்றபின்தான் ரிஸ்யஸ்ருங்கருடன் சாந்தாவந்த பிறகு யாகத்தினால் புத்ரப்பேறாகிய ஆத்மாராமனுண்டான தாக வர்ணித்திருப்பது ஞாபகத்துக்கு வரவேண்டும். ஞானகங்கையாகிய அமிர்தத்தைப் பருகிக்கொண்டுதான் யோகிகள் நிஷ்டையிலிருக்கிறார்கள். சமாதி நிலையில் மனுஷ்யன் சிவனாகவே யிருக்கிறான். அப்பொழுதுதான் கங்கை இவன் தலையில்வந்து சேருகிறது. பிந்துசரஸ் என்பது யோகியின் நெற்றி ஸ்தானமாகும். முகத்திலுள்ள அவயவங்களில் இடது பக்கத்தில் காது, கண், மூக்கு இருப்பதுபோல வலதுபக்கத்திலு மிருக்கிறது. இவைகள் ஞானேந்திரியங்கள்; கங்கையின் கிளைகள் மூன்று கிழக்கேயும், மூன்று மேற்கேயும் போகின்றன வென்பதை இவ்விந்திரியங்கள் நிரூபிக்கின்றன. வட இந்தியாவிலுள்ள கங்கை நதியின் கிளைகள் ஏதுவும் மேற்கே சென்று அரேபிக் கடலில் விழவில்லை என்பதையும் மறக்கக் கூடாது. பாக்கியான ஒரு கிளைதான் சுஷூம்நா நாடியான ஞானகங்கை. அது சரீரத்துக்குள் மூலாதாரம் வரை செல்லுகிறது. ஜான்ஹூ வென்றால் உலகப்பற்றற்றவன். அப்பேற்பட்டவன் தான் ஞானகங்கையைக் குடிக்கமுடியும். ஞான யோகத்தையும், கர்ம யோகத்தையும் அப்யசித்தவனே ஜான்ஹூவாவான். வலது காதை ஞானயோக ஸ்தான

மாயும், இடது காதை கர்மயோக ஸ்தானமாயும் யோக சாஸ்திரத்தில் வர்ணித்திருக்கிறார்கள். ஆகையால் அவர் காதின் வழியாய் வெளிவிட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரசாதலமென்பது தேஹத்தின் மத்ய பாகத்திலிருக்கிறதென்று அத்வைத விளக்கம் 4-ம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே காமாஸ்ரமமாகும். உலக விஷயங்களிலேயே ஆராய்ச்சிசெய்து கொண்டுபோனால் கடைசியில் அணுவுக்கணுவான சாம்பலாய்ப் போகலாமேயொழிய வேறு நற்பயன் உண்டாகாதென்பது சகரபுத்திரர்கள் பூமியைத் தோண்டிச்சென்று கடைசியில் கபிலரால் சபிக்கப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதிலிருந்து விளங்குகிறது. தேஹத்தையும், ஜகத்தையும், உண்மையானதாயும், நிலைத்ததாயும் நினைப்பவர்களுக்கு கபிலருடைய சாங்க்ய ஞானத்தாலன்றி விடுதலை ஏற்படமாட்டாது. கபிலர் தேவஹூதிக்கும் கர்தமருக்கும் பிறந்தவர். மனுவுக்கும் சதரூபிக்கும் பிறந்தவள் தேவஹூதி. பிர்ம்மாவினுடைய நிழலிலிருந்து உண்டானவர் கர்தமர். கபிலருடைய மனைவி வித்யா அல்லது ஞானம். இந்த தம்பதிகள் சதாகாலமும் சூரியனிடத்திலேயே யிருக்கிறார்கள். ஏற்கனவே நூலாரம்பத்தில் விவரிக்கப்பட்ட ரிஷிகளைப்போல் கபிலரையும் சரித்திர சம்பந்தப்பட்ட மனுஷ்யரென்று சொல்ல சாஸ்திரங்களில் அதிகாரமேயில்லை. சூரியப்ரகாசத்தில் இருட்டு இருக்கமுடியாதது போல ஞானமிருக்குமிடத்தில் காம முதலிய அஞ்ஞான விஷயங்கள் இருக்கமுடியாதென்பது கருத்து.

ஸ்கந்தர் உற்பத்தி.

சிவன் உமையுடன் கூடி நெடுங்காலம் பிரியாமலிருந்தார். உமையுடன் கூடினதனுல் சோமன் என்ற பெயர் உண்டாயிற்று. தேவர்கள் பிரார்த்தனைக்கிணங்கி சிவன் உமையிடமிருந்து பிரிந்தபோது வீரியம் ஸ்கலிதமாயிற்று. அக்னிபகவான் அந்த வீரியத்தை கங்கையில் விட்டார். அதிலிருந்து ஸ்கந்தர் உண்டானுர். ஆறு கிருத்திகா தேவிகளும் அவருக்குப் பால் கொடுத்தார்கள். அதனுல் அவருக்கு ஆறுமுகங்களுண்டாயின.

சிவன் என்றுல் ஞானம். உமையென்பது சக்தி. நிஷ்டையில் நெடுங்காலமிருப்பது ஞானசக்தியின் பெருமை. நிஷ்டை கலேந்தால் ஞானசக்தி வாக்கு அல்லது வேதவடிவாக வெளிவரும். அக்னி, கங்கை, சிவன் என்பதெல்லாம் ஞானத்தின் வேறு பெயர்கள்தான். யோக சாஸ்திரப்படி சுஷும்நா நாடி ஆறு ஆதாரங்களின் வழியாய்ச் செல்லுகிறது. ஆறு ஆதாரங்களான மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞா என்ற ஸ்தானங்களே ஆறு கிருத்திகா க்ஷேத்ரங்களாக வர்ணித்திருக்கிறது. க்ஷேத்ரங்களே ஸ்திரீகளாகச் சொல்வது காவிய சம்பிரதாயம். மூலாதார ஸ்தானமே பராசக்தியின் இருப்பிடம். வேதம் அல்லது வாக்கு அங்கிருந்துதான் உத்பவிக்கிறது. வேத சம்பந்தமான ஆறு சாஸ்திரங்களும் ஸ்கந்தனுடைய ஆறுமுகமாகவே கல்பனை. சப்தப்பிர்மத்தை யறிந்துதான் பரப்பிர்மத்தை யறியக்கூடும். சாஸ்த்ரம் தெரியாமல் ஞானமுண்டாகாது என்பதை இதி

ஹாசமாக ஈஸ்வரனுக்குக் குமாரன் உபதேசம் செய்தா ரென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

மருத்துக்களின் உற்பத்தி.

அசுரர்களின் தாயான திதி என்பவள் தேவேந் திரனைப் பார்க்கிலும் வல்லமையுள்ள ஒரு புத்ரனைப்பெற வேண்டி தபஸ் செய்து வரம்பெற்று கர்ப்பமாயிருந்தாள். இந்திரன் இதையறிந்து அவள் சாஸ்த்ர விரோதமாய் நடக்கும் காலத்தைக் கவனித்திருந்து அவளுடைய கர்ப் பத்துக்குள் புகுந்துவிட்டான் (தேஹசுகத்துக்காக மட்டும் சாஸ்திரத்தின்படி நடப்பவர்கள் அசுரர்கள்). கர்ப்பத் திலிருந்து சிசுவை ஏழு துண்டுபோட்டான். அந்தத் துண் டுகள் அழத்தொடங்கின. (மாருத) அழாதேயுங்கள் என்று சமாதானம் செய்தான் இந்திரன். அந்தத் துண்டு களுக்கு அதுமுதல் மருத்துக்கள் என்ற பெயர் ஏற்பட்டது. திதியை சமாதானம் செய்து ஏழு மருத்துக்களுக்கும் ஏழு ஸ்தானங்களைக் கொடுத்தான். பிர்ம்மலோகத்தில் ஒன்றை யும், இந்த்ரலோகத்தில் ஒன்றையும், வாயுவில் ஒன்றையும், நான்கு திக்குகளில் மீதி நான்கையும் தேவதைகளாக நியமித்தான் :—

அசு என்றால் பிராணன். ஹடயோகத்தால் தேஹத் தைக் காப்பாற்றுகிறவர்கள் அசுரர்கள். அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சாஸ்த்ர விரோதமில்லாமலே செய்வார்கள். மூலாதாரம் முதல் பிர்ம்மரந்திரம் வரை ஏழு ஸ்தானங்களும் ஹடயோக சாஸ்திரத்தில் கல்பிக்கப்

பட்டவை. பிர்ம்மரந்திரத்தில் பிர்மலோகத்தையும், ஆக்ஞாவில் இந்த்ரலோகத்தையும், விசுத்தியில் வாயுலோகத்தையும் மற்றைய நான்கு ஸ்தானங்களில் நான்கு திக்குகளையும் ஹடயோகிகள் பாவிக்கவேண்டும் என்பதை நிரூபிக்க இதிஹாசமாக வர்ணிக்கப்பட்டது. உருண்டையான பூமிக்கு திக்குகளை எப்படிக்காண்பது. இந்திரியங்களையடக்கினவனுகத் தன்னைத் தெரிந்துகொண்டால் இந்திரலோகத்திலிருப்பதாகவும், ஜகத்மித்தை, பிர்ம்மம் சத்யம், நான் பிர்ம்மந்தான், பிர்ம்மத்தைத் தவிற வேறொன்றுமில்லையென்றுணர்ந்தால் பிர்ம்மலோகத்திலிருப்பதாயும் தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றி ஆகாசத்தில், இந்திரலோகமும், பிர்ம்மலோகமும் தொங்குகிறது என்று சொல்ல சாஸ்த்ரம் இடம் கொடுக்காது; யுக்திக்கும் பொருந்தாது; அனுபவத்திலும் அறியமுடியாது. திதி என்றால் பிரிக்கிறது என்று பொருள். அதிதி என்றால் பிரிக்கமுடியாதது. ஜீவாத்மா பரமாத்மா வென்ற வித்தியாசத்தைக் கல்பிக்கிறவர்கள் திதியின் புத்திரர்களாயும், அவைகளின் ஐக்கியத்தை உணருகிறவர்கள் அதிதியின் புத்திரர்களான தேவர்களாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

அஹல்யா சாப விமோசனம்.

ஹல்யம் என்றால் லெக்ஷணமில்லாதது. அஹல்யமென்றால் லெக்ஷணமின்மையில்லாதது, அதாவது, சகல லெக்ஷணங்களும் பொருந்தினது. பிர்ம்மா மனசினால் யாதொரு குற்றமுமில்லாத அஹல்யாவை ஸ்ருஷ்டித்தார். கௌதமரிடம் கொடுத்தார். இந்த்ரன் அவளை இச்சித்தான்.

ரஹஸ்யமாய் அவளுடன் சுகித்தான். கௌதமர் இந்திர னையும் அஹல்யாவையும் சபித்தார் :—

கௌதமர் சப்த ரிஷிகளில் ஒருவர். சப்தப்ரகிருதி களே சப்தரிஷிகள் என்று ஏற்கனவே சொல்லப்பட்டது. இந்த்ரன் ஜீவாத்மா. அஹல்யை குற்றமற்ற பொருள். பிர்ம்மா அந்தர் முகபுத்தி. அந்தர் முகபுத்தியால் ஸ்ருஷ்டிக் கப்பட்டது பிர்ம்மஞானமேயன்றி வேறெதுவுமல்ல. இந்த்ரனுகிய ஜீவாத்மா பிர்ம்ம ஞானத்தையடைய வேண்டியதே நியாயமான காரியம். கௌதமரை மனுஷ்யராக பாவித்தோமானுல் அவருடைய ஜீவாத்மா இந்த்ரனே யாவான். ஒவ்வொரு ஜீவப்ராணியின் உள்ளிருக்கும் ப்ரா ணனே இந்த்ரன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அஹல் யாவை ஸ்திரீயாக பாவித்தால் அவளுடைய பிராணனையும் இந்த்ரனுகவே கருதவேண்டும். தேவர்களின் திருப்திக் காகவே இந்த்ரன் அஹல்யாவைச் சேர்ந்தான் என்று சொல்லியிருக்கிறது. தேவர்கள் என்ருல் இந்திரியங்கள். வைதீக கர்மாக்களில் இந்திரியங்களுக்கு ஸ்ரத்தையதிகம். ஞான நிஷ்டையிலிருப்பவர்கள் இந்திரிய நிக்ரஹம் செய்து நெடுங்காலம் உலகை மறந்திருப்பார்கள். அவர்களுடைய இந்திரியங்கள் இவர் எப்பொழுது நிஷ்டைகலைந்தெழுவார்; எப்பொழுது சற்று விடுதலையடைவோம் என்று எதிர்பார்த் துக்கொண்டிருக்கும். நிஷ்டை கலைந்தவுடன் பரமாத்ம ஐக்கியத்திலிருந்தவன் ஜீவாத்மாவான இந்த்ரனுகி விடுகிருன். தன்னுடைய ஜீவாத்மாவையே சபிக்கிருன். பிர்ம ஞானமும் சபிக்கப்படுகிறது. குழந்தை ஏதாவது குற்றமில்லாத சிறு தவறு செய்துவிட்டால் தாயார் அக்

குழந்தையை "நாசமற்றுப் போவாய்" என்று சபிப்பது பழங்காலத்து வழக்கம். இப்பொழுது நமது வீடுகளி லிருக்கும் வயது முதிர்ந்த பாட்டிமார்கள் குழந்தைகளைத் திட்டமாட்டார்கள்; கோபக்குறியோடு நாசமற்றுப்போ வென்று சொல்லுகிறார்கள். அதேமாதிரி கௌதம சாபத் தைக் கவனிப்போம். தன்னையும், தன்னுடைய சக்தியையும் யாராவது நிந்திப்பார்களா? இந்த்ரன் தேஹமெங்கும் பகமாக அவனுக்குத் தோன்ற வேண்டுமென்றும், மற்றவர் களுக்குக் கண்ணாகத் தோன்ற வேண்டுமென்றும், அஹல்யை ராமர் வந்து பார்க்கும்வரை மற்றவர்களுக்குக் கல்லாகத் தோன்றவேண்டுமென்றும் சாபம் கொடுக்கப் பட்டது. பகம் என்றால் ஐஸ்வரியம். ஜீவாத்மா அஹல்யை என்ற ஞானானுபவத்தால் தன்னை ஈஸ்வரனாகக் கருதலா மென்றும், பிறர் அவனை ஆயிரம் கண்ணைப்படைத்த மஹா விஷ்ணுவாகக் கருதுவாரென்றும், பிர்ம ஞான சாஸ்த்ரம் லௌகீகர்களுக்கு கல்லைப்போல கடினமான புரியாத விஷயங்களையுடையதாயும், ஆத்மா ராமர்களுக்கு விளங்கும் படியிருப்பதாயும் ஆகுமென்றும் சாபக்கருத்து. ஆகையால் இந்த்ரனாகிய தன்னையும், தான் அடையவேண்டிய ஞானத் தையும் யாரும் பழிக்கக்கூடாது.

இங்கு அஹல்யைப்பற்றி ஒரு முக்கியமான விஷயம் சொல்லாமலிருக்க முடியவில்லை. அந்தபரம்பரையாய் இக்காலத்தில் படித்தவர்களுங்கூடப் பின்வரும் ஸ்லோகத் தைத்தப்பாகச் சொல்லித் தப்பாகப் பொருள் கூறுகிறார்கள் :—

அஹல்யா த்ரௌபதி சீதா
தாரா மண்டோதரி ஸ்ததா
* பஞ்சகம் நா ஸ்மரே நித்யம்
சர்வ பாபை ப்ரமுச்யதே.

இந்த ஸ்லோகத்தில் பஞ்சகம் நா என்ற பதங்களை பஞ்சகந் யாவென்று சொல்லி ஐந்து கன்னிகைகள் என்று பொருள் கொள்ளுகிறார்கள். எப்படி அவர்களை கன்னிகைகளென்று சொல்லலாமென்று கேட்டால் பதிவிரதைகளைக் கன்னிகைகளென்று சொல்லலாமென்கிறார்கள். விபசாரதோஷம் கல்பிக்கிறீர்களேயென்று கேட்டால் ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்கிறார்கள். மேற்கண்ட ஐந்தும் பஞ்சதந் மாத்ரைகளேயான பிர்மசக்திகளேயாம். ஸ்திரீகளாகக் கல்பனை செய்யப்பட்டவைகள். அஹல்யை பிர்ம்மாவின் சிதாகாசத்திலிருந்துண்டானவள். த்ரௌபதை அக்னி குண்டத்திலிருந்துண்டானவள். சீதை பூமியிலிருந்துண்டானவள், தாரை பிரஹஸ்பதி அல்லது வாக்கின் சக்தி, மண்டோதரி அசுர தச்சனான மயனுக்கும் ஹேமா என்ற அப்சரஸுக்கும் பிறந்தவள். அசுரன் என்ற ஜாதியும், தேவன் என்ற ஜாதியுமில்லை. இரண்டும் குணங்கள். அப்சரஸ் என்றால் தெய்வீக சக்தியேயன்றி தேவஜாதிப் பெண்ணல்ல. மேற்கண்ட ஐந்துபேரும் மானிட ஸ்திரீ வயிற்றில் பிறந்த பெண்களல்லவென்றறிய வேண்டும். அவர்களை நினைத்த மாத்திரத்தில் ராமாயணம், மஹா பாரதம், பாகவதம் முதலிய ஞான சாஸ்த்ரங்களிலுள்ள விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. அவைகளைமனனம் செய்வதால் உலக விஷயாதிகள் மனசை விட்டகல்கின்றன.

---

* பஞ்சகம் = ஐந்தின் கூட்டம், நா = நரன்.

சித்த சுத்தியுண்டாகிறது. இதைத்தான் பாபநிவிர்த்தி யென்று சொல்லுகிறார்கள்.

வில் முறித்தல்.

சிவனுடைய வில் என்பதை ருத்ரக்ரந்தியென்றும், விஷ்ணுவின் வில்லை விஷ்ணுக்ரந்தியென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. க்ரந்தியென்றால் முடிச்சு. "சிவாய விஷ்ணு ரூபாய, சிவ ரூபாய விஷ்ணவே" என்றபடி தெரிந்து கொள்ளாமல் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் பேதங் கல்பித்து ஒன்று மற்றொன்றைவிடப் பெரிது என்ற மனப் பான்மையை நீக்குவதே வில் முறித்தலாகும். "உபாச கானாம் காரியார்த்தம் பிர்ம்மணா ரூபகல்பனா" பிர்ம்மம் ஒன்றுதான் சத்யம். இதைத்தெரிந்துகொள்ளாத உபாச கர்களுக்காக நாம ரூபம் கல்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை மறக்கக்கூடாது. ஜனகருடைய சிவதனுசையும், பரசுராம ருடைய விஷ்ணு தனுசையும் ராமன் ஒடித்தான் என்ற தனால் சிவ, விஷ்ணு வித்யாசத்தை ஒழித்தானென்றர்த்தம். ஓம் நமோ நாராயணாய என்ற மந்திரத்திலுள்ள 'ரா' ஓம் நமசிவாய என்ற மந்திரத்திலுள்ள 'ம' ஆகிய இரண்டு அக்ஷரங்களும் சேர்ந்ததே ராம மந்த்ரமாகும். இந்த மந்த் ரத்தை உச்சரித்த மாத்திரத்தில் மதஸ்தர்களிடமிருக்கும் சிவத்வேஷமும் விஷ்ணுத்வேஷமும் ஒழியும். த்வேஷ முள்ளவிடம் அஹங்காரமுண்டு. ராவணனை அஹங்கார உருவகமென்றே கல்பித்திருப்பதாக சுந்தரகாண்டத்தில் விளக்கப்படும்.

மூலப்ரகிருதியான சுத்த மாயையை, பூமியிலிருந்துண்டான சீதையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பூமி என்பது மண்பூமியல்ல சாஸ்த்ரபூமியே யாகும். சாஸ்திர பூமி ஆராய்ச்சியானது யாகபூமி உழுகப்பட்டதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஈஸ்வரனிடத்தில்தான் சுத்தமாயையிருக்கக்கூடும். ஜனகனிடத்தில் சிவதனுசுயிருந்ததால் ருத்ரக்ராந்தி அவனிடமிருந்தது. நான் ஞானி அதனுல் தான் சீதையாகிய சுத்தமாயை என் வசமிருக்கிறதென்று நினைப்பு ஏற்பட்டது. கலியாணகாலத்தில் என்னுடைய பெண்ணுகிய இந்த சீதையைக் கொள்ளு என்று வர்ணித்திருப்பதை கவனிக்கவேண்டும். ஜனகனிடத்தில் இது, நான், நீ என்ற பேதபுத்தியிருப்பதால் சுத்த மாயை அவனிடமிருக்கத் தகுந்ததல்லவென்று ராமர் சீதையை ஸ்வீகரித்துக்கொண்டார் என்பது சீதாகலியாண தத்வமாகும். ராமர் சீதையுடன் அயோத்திக்கு வந்து தகப்பனுர், தாயார், சகோதரர்கள் முதலானவர்களோடு கூட 12 வருஷம் சுகமாக வசித்தார் என்றதால், ஒரு ஞானயோகி குடும்பியாயிருந்து கொண்டே பத்து இந்திரியங்களையும், மனசையும், புத்தியையும் சுத்தமாய் வைத்துக்கொண்டு வசிக்கமுடியும் என்பது நிரூபிக்கப்படுகிறது.

பாலகாண்டம் முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

விசாரணை

அல்லது

அயோத்தியா காண்டம்

சத்சங்கத்தினாலும், சாஸ்திர ஆராய்ச்சியாலும், முன்னோர் வழியைப் பின்பற்றுதலாலும் வைராக்கியத்துடன் ஞானத்தையடைய முயல்வதே விசாரணை யாகும்.

பஞ்சகோசங்களை யுடைய சரீரத்துக்குள்ளிருக்கிற ஆத்மாவைக் கண்டுபிடிக்க முயல்வதே விசாரணை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிருதயாகாசத்தை சத்ய மென்று சொல்லப்பட்டிருக்கிறது. (ப்ரஹதாரண்ய உபநிஷத்து)

ஞானயோகியின் ஹிருதயத்தை அயோத்தியாக வர்ணித்திருக்கிறது. அயோத்திக்குள் சத்யம் என்ற நிலையிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பதினான்கு வித்தைகளையுமறிந்து சப்தப்பிர்மத்தைத் தெரிந்ததின்பேரில் பரப்பிர்மத்தை யடையலாமென்று சொல்லப்பட்டிருப்பதால், ராமன் 14 வருஷங்கள் ஆரண்யவாசம் செய்ய வேண்டுமென்று ஏற்பட்டது.

அயோத்தி, நகரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (ந = இல்லாதது, கரம் = சப்தம்) சப்தமில்லாத நிலை அல்லது நிர்க்குணப் பிர்மஞான நிலை.

குருக்ஷேத்திரம் என்பது கர்மயோகநிலை. கர்மயோகி ஞானயோகி யாகும் போது குருக்ஷேத்திரம், அயோத்தி யாகிறது.

பதினான்கு வித்தைகளின் சமூகத்தை ஆரண்யமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வித்யாரண்யம், வேதாரண்யம், பிரஹ்மாரண்யம் முதலிய பெயர்கள் இதே காரணத்தா லுண்டானவைகள். சாதுக்களோடு கூடி சாஸ்திர விசாரணை செய்வதே ஆரண்ய வாசமாகும். சுமத்திரை லெட்சுமணனைப் பார்த்து "நீ வனவாசம் செய்யவே பிறந்திருக்கிறாய். அயோத்தியை காடாக பாவித்துக்கொள்ளு" என்று சொல்லுகிறதாக வர்ணித்திருப்பது கவனிக்கத் தக்கது. ஆத்மத்யானமில்லாத ஹிருதயம் காட்டுக்கு சமானம். உலக விவகாரங்கள் மனதில் குடிகொண்டால் அது காடேயாகும். இங்கு ஆத்மானாத்ம விசாரமே விவகாரமாகும். துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்கும் காட்டில் வசிக்கும்படி தாயார் தன் பிள்ளையை ஆசீர்வதிக்கவில்லை.

பரதன் ஞானயோகியினுடைய ஸ்வப்னாவஸ்தை. ஆத்ம ஞானமில்லாமல் கர்மாவிலேயே பற்றுடையவனாகக் கல்பிக்கப்பட்டவன். அவன் பாரத்வாஜருடைய ஆஸ்ரமத்தில் ஆராதிக்கப்படுகிறான். பாரத்வாஜரும் சகுணோபாசனை செய்கிறவரென்று அவர் உபாசித்த மூர்த்திகளின் வர்ணனையிலிருந்து தெரிகிறது. பரதரும் அவருடைய பரிவாரங்களும் ரிஷியால் பெரியவிருந்து செய்யப்பட்டதாகத் தோன்றி மறைந்ததென்பது ஸ்வப்ன விசேஷ கல்பனையேயாம்.

மனோநாசமாகும்வரை பிர்மஞானம் உண்டாகாது. தசரதன் சுத்தமனதின் உருவகம். சங்கல்பத்தோடு கூடினதே மனமாகும். சங்கல்பமில்லாவிட்டால் மனமில்லை. ராமனை யுவராஜ பட்டாபிஷேகம் செய்துபார்க்க வேண்டு மென்பது தசரதனின் சங்கல்பம். அப்படியானால் தசரதன் இறக்கமாட்டான். சகுணோபாசனை செய்துகொண்டே இருப்பான். நான் உபாசனை செய்கிறேன் என்ற எண்ண முள்ளளவும் ஜீவபிர்ம ஐக்கியம் ஏற்படாது. மனோநாச மின்றி நான் என்ற பாவனை அகலாது. சங்கல்ப நாசத்தால் தான் மனோநாசமுண்டாகும். தமோகுணத்திற்கு சம் ஹாரசக்தி யுண்டு. கைகேயி தமோகுண உருவகமாகிய தசரதனுடைய மனைவி அல்லது சக்தி. அவனுடைய சங்கல்பம் அவனுடைய சக்தியால்தான் நாசமாக வேண்டும். தசரதனை மனசின் நாசத்திற்கு கைகேயியான தமோ குணமே காரணம். ராமன் வனவாசமாகிய ஆத்மானாத்ம விவகாரத்துக்கும் அதே காரணம். இந்த விவகாரம் அந்தர் முகமாய்த்தான் நடக்கும்; புறநோக்கிலே நடக்காது. வெளி நாட்டத்தை நாடாகவும், உள் நாட்டத்தைக் காடாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

கோவிலில் கர்ப்பக்ரஹத்துக்கு வெளியில்தான் நந்தி யின் ஸ்தான மேற்பட்டிருக்கிறது. ஆத்மாராமனிருக்க வேண்டிய ஹிருதயமாகிய அயோத்திக்கு வெளியில் நந்திக்கிராமத்தில் பரதன் ராமனுடைய பாதுகையைப் பெற்றுக் கொண்டுவந்து ஆராதனை செய்ததாக வர்ணித் திருக்கிறது. பாதுகை தங்கத்தினலலங்கரிக்கப்பட்டிருந்த தாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ராமன் மரவுரி தரித்து, ஜடையுடன், பாதசாரியாக சீதையுடனும், தம்பி லெட்சுமணனுடனும் காட்டில் நடந்தா னென்று வர்ணிக்கப் பட்டிருக்கும்போது, தங்கப் பாதுகை அவரிடமிருக்கக் காரணமில்லை. பரதருடைய பாதுகையில் ராமர் பாதத்தை வைத்தாரென்பது அனுசிதம். ஒரு வருடைய பாதரெட்சையை வேறொருவர் உபயோகிக்கக் கூடாது. ராமன் திரும்பிவர மறுத்தால் இப்படிச் செய்யலா மென்ற யோசனையுடன் புதிதாக ஒன்று செய்துகொண்டு வந்தாரோவென்று சொல்லவுமிடமில்லை. ஏனென்றால் ராமன் வராவிட்டால் பிராணத்யாகம் செய்துவிடுவதாகச் சொன்னதாக வர்ணித்திருக்கிறது.

ஞானயோகியினுடைய துரீயாவஸ்தைதான் ராம னென்ற மானசீகஸ்வரூபம்; அதற்கு ரூபமுமில்லை, பாதமு மில்லை. உபாசகர்களுக்காக பிர்மத்துக்கு நாமமும் ரூபமும் கல்பிக்கப்பட்டிருக்கிறது. அபதம் பதமாகச் செய்யப் பட்டது. இது அத்யாரோபம், பதத்தை அபதமாகச் செய்வது அபவாதம். பதத்தை உபாசிப்பதே சகுணோ பாசனையாகும். இதற்கு மந்திரமும் தந்திரமுமுண்டு.

மந்தரை என்ற கூனி கைகேயியை சந்தோவிலாசினி யென்றழைக்கிறாள். சந்தஸ் அல்லது வேதமந்திரங்களை யறிந்தவளென்றர்த்தம். மந்தரை என்றால் ஸ்ருதி அல்லது சங்கீதத்துக்குத் துணையாக ஒத்தூதல் என்று பொருள். பரதனுடைய சகுணோபாசனைக்கு கைகேயி மந்திரமாகவும், கூனி தந்திரமாகவுமிருப்பதாகக் கருதவேண்டும். சங்கீத சாஸ்திரத்தில் ஏழு ஸ்வரங்களும் மூன்று க்ராமங்களும்

வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு அக்ஷரங்களும் ஷட்ஜ, ரிஷப, காந்தார, மத்யம, பஞ்சம, தைவத, நிஷாத என்ற ஏழு ஸ்வரங்களின் குறிக் கோள்களாகும். ஸ்வரச் சேர்க்கைகளுக்கு க்ராமம் என்று பெயர். ஷட்ஜ, மத்யம, காந்தார என்பவை அந்தக்ராமங் களாகும். ஷட்ஜ என்பது நந்தியாவர்த்த மென்றும் சொல் லப்படுகிறது. நந்தியாவர்த்தக்ராமமே நந்திக்ராம மென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது போலும்; மயிலினுடைய கேக சப்தத்தை ஷட்ஜஸ்வரம் குறிப்பாய்க் காட்டுகிறது. கேகய தேசத்தரசனுக்கு சகல பூதங்களின் சப்தங்களும் தெரியு மென்று சொல்லப்பட்டிருப்பதால் அவனுடைய புத்திரி யான கைகேயி மந்த்ர சப்தத்தின் உருவகமேயாம். அயோத்தி சப்தமில்லாத நகர ஸ்தானமான படியால் சப்த உருவகமான தன் புத்திரன் பரதன் நகரத்திற்கு வெளியே யுள்ள நந்திக்ராமத்திலிருக்க கைகேயி ஆக்ஷேபணை எதுவும் சொல்லவில்லை யென்று கருத்து. சகுணோபாசனைக்கு மந்த்ரம் அவசியமென்பதும் வெளியாகிறது. சங்கீதத்துக்கு ஸ்வரம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு மந்திரத்துக்கு முண்டு. சாமவேத மந்திரத்தை சாமகான மென்றே சொல்லுகிறோம். லய மென்பதே ஐக்கியம் அல்லது யோக மாகும். தியாகராஜர் முதலியமகான்கள் சங்கீதலயத்தி னாலேயே யோகசாதனம் செய்தார்களென்பது யாவரும் அறிந்தவிஷயம். ஞானயோக சாஸ்திரத்தில் சங்கீதமும் இடம் பெற்றிருக்கிற தென்பது நந்திக்ராமம் என்ற பதத் தால் விளங்குகிறது. யோகசாதனத்திற்கு சரீரம் அவஸ்ய மானதால் தேஹத்தைக் காப்பாற்றிக்கொள்ள வைத்திய சாஸ்திரமும் முக்கியமானதே; யுத்த காண்டத்தில், பிராணை

யற்று விழுந்தவர்களை உயிர்ப்பிக்க ஹனுமார் சஞ்சீவி பர்வ தத்தையே தூக்கிக் கொண்டு வந்ததாக வர்ணிப்பதிலிருந்து ஆயுர்வேத சாஸ்திரமும் ஞானயோக சம்பந்தப்பட்ட தென்று தெரிகிறது. சுந்தரகாண்டத்தில் ராவணனுடைய அரண்மனை வர்ணனையிலிருந்து சில்பசாஸ்திரமும் ராமா யணத்திலிருந்து அறியப்படக்கூடு மென்பது விளங்குகிறது. லங்கையே லிங்க சரீரமானபடியால் ராவணனுடைய அரண் மனையும் சரீரத்திலுள்ளதுதான். சகல சாஸ்திரங்களும் ராமாயணமாகிய ஞானயோகத்தில் அடங்கினவை தான் என்பது பிரசித்தமா யிருக்கிறது.

உபாசிக்கப்படும் மூர்த்தி எட்டுவிதமாயிருக்கலாம், கல், கட்டை, லோகம், ரத்னம், மண், மணல், படம், அல்லது மானசிகம். பரதன் ராமபதத்தை மானசிகமாய் சிரசில் வஹித்துவந்து நந்திக்ராமத்தில் ஆராதனை செய்த தாக அறியவேண்டும்.

மூலாதாரம் முதல் பிர்மரந்திரம் வரையுள்ள ஆறு ஸ்தானங்களை பரத்வாஜ ஆஸ்ரமமுதல் சித்ரகூடம் வரை யுள்ள ப்ரதேசமாக கல்பனை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தானங்களிலுள்ள ரிஷிகள் தங்கள் தலைகளுடனும், மண்டையோடுகளுடனும் மோட்சம் அடைந்தார்கள் என்று வர்ணனை. அவர்கள் ஜீவன்முக்தர்கள் என்று தாத்பரியம்.

சித்ரகூட பர்வதத்திலிருந்து தண்டகாரணியம் சென் றூர்கள். மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் தண்ட நீதி யைப்பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது ராமா

யணத்தில் ஆரணியமாகக் கல்பிக்கப்பட்டிருக்கிறது. அஷ்டாங்கயோகத்தில் யமமும், நியமும் தண்ட நீதிகளாகும். இவைகளில்லாமல் யோகம் சித்திக்காது. கம்பரும், பொய், காமம், வெகுளி முதலியவற்றை நிருதர் அல்லது ராட்சசர்களாக வர்ணித்திருக்கிறார். ஆத்ம ஞானமில்லாத சாதகர்களைத்தான் இந்த ராட்சசர்கள் துன்புறுத்தக்கூடும். ராமனுடைய தர்சனத்தால் ஞானமேற்பட்டபின் அவர்களுடைய தொந்திரவில்லை. அகஸ்தியர், அத்திரி முதலிய ரிஷிகளை ராட்சசர்கள் ஒன்றும் செய்யமுடியவில்லையென்பதைக் கவனிக்கவேண்டும். தீரத்துறந்தாரை காமக்ரோதாதிகள் அசைக்கமுடியாதென்பது கருத்து.

அயோத்தியா காண்டம் முற்றிற்று.

ஓம் தத் ஸத்!

தனுமானசி

அல்லது

ஆரண்யகாண்டம்

(நாமரூபங்களை மித்தையென்றுணர்ந்து சித்தசுத்தியடைதலே தனுமானசியாகும்.)

தண்டகா வனத்திலிருந்து பஞ்சவடிக்குப் போகும் போது விராதன் என்ற ராக்ஷசன் சீதையைத் தூக்கிப் போய் மடியில் வைத்துக்கொண்டான். விராதன் என்பது கர்வத்தின் உருவகம். விராதன் வதையை கர்வபங்கம் என்றறியவேண்டும்.

சரபங்க ஆஸ்ரமத்துக்கு ராமர் போகும் போது இந்திரன் அங்கு வந்திருந்தார். ஐம்புலன்களையும் அடக்கினவர்களுக்கே இந்திரதரிசனம் கிடைக்கும். அதாவது தம்மை இந்திரன் அல்லது ஜீவாத்மாவாக அறிந்து கொள்வார்கள். ராம தரிசனம் என்பது ஆத்ம ஞானப்ராப்தியாகும். சரபங்கர் என்றால் பிராணாயாமம் செய்கிறவரென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. பிராணாயாமத்தால் ஆத்ம ஞானமுண்டாகுமென்பது கருத்து.

பின்பு சுதீட்சணனுடைய ஆஸ்ரமத்துக்கு வருகிறார். சுதீட்சணன் என்பது புத்தியோக தத்வ உருவகம்.

ராமன் அங்கிருந்து புறப்பட்டுப் பத்து வருஷகாலம் இதர ரிஷிகளின் ஆஸ்ரமங்களுக்குச் சென்று பார்த்து விட்டுத்திரும்பி அங்கேயே வருகிறார். ஒரு ஆஸ்ரமத்தில்

எத்தனை காலமிருக்கிறார்? எத்தனை ஆஸ்ரமங்களுக்குப் போனார்? பத்து வருஷங்களில் எத்தனை ரிஷிகளைச் சந்தித்தார்? பத்து வருஷங்கள் என்பவை பத்து இந்திரியங்கள். புறக்கரணங்கள் சுத்தியான பின் அகக்கரண சுத்தியாக வேண்டும்.

சுதீட்சணருடைய ஆஸ்ரமத்திலிருந்து அகஸ்தியருடைய தபோ நிலையத்துக்கு வருகிறார். அவரிடமிருந்து வில்லும், இரண்டு அம்புகளும், ஒரு கத்தியும் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பிர்ம்ம ரிஷியிடம் இந்த ஆயுதங்கள் ஏது? அவருக்கு இவைகளினால் எப்படி உபயோகம்? வைராக்கியத்தை கத்தியாகவும், அம்புகளை ரேசக பூரகங்களாகவும், வில்லைக் கும்பகமாகவும் அறியவேண்டும். ஜகத்துமித்தை என்ற ரேசகமும், பிர்ம்மம் சத்யமென்ற பூரகமும், அஹம் பிர்மாஸ்மி என்ற கும்பகமும் ஞானிகளுடைய பிராணாயாமமாகும். இங்கு அகக்கரணங்கள் சுத்தியாகின்றன.

பிறகு ராமர் பஞ்சவடிக்குப்போகிறார். அங்கே ஜடாயு பட்சி வாசம் செய்கிறது. அது, தான், தசரதனின் ஸ்நேகிதன் என்று சொல்லுகிறது. பஞ்சவடி என்பது பஞ்சபூதங்களாலமைந்த சரீரம். ஜடாயுவென்பது ஜீவன். தசரதன் மனதின் உருவகம். பஞ்சவடியில் லெட்சுமணன் ஒரு ஆஸ்ரமத்தைக்கட்டுகிறார். அதைக்கண்டு ராமர் சந்தோஷப்பட்டு தம்பியைக் கட்டிக்கொள்ளுகிறார். ஜாக்ரதாவஸ்தை துரியாவஸ்தையோடு கூடி சுகப்படுவதை இவ்விதம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

விஸ்ரவசின் புத்திரியான சூர்ப்பனகை ராமனிடம் வந்து தன்னை மணக்கும்படி கேட்கிறாள். அவள் ராட்சசி யானாலும் ரிஷியின் புத்திரியாகையால் அவள் உலக விஷய யிச்சையின் உருவகமல்ல. ஸ்வர்க்க இச்சையேயாம். ஞானயோகிக்கு ஸ்வர்க்க இச்சையுங்கூடாது. ஆகையால் அவள் திரஸ்கரிக்கப்படுகிறாள்.

உடனே 14 ராக்ஷசத்தலைவர்கள் 14000 வீரர்களுடன் ராமனை எதிர்க்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் தனியாக நின்று ராமன் சம்ஹாரம் செய்கிறான். இங்கு ஞானமானது அகக்கரணம் நான்கையும் புறக்கரணம் பத்தையும் அவை களின் பலவித சேஷ்டைகளையும் நாசப்படுத்துகிறது என்று அறியவேண்டும்.

ராக்ஷசர்கள் நினைத்த உருவத்தை யெடுக்கவல்லவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் நாம ரூபத்தோடு கூடிய ஜகத்தை லக்ஷியம் செய்யாத வர்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும். சீதையை நாம ரூபத்தோடு கூடிய ஒரு ஸ்திரீயாகக் கருதினால், ராவணன் மண்டோதரியாகிய தன் மனைவியை சீதையைப் போல் தோன்றும்படி செய்து அவளை அனுபவிக்கமுடியாதா? சீதையை சச்சிதானந்த பிர்மத்தின் சுத்தமாயா சக்தி யென்றே யுணரவேண்டும். ராவணன் மாரீசனை மானாய் விளையாடச்செய்து சீதையை அபகரிக்கிறான். மாயையை மாயையால்தான் ஜயிக்கலாம். மாரீசனாகிய அவித்யா மாயை த்யாகம் செய்யப்பட்டு சுத்த மாயையான சீதை ஸ்வீகரிக்கப்படுகிறாள்.

சுத்த மாயை வந்தவுடன் ஜீவோபாதி போய், ஈஸ்வ ரோபாதி வந்து விடுகிறது. ஜடாயு ஜீவனின் உருவகம்; ராவணன் சுத்த மாயா சம்பந்தத்தால் ஈஸ்வரனுகி விடுகிறுன். ஜடாயு கொல்லப்படுகிறது. ராவணன் தன் விமானம் நாசமாய்ப் போனபோதிலும் தான் ஈஸ்வரனுய் விட்டபடியால் சீதையைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து சென்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சீதையை அசோகவனத்தில் கொண்டு போய்ச் சேர்க் கிறுன். அசோகம் என்றுல் துக்கமற்ற ஸ்தானம். வனம் என்றுல் பூஜிக்கப்படக்கூடியது. லங்கை என்பது லிங்க சரீரம். பிர்மசக்தி என்னிடமிருக்கிறது. ஆகையால் நான் பிர்ம்மாவாகயிருக்கிறேன் என்ற அஹங்காரமுண்டாகிறது. இந்த அஹங்காரமும் ஒழியவேண்டும். ஆத்மத்யான யோகத்தால்தான் அது கைகூடும். பகவத்கீதையில் சொல் லப்பட்ட அனந்நிய சிந்தனேயே யிதுவாகும். இந்த த்யான யோகத்தின் க்ஷேமத்தை பகவானுகிய அந்தராத்மாவே வகிக்கிறுர். த்யான யோகமே ஸ்வதர்மமாகும்.

ராம லெட்சுமணர்கள் கபந்தனுல் எதிர்க்கப்படு கிறுர்கள். கபந்தனுடைய தலே அவனுடைய வயிற்றிலிருக் கிறது. இரண்டு நீண்ட கைகளேயுடையவனு யிருக்கிறுன். சத்வகுணம் குன்றி தமோ குணமேலிட்ட அசுரத்வத்தை கபந்தனுக உருவகப்படுத்தியிருக்கிறது. ஞானயோகிக்கும் துக்க முண்டாகுமென்பதும் அதை ஜயிக்க வேண்டுமென் பதும் அறியப்படவேண்டும். கபந்தன் கொல்லப்படும் போது ராமனுக்கு மதங்காஸ்ரமத்தைப்பற்றிச் சொல்லு

கிறான். துக்க நிவிர்த்தியால் சுகப்ராப்தி யேற்படுகிற தென்பது விளங்குகிறது.

ராமனும் லெட்சுமணனும் பின்பு மதங்காஸ்ரமத்துக்குப்போகிறார்கள். வழியில் சபரி என்ற ஸ்திரீ தரிசனம் செய்கிறாள். பக்தியுடன் பெரியோர்களுக்கு வழிபாடு செய்தற்கு சபரா என்று பெயர். அவள் ராம லெட்சுமணர்களை உபசரித்து மதங்காஸ்ரமத்தைச் சுற்றிக்காட்டியபின், ராமனுடைய உத்திரவின்பேரில் அக்னிப்ரவேசம் செய்து நூதன திவ்ய சரீரத்தைத் தரிக்கிறாள். பக்தி, ஞானத்துக்கும், மோட்சத்துக்கும் சாதனமென்பது விளங்குகிறது. காட்டு யானைகள் மதங்காஸ்ரமத் தண்டை போகிறதில்லை என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. காமக்ரோதாதிகளைத் தான் காட்டு யானைகளாக உருவகப்படுத்தியிருக்கிறது. ரிஷிகள் ஏழுசமுத்திரங்களையும் அங்கே வரவழைத்து வைத்திருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சப்தப்ரகிருதிகளும் சுத்தப்பட்டு வசப்பட்டிருந்தனவென்ற பொருள்.

அங்கிருந்து ரிஸ்யமூக மலைக்குப் போனார்கள். அங்கே தான் சுக்ரீவன் வாசம் செய்தான். மூகம் என்றால் அஞ்ஞானம். ரிஸ்ய என்றால் நாசம் செய்தல். சுக்ரீவன் என்றால் விவேகம். அஞ்ஞானமில்லாதவிடத்தில் விவேகமிருக்கும்.

தனுமானசி என்ற ஆரண்யகாண்டம் முற்றிற்று.

ஓம் தத் சத்!

சத்வாபத்தி

அல்லது

கிஷ்கிந்தா காண்டம்

(சித்த சுத்தியாலுண்டான மெய்யுணர்வே சத்வாபத்தியாம்.)

ராட்சசர்களைப் போலவே வானரங்களும் நினைத்த உருவத்தை எடுக்கவல்லவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது பிர்ம சக்திகளாகிய தத்வங்களையே வானரர்களாக உருவகப் படுத்தியிருக்கிற தென்பதை முக்கியமான சிலவற்றின் உற்பத்திகளைப்பற்றித் தெரிந்து கொண்டால் நன்கறிய லாம்.

ஹனுமார் உற்பத்தி விபரம்.

சுமேரு பர்வதத்தில் கேசரி யென்ற ஒரு அரசன் அஞ்சனு தேவியுடன் வசித்தான். வாயு பகவானின் சேர்க்கையால் அஞ்சனை ஒரு குழந்தையைப் பெற்றாள். பிறந்த குழந்தையை விட்டுவிட்டு, தாயார், வெளியே சென்றிருந்த போது, பசியால் அழுத குழந்தை சூரியன் உதயமாவதைப் பார்த்து அதை ஒரு பழமென்று நினைத்து ஆகாயத்தில் தாண்டிப்பிடிக்கப் போயிற்று. அன்று சூரியகிரஹண கால மாயிருந்ததால் ராகு சூரியனைப்பிடிக்க வந்திருந்தது. குழந்தை சூரியனுடைய ரதத்தில் குதித்ததும் ராகு பயந்து போய் இந்திரனிடம் முறையிட்டான். இந்திரன் தன் ஐராவதத்தின் மீதேறிக்கொண்டு ராகுவுடன் அங்கு வந்ததும் குழந்தை ராகுமீதும், யானையின் மீதும் தாவிக்

குதித்தது. இந்திரன் கோபமில்லாமல் வஜ்ராயுதத்தாலடித்ததும் குழந்தை கீழே மலேமேல் விழுந்து மேல் வாய்க் கட்டையில் காயப்பட்டு, ப்ரக்ஞையிழந்திருந்தது. வாயு பகவான் இதனையறிந்து தன்னுடைய அந்தக் குழந்தையை ஒரு குகைக்குள் கொண்டுபோய் வைத்துவிட்டு அசைவற்றிருந்தார்.

உலகத்தில் வாயு சலனம் நின்றுபோனதினல் தேவர்களும், மனுஷ்யர்களும், மற்ற ப்ராணிவர்க்கங்களும் மூச்சுவிடமுடியாமல் தவித்தார்கள். பிர்ம்மாவின் அனுக்ரகத்தால் வாயு பகவான் சமாதானம் செய்யப்பட்டு எல்லாரும் ஸ்வாசம் விட ஆரம்பித்தார்கள். அப்பொழுது சகல தேவர்களும் ஹனுமாருக்கு பலவித வரன்களை யளித்தார்கள். சிரஞ்சீவி யென்ற நித்தியத்வத்தையுமடைந்தார்.

சுமேரு பர்வதம் எங்கிருக்கிறது? பிறந்த குழந்தை சூரியனைப்பிடிக்கப் பறந்துபோக இயலுமா? அது பக்ஷியா? ராகு என்ற க்ரஹம் இந்தக் குழந்தையைக் கண்டு பயந்து ஓடிற்று என்ருல் அர்த்தம் என்ன?

சுமேரு வென்ருல் வேதஞானம். கேசரி சிங்கத்தின் பெயர். அஞ்சனுவென்ருல் கண்களின் நோக்கம். வாயு பிராணுயாம சக்தி. சிங்கத்தின் பார்வையை அரிமா நோக்கென்பார்கள். முன்னும், பின்னும் பார்க்கும் சக்தியுடையது. சென்ற காலத்தையும் எதிர் காலத்தையும் அறியக்கூடிய ஞானமும் ப்ராணுயாமத்தாலுண்டான ஆத்மஞானமும் சேர்ந்த ஒரு ஜீவனை ஹனுமார் என்று கல்பிக்கப்

பட்டிருக்கிறது. ஆத்மாவே சூரியன். ஆத்ம தரிசனத்துக்குத் தடையே ராகு. குருவின் அனுக்ரஹம் அவசியம் தேவையென்பதை நிரூபிக்க பிர்ம்மா தரிசனம் கொடுத்ததாக வர்ணனை.

வாலி சுக்ரீவர்களின் ஜனன வரலாறு.

முன் சொல்லப்பட்ட மேரு பர்வதத்தின் சிகரத்தில் 800 மைல் விஸ்தாரமுள்ள கூடமொன்றிருந்தது. அதில் நான்முகப் பிர்ம்மா நிஷ்டையிலிருந்தபொழுது அவரது கண்களினின்று ஆனந்தக் கண்ணீர் வடியக் கையில் ஏந்தித் தரையில் விட்டார். உடனே அதிலிருந்து ரிக்ஷரெஜஸ் என்ற வானரன் தோன்றினுன். பிர்மாவின் உத்திரவுப்படி அருகாமையிலுள்ள மலையடிவாரத்திலுள்ள கிழங்குகளையும், பழங்களையும் தின்று ஜீவித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் சமீபத்திலுள்ள ஒரு தடாகத்தில் தண்ணீர் குடிக்கப் போய்க் குனிந்து பார்த்தபோது தன்னுடைய பிரதிபிம்பத்தைக்கண்டான். அது தன்னுடைய விரோதியென்று நினைத்து குளத்தில் குதித்துப்பார்த்து ஒருவரையுங் காணுமல் கரை ஏறினபொழுது தன்னுருவம் மாறி பெண்ணுயிருப்பதைக் கண்டான். அதே சமயத்தில் இந்திரனும், சூரியனும் ஆகாயத்தினின்று இந்த பெண்ணுருவத்தைக் கண்டு காதலுற்றனர். இருவரும் தங்கள் வீரியங்களை நழுவவிட்டனர். இந்திரனுடைய ஸ்கலிதம் அப்பெண்ணுருவத்தின் தலை ரோமத்திலும், சூரியனுடையது கழுத்திலும் விழுந்தன. உடனே வாலியும், சுக்ரீவனும் தோன்றினர்கள். இந்திரன் வாலிக்கு ஒரு தங்க மாலையைக்

கொடுத்துவிட்டுச் சென்றான். சூரியன் சுக்ரீவனை ஹனுமாரிடம் ஸ்நேகம் செய்துவிட்டுப் போனான். மறுநாள் காலையில் இந்த ஸ்திரீ தன்னுடைய பழய புருஷ ரூபத்தைப் பெற்றாள். இரு குழந்தைகளையுங் கூட்டிக்கொண்டு பிர்மாவிடம் சென்றான். அவர் தேவதூதனை யழைத்து அந்த மூன்று பேரையும் கிஷ்கிந்தைக்குக் கூட்டிச்சென்று அந்த வானரனை குரங்குகளுக்கெல்லாம் அரசனாக நியமிக்கும்படி செய்தார். அந்த அரசன் வாலிக்கும், சுக்ரீவனுக்கும் தாயும், தகப்பனுமாகிறான்.

பரமாத்மாவை சூரியனாகவும், ஜீவாத்மாவை இந்திரனாகவும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சுக்ரீவனை ஆத்ம விவேகத்தின் உருவகமாகவும், வாலியை அநாத்ம விவேகத்தின் உருவகமாகவும் எளிதில் புரிந்துகொள்ளலாம். மேற்கண்ட வரலாற்றை உலக சரித்திரமென்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

ஆத்ம விவேகத்தால்தான் ஞானத்தையடைய முடியுமென்பதையும், அநாத்ம விவேகத்தைக் களையவேண்டுமென்பதையும், ராமன் சுக்ரீவனை ஸ்நேகம் செய்துகொண்டு வாலியைக்கொன்றான் என்ற கல்பனை விளக்குகிறது. அநாத்ம விஷயஞானமுள்ளவன் ஆத்ம சாக்ஷாத்காரம் பெறமுடியாதென்பதை ராமன் வாலியை மறைந்து கொன்றானென்று வர்ணித்திருப்பதிலிருந்து அறிந்துகொள்ளல் வேண்டும்.

வாலி, சுக்ரீவனுடைய மனைவியான ருமாவைக் கற்பழித்தானென்று ராமரால் குற்றஞ்சாட்டப்படுகிறான்.

ஆனால் வாலி வதத்திற்குப் பிறகு சுக்ரீவன் தன் அண்ணன் மனைவியான தாரையைக் கூடி சுகித்ததைப்பார்த்து ராமர் குற்றஞ் சொல்லவில்லை. ஏன் ?

ரு என்றால் சப்தம். மா என்றால் இல்லை. ருமா வென்றால் சப்தமில்லாதது. தாரை என்றால் ஓம் என்ற பலத்த சப்தம். ஆத்ம ஞானமில்லாதவன் மந்த்ரங்களை வெளியில் உச்சரிக்கவேண்டும். மனதில் நினைத்துக்கொண்டால் போதாது. விவேகமில்லாத வாலிக்கு தாரை தான் மந்த்ர சக்தி. விவேகமுடைய சுக்ரீவன் மனதிலும் தியானிக்கலாம். வெளிப்படையாயும் உச்சரிக்கலாம். வாலியும் சுக்ரீவனும் வானரங்களுமல்ல, ருமாவும், தாரையும் அவைகளின் மனைவிகளுமல்ல. இவைகளெல்லாம் ஞானயோகியின் அவஸ்தா பேதங்களாம். பூர்வீக இந்தியா சரித்திரத்தில் குரங்குகள் தமிழிலும், சம்ஸ்கிருதத்திலும் பேசினவென்றும், ஆகாசத்தில் பறந்தனவென்றும் இதிஹாச வர்ணனையின் மெய்ப்பொருள் தெரியாது ராமாயண காலக்ஷேபங்களும், வாலிவதை விவகாரங்களும் நடக்கின்றன. இதன்றோ கலியின் மகிமை.

கைவல்லிய நவநீதச் செய்யுள் :—

“ மலடி மைந்தனும் தாணுவில் புருஷனும்
வான்மலர் முடி சூடி
இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை
இரசிதம் விலை பேசி
கலகமாய் முயல் கொம்பினால் குத்தியே
களைத் திருவரு மாண்டார்
அலகை ஆயினர் எனும் விவகாரத்தை
அறிந்தவன் மயங் கானே. ”

இங்கு ஒருவாறு பொருத்தமாகும்.

சீதையைத் தேடுவதற்காக அனுப்பப்பட்ட வானரங்கள் விந்திய பருவதத்தினடிவாரத்திலிருந்து புறப்பட்டதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. நான்கு திக்குகளுக்கும் அவைகள் அனுப்பப்படுகின்றன. வினதன் என்ற வானரன் சூரியனுடையவும், சந்திரனுடையவும் குமாரர்களையும் இதர வானர வீரர்களையும் கூட்டிக்கொண்டு கிழக்குத் திக்கில் செல்லும்படி கட்டளையிடப்படுகிறான். கங்கை, சிந்து முதலிய நதிக்கரைகளையும், காசி, மகதா முதலிய நகரங்களையும் ஜாக்ரதையாய்க் கவனித்துப் பார்த்து இன்னும் கிழக்கே செங்கடல், கருடனுடைய ஸ்தானம், பால் சமுத்திரம், சுத்த ஜலசமுத்திரம், தங்கமலை, உதய பர்வத முதலிய இடங்களையும் தேடிப்பார்க்கும்படி சுக்ரீவன் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விந்திய மலைக்குக் கிழக்கில் மேற்சொன்ன நதிகளும், நகரங்களுமில்லை. அவைகள் வடக்கே யிருக்கின்றன. இன்னும் கிழக்கேயுள்ளதாகச் சொல்லப்பட்ட செங்கடல் முதலியவைகளில் ஒன்றாவது தற்காலத்தில் பார்க்கப்பட்ட பூகோளத்திலில்லை. ராமாயண சாஸ்திரத்தில் வர்ணிக்கப்பட்டவையெல்லாம், பூகோள சாஸ்திரத்திலும், இந்தியா சரித்திரத்திலும் சம்பந்தப்படாத ஞானயோக சாஸ்திரத்தைச் சேர்ந்தவையென்று தெரிந்துகொண்டாலன்றி ராமாயணத்தை நாஸ்திகர்களைப்போல் பொய்யான கட்டுக்கதையென்றே ஆஸ்திகர்களும் சொல்லத்துணிவார்கள். பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்றும், சூரியன் தன்னையே சுற்றிக்கொண்டு இருந்தவிடத்திலேயே யிருக்கிறதென்றும், வான சாஸ்திரப்படி தெரிந்துகொண்டும், அது உதயகிரியி

விருந்து புறப்பட்டு பூமியைச் சுற்றிவருகிற தென்பதை எவரும் ஒத்துக்கொள்ள முடியாது. உதயபர்வத மென்பது ஆத்மஞானமுதயமாகும் நிலேயேபாகும். அதை ஞான யோகிகள் தானறியக் கூடும். கிழக்கே சென்றவானரத் தலேவனுடன் சூரியபுத்திரர்களும் சந்திரன் புத்திரர்களும் சென்றார்களென்றால் ஞானசக்தியும் மனேசக்தியும் யோகியிடம் குடிகொண்டிருக்கு மென்பதே.

வால்மீகி ராமாயணத்தில் வர்ணித்தபடியே மேற் கண்ட கிழக்குதிக்கின் விளக்கம் பின்வருமாறு:—

"கிழக்கே சிவந்த ஜலத்துடன் கூடிய செங்கடலிருக்கிறது. அதில் விஸ்வகர்மாவினால் கருடனுக்காகக் கட்டப்பட்ட அரண்மனேயுடன் கூடிய கூடசால்மலி என்ற மலேயிருக்கிறது. இந்த மலேயின் சிகரங்களில் பயங்கரமான மந்தேஹாள் என்ற ராக்ஷசர்கள் தொங்கிக்கொண்டிருக்கிறார்கள். சூரியன் உதயமாகும்போது அவர்கள் ஜலத்தில் குதிக்கிறார்கள். ஆனால் தினந்தோறும் ப்ராமணர்களின் சக்தியால் அழிக்கப்பட்டு சூரிய வெப்பத்தால் பொசுக்கப்படுகிறார்கள். ஆனாலும் மீண்டும் மீண்டும் அங்கேயே தொங்கி வருகிறார்கள்.

இதற்கப்பால் வெண்மையான பால் சமுத்திரமிருக்கிறது. அதற்கப்பால் சுத்த ஜலமுள்ள பயங்கரமான சமுத்திர மிருக்கிறது. இதற்கப்பால் ஜாதரூபசிலே என்ற தங்கமலேயிருக்கிறது. பூமியைத்தாங்கும் அனந்தன் வெண்மை நிறத்துடன் ஆயிரம் தலேகளுடன் நீலவஸ்திரமணிந்து இந்த பர்வதத்தில் வசித்து வருகிறார். இதற்கப்

பால் உதயபர்வதமென்னும் ஸ்வர்ணமலையிருக்கிறது. அதன் சிகரமானது தங்கமயமான சுமனசா என்ற பெயர் கொண்டது. 10 யோஜனை உயரமும் ஒரு யோசனை விஸ்தாரமு முள்ளது (ஒரு யோசனை =8 மைல்) இந்த சுமனசாவின் மேல்தான் விஷ்ணுவாமனவதாரம் செய்து அதில் முதல் அடியை வைத்து இரண்டாவதை மேருவின் மேல் வைத்தார். ஜம்பூத்விபத்திற்கு வடக்கே சென்றால் சூரியனும், சுமனசும் காணப்படும். இந்த சூரியனுக்கு முன்பாகப் பிரகாசிப்பது சுதர்சன த்வீபம். எல்லா ப்ராணி களுக்கும் ப்ரகாசத்தையும் பார்வையையும் கொடுப்பது இதுவே. தங்கமலையின் ப்ரகாசமும் இந்தசூரியனின் ப்ரகாச மும் சேர்ந்து பூர்வ சந்தியையை உண்டாக்குகிறது. அது சிகப்பாய் ப்ராகாசிக்கிறது. இந்த சந்த்யையானது ப்ருதிவிக்கும், புவனத்திற்கும் ஏற்பட்ட முதல் வாசலாக வும், சூரியன் உதயமாக முதல் வாசலாகவுமிருப்பதால் இதற்கு பூர்வதிக் கென்று பெயர். இதற்கப்பால் தேவர் களின் வாசஸ்தானம். அங்கு சூரிய சந்திரர்களில்லாததால் அங்கே ஒரே இருட்டாயும், பார்க்கமுடியாமலுமிருக் கிறது."

மேற்கண்ட வர்ணனையை உள்ளபடியே படித்துத் தெரிந்துகொண்டால்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் அப்படிக் காண்பதறிவு."

என்று சொல்லவேண்டியது தான். இது வேதசம்பந்த

மானது. தைத்ரிய ஆரிண்யகம் ப்ரஸ்னம்2 அநுவாகம் 1ல் மேற்சொன்ன மந்தேஹாளேப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிறது. வேதத்தை இதிஹாச புராணங்களைக் கொண்டு வியாக்யானம் செய்துகொள்ள வேண்டுமாகையால் விஷ்ணு புராணத்தில் இதன் விளக்கத்தைப் பார்க்கலாம்.

ஜலத்தை ஏற்கனவே தத்வம் என்று வர்ணித்திருக்கிறது. ரத்தஜலம் என்பது 24-வது தத்வம். அதுதான் மஹத்தான அஹங்காரம். இது பெரிய சத்துருவான படியால் ரக்தஜலம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. விஸ்வகர்மாவை சுத்தமான சித்தமாகவும், கூடசால் மலிமலேயை, அசைக்க முடியாத அத்வைதஞானமென்றும், கருடனை வேதமாகவும், மந்தேஹாளை பாபரூபமான ஆசைகளென்றும், சூரியனை ஆத்ம ஞானமென்றும், பிராமணர்களின் சக்தியை காயத்ரீமந்த்ரமென்றும் இந்த மந்த்ரஜபத்தோடு சந்தியாகாலத்தில் அர்க்யம்கொடுப்பதால் பாபரூபமான ஆசைகள் நசிக்கிற தென்றும், ஆனால் தினந்தோறும் அவ்வாசைகள் உண்டாவதால் தினந்தோறும் சந்த்யா உபாசனை செய்யப்பட வேண்டுமென்றும் கருத்து. பால்சமுத்திர மென்பது ஞானம்ருதம். சுத்தஜல மென்பது பரோக்ஷஞானம். ஜாதரூபசிலே யென்பது கூடஸ்தபிர்மம். அனந்தன் என்பது ஆதிசேஷன். கடைசியாய் மிஞ்சுகிற சாங்க்ய ஞானம் என்ற பொருள். உதயபர்வதம் என்பது ஞானோதய ஸ்தானம். சுமனசா வென்பது களங்கமற்ற சித்தம். 10 யோசனை யென்பது பத்து சுத்த இந்திரியங்கள். ஒரு யோசனை யென்பது மெய்யறிவு அல்லது புத்தி. விஷ்ணுவென்ருல் அந்தர்முக

சித்தவிர்த்தி. ஜம்பூத்வீபமென்பது கர்மகாண்டம். வடக்கு என்பது ஞானமார்க்கம். சுதர்சனம் என்பது சாக்ஷாத்காரம். சந்த்யை என்பது ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியம். ருதுவீ அல்லது புவன மென்பது ஞானபூமி. மண்பூமி அல்ல.

இவ்விதம் வியாக்யானம் செய்து தெரிந்து கொள்வது :—

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவர் குறளுக்கு இணங்கும். கிஷ்கு என்றால் 24 அங்குல நீளமுள்ள ஓர் அளவு. கிஷ்கிந்தா காண்டத்தில் தான் 24 அக்ஷரங்களை யுடைய காயத்ரீ மந்திரத்தின் பெருமை வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ராமாயணம் காயத்ரீ ஸ்வரூபமென்று சொல்லப்பட்டிருப்பதால், கிஷ்கிந்தா காண்டம் சப்தகாண்டங்களில் மத்தியிலமைந்திருக்கிறது. ராமாயண மென்ற பெரியமாலையில் ரத்னம் இழைத்தாற் போல ராமதூதனாக வர்ணிக்கப்பட்ட ஹனுமாரின் உற்பத்தி இந்தக் காண்டத்தில்தான் வர்ணிக்கப்படுகிறது. ஹனுமார் ஆத்மத்யானத்தின் உருவகம். த்யானம் ஞானத்துக்கு சாதனமானபடியால் ஹனுமாரை ராமதூதனென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு திசையில் ஒரு வானரன் ரிஷிபுத்திரர்களுடன் அனுப்பப்பட்டான். சிந்துநதி இந்தத் திசையிலுமிருப்பதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இறகு முளைத்த

சிங்கங்களிருப்பதாயும், 24 கோடி கந்தர்வர்களிருப்பதாயும் அவைகளைக் கண்டு வானரர்கள் பயப்பட வேண்டியதில்லை யென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இறகு முளைத்த வைகள் பக்ஷிகளாகும். இந்திரியங்களைப் பக்ஷிகளாக வர்ணிப்பது வழக்கம். இறகு முளைத்த சிங்கங்கள் என்றால் மிருக பக்ஷிகள். அதாவது மிருகத்தனமான ஆசாபாசங்கள் (Beastly passions). கந்தர்வர்கள் என்பவை மனோ விலாச கல்பனைகள். ராக்ஷசர்களும், வானரர்களும் நினைத்த உருவத்தை எடுக்கவல்லவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், நாமரூப ஜகத்தைக் கல்பிதம் என்று உணர்ந்தவர்களேயாவார்கள். கல்பிதமான கந்தர்வர்களைக் கண்டு பயப்படாதவர்களென்று சொன்னதின் கருத்து இதுவே. இன்னும் மேற்கே அஸ்தமன பர்வதமிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவப்பிர்மலயத்தையே அஸ்தமனமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். சூரியனுக்கு அஸ்தமனம் கிடையாது. இந்தத்திசையில் ரிஷிபுத்திரர்களோடு போனதாகச் சொன்னபடியால் தத்வஞானத்துடன் போனதாகக் கருதவேண்டும். வடக்குத் திசையில் போன வானரத்துக்கு சுக்ரீவன் கொடுத்த வர்ணனை கவனிக்கத்தக்கது. சதபலி என்ற வானரன் வைவஸ்வதனுடைய புத்திரர்களோடு அனுப்பப்படுகிறான். வைவஸ்வதன் என்றால் யமன். சதபலி யென்றால் நூறு யாகம் செய்தவன். வடக்கு திக்கு என்பது ஞான மார்க்கம். யமனுடைய புத்திரர்களென்றால் யமத்தினுடைய பத்து அங்கங்களான அஹிம்சா, சத்யம் முதலியவைகள். ஞான மார்க்கத்தில் பிரவேசிக்கின்றவன் தியாகியாகவும், யமதர்மத்தைக் கைக்கொண்டவனாயு

மிருக்க வேண்டுமென்பது கருத்து. இந்தத்திசையிலிருப்பதாக வர்ணிக்கப்படுகிற எதும் இம்மண்ணுலகில் கிடையாது. எல்லாம் யோகசாஸ்திர வர்ணனையேயாகும்.

தெற்கு திசையைக் கவனிப்போம். பஞ்சவடியிலிருந்து தெற்கே வந்துகொண்டே கிஷ்கிந்தைக்கு ராமனும் லெட்சுமணனும் வந்ததாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கிஷ்கிந்தை, பம்பை, ரிஸ்யமூகம் முதலியவை பஞ்சவடிக்குத் தெற்கே யிருப்பதாக ராமாயண வர்ணனை. தெற்கே அனுப்பப்பட்ட ஹனுமார் முதலியவர்கள் விந்தியபர்வதத்தின் தெற்கு அடிவாரத்திலிருந்து சமுத்திரத்தைப் பார்த்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. லங்கைக்கும் விந்திய பருவதத்திற்கும் மத்தியில் 100 யோஜனை அல்லது 800 மைல் அகலமுள்ள சமுத்திரமிருந்ததாக நினைக்க வேண்டும். சுக்ரீவன் தெற்குத்திக்கை வர்ணிக்கும்போது காவேரி, தாம்ரவர்ணி, பாண்டிய, சோள, சேர, கேரள முதலிய பிரதேசங்களைப் பற்றிச் சொல்லுகிறான். ஆராய்ச்சிக்காரர்கள் பஞ்சவடியை நாசிக்குக்கு சமீபத்தில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். விந்தியமலை அதற்கு வடக்கேயிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். பூகோள சாஸ்திரத்துக்கும் ராமாயண சாஸ்திரத்துக்கும் ஸ்நான ப்ராப்திகூடயில்லை யென்பது விளங்கவில்லையா. ராமாயணத்தில் காணப்படும் க்ஷேத்ரங்கள் *மானசமேயன்றி பௌமக்ஷேத்திரங்களல்ல வென்றுணர வேண்டும்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

---

* மானச, பௌம க்ஷேத்திரங்களின் வித்தியாசத்தை 60-ம் பக்கத்தில் விவரித்திருக்கிறது.

அசம்சக்தி

அல்லது

சுந்தர காண்டம்

(மித்யாஞான அஹங்கார நீக்கமே அசம்சக்தியாகும்)

இந்தக் காண்டத்திற்கு சுந்தர மென்ற பெயர் ஏற்பட்டிருக்கிறதைப்பற்றி பலவிதமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. சுந்தரமென்றால் அழகு என்று அர்த்தம் சொல்லுவதானல் மற்ற காண்டங்கள் அழகில் குறைந்த வைகளா வென்ற கேள்விக்குப் பதில்கூற வேண்டும். (சும்—அகங்காரம்—தாரயதி—வெட்டுகிறது) சுந்தரம் என்றால் அகங்கார பங்கம். ராவணனை மகத்தான அகங்கார உருவகம் என்று ஏற்கனவே சொல்லப்பட்டது. ஆத்மசக்தியை யறிந்திருப்பதே ராவணதத்வமாகும். ராவணன் தவத்தினால் சக்திபெற்றான். ஹனுமான் சக்தியுடனேயே பிறந்தான். தேவதைகளுடைய வரத்தையும் பெற்றான். ஆகையால் ராவணனைவிட அதிக சக்தியுடையவனாகிலும் சாபவியாஜத்தால் தன் பலத்தை யறியாதவனாயிருந்தான். ராமரிடம் மோதிரத்தைப் பெற்றதும் ஹனுமார் தன்னை ஆத்மாவாகவே நினைத்துவிட்டார். தாரணையினால் த்யானமும் த்யானத்தினால் ஞானமும் உண்டாகிறது. மோதிரம் ஆத்மஞானதாரணையே யாகும். மரவுரிதரித்த ராமனிடத்தில் தங்கமோதிரமேது. த்யானத்திற்கு ராம மந்த்ரம் ஞானயோகிக்கு உபதேசம் செய்யப்பட்டது என்று கருத்து. ஞானயோகியின் அஷ்டமாசித்திகளை ஹனுமார் லங்கையில் செய்த அமானுஷ்யமான செய்கைகளாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. லங்கை யென்பது லிங்க அல்லது சூட்சும சரீரமேதான்.

திரிகூட மலைமேல் விஸ்வகர்மாவால் லங்கை கட்டப் பட்டது என்பது சாஸ்திர வர்ணனை. திரிகூடமென்பது சத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணக்கூட்டம். விஸ்வகர்மா வென்றால் சுத்த சித்தம்.

சூக்ஷ்ம சரீரமென்பது கல்பனை. இப்பேற்பட்ட லிங்க சரீரமாகிய லங்கையில் "தான்" என்ற அஹங்காரம் வாசம் செய்கிறதென்பதை ராவணன் லங்கையில் அரசனானான் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இது லௌகீக மனுஷ்யனுடைய அஹங்காரமல்ல. இது மஹத்தானது. அஹம் பிர்மாஸ்மி என்ற த்ருஷ்டியுடன் கூடினது. பிர்ம்ம சக்தியான சீதை தன்னிடமிருக்கிறதென்கிற இறுமாப்பும் தானே பிர்ம்மமென்கிற அஹங்காரமும் ஒழியவேண்டும்.

ஹனுமாருடன் யுத்தம் செய்தவர்களின் இதிஹாச வர்ணனையின் தத்வம் என்னவென்றால்- கிங்கரர்கள் என்பது கர்மடர்கள். ராவணின் எட்டு மந்திரிகளின் குமாரர்கள் அஷ்டமாசித்திகள். ஐந்து சேனாதிபதிகள், பஞ்சேந்திரியங்கள். அக்ஷகுமாரன் பஞ்ச இந்திரியங்களின் நியந்தாவான புத்தி. ஹனுமானாகிய ஆத்ம த்யானத்தினிடத்து இவைகள் நிற்கமுடியாதென்பது விளங்குகிறது.

ராக்ஷசர்களோடு ஹனுமான் யுத்தம் செய்கிறபோது மோதிரத்தை எப்படிக் காப்பாற்றினாரென்பது ஒரு கேள்வி. ராமமந்திர த்யானமே மோதிர தாரணையென்று உணர வேண்டும்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

பதார்த்த பாவனை

அல்லது

யுத்த காண்டம்

(த்ரிபுடி நீக்கமும் ஆனந்த உதயமும் பதார்த்த பாவனையாம்)

ராம ராவண யுத்தம் எங்கு நடந்தது? லங்கையோ பூராவும் ஹனுமாரால் எரிக்கப்பட்டு விட்டது. சீதை யிருந்த அசோக மர நிழலும், விபிஷணனுடைய வீடும் தவிர, சகலமும் சாம்பலாய்ப் போய்விட்டதென்றும், சகல ஜனங்களும் வஸ்திரங்கூட யில்லாமல் விடப்பட்டார் களென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சுத்த மாயையான சீதையும், பக்திரூபமான விபீஷணனும் மட்டும் பாதிக்கப் படவில்லை. லங்கை சூக்ஷ்ம சரீரமென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. தசரதனை சித்தம் நசித்தவுடன் ராவணனை அஹங்காரம் அயோத்தியைப் பற்றிக்கொண்டது. நான், எனது என்ற அஹங்கார, மமகாரங்கள் உண்டாகும் போது விவகாரமேற்படும். இந்த விவகாரத்தைத்தான் ராமனின் வனப்ரவேசமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே ராவணனை சுத்த அஹங்கார தத்வமாக விவரிக்கப்பட்டது. இந்த அஹங்காரத்துக்கும் சுத்த வாசனைகளுண்டு. மோக்ஷமடைய இந்த வாசனைகளும் போகவேண்டும்.

தூம் ராக்ஷன், வஜ்ரதம்ஷ்ட்ரன், அகம்பனன், ப்ரஹஸ்தன், கும்பகர்ணன், நராந்தகன், தேவாந்தகன், அதிகாயன், கும்பன், நிகும்பன், மகாராட்சன், இந்திரஜித், விபோக்ஷன், மகோதரன், மகாபார்ஸ்வன் முதலியவர்கள் சுத்த வாசனையின் உருவகங்கள். ராவணனுடைய மூல பலம் 10000 தேர், 18000 யானை, 14000 குதிரை, 2 லட்சம் பதாதிகள் சேர்ந்த பெரிய சேனையாகும்.

ராம லெக்ஷ்மண கல்பனா ரூபம்.

ராவண சம்ஹார கல்பனா காட்சி.

...LIC LIBRARY
17 JUN 1956
MADRAS



இருளினால் மூடப்பட்ட ஈனமாம் புந்தி செய்த
புரையகங் காரமியாது பூர்வம் தோன்றிற் றந்தப்
பரவிய அகங்காரந்தான் பற்றற நசித்துப் போனால்
விரிவுறு பரஜீவைக்யம் விக்கின மின்றித் தோன்றும்

ஐந்து ஞானேந்திரியம், ஐந்து கர்மேந்திரியம் ஆகிய பத்து இந்திரியங்களின் காரியங்களைப் பதிஞயிரம் ரதங்களாகவும், பஞ்ச பூதங்கள், பஞ்ச ப்ராணன்கள், பஞ்ச தந்மாத்ரைகள், மனம், புத்தி, சித்தம் ஆகிய 18யும், 18000 யானைகளாகவும், புறக்கரணம் 10, அகக்கரணம் 4 ஆக 14 கரணங்களையும், 14000 குதிரைப் படைகளாகவும், நான் எனது என்ற அஹங்கார மமகாரங்களை 2 லட்சம் காலாட் படைகளாகவும் வர்ணிக்கப் பட்டிருக்கிறதேயல்லாமல் கணக்குத் தவராதபடி எண்ணிப் பார்த்துச் சொல்லப் பட்டதல்ல.

ஆத்ம ஞானமாகிய ராமபாணத்தால் மேற்சொன்ன மூலபலம் அழிக்கப்பட்டு ராவணஞகிய அஹங்காரமொழிந்து, ஞானயோகி அயோத்யையாகிய ஹிருதயத்தில் சீதையாகிய சுத்தமாயையுடனும், ஹனுமாஞன ஞான வைராக்கியத்துடனும், லெட்சுமணன், பரதன், சத்ருக்னன் ஆகிய மூன்று அவஸ்தைகளுடனும், கௌசல்யை, சுபத்ரை, கைகேசி ஆகிய முக்குணங்களுடனும், ஜீவன் முக்த நிலையடைந்தான் என்று கருத்து.

ராம லெக்ஷுமணர்களின் சேர்க்கையான தோற்றமே சப்தப்பிர்மத்தின் கல்பஞ ரூபம். அஹம்பிர்மாஸ்மி என்ற மஹத்தஹங்காரமே ராவண கல்பஞ ரூபம். பரஸ்பர தரிசனமே யுத்தம். ராமபாணமே த்ரிபுடியை நீக்கின அபரோக்ஷ ஞான உதயம். ராவண சம்ஹாரமே துக்க நிவிர்த்தி. ராமபட்டாபிஷேகமே சுகப்ராப்தியாகிய ஜீவன் முக்த நிலையாகும்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

துரீயம்

அல்லது

உத்தர காண்டம்

(மனோவாக்குகளுக்கு எட்டாத மவுனநிலையே துரீயமாகும்.)

ராவண சம்ஹாரம் செய்தபின்னர் அயோத்தி வந்து ராஜ்ய பரிபாலனம் செய்ய ஆரம்பித்தவுடனே சகல ரிஷிகளும் அங்கு வந்து ராமரைக் கொண்டாடினார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அகஸ்தியரிஷிக்கும், ராமருக்கும் நீண்ட சம்வாதம் நடக்கிறது. அப்பொழுது வால்மீகி ரிஷி யிருந்ததாகச் சொல்லப்படவில்லை. லவகுசர்கள் அஸ்வமேத யாக மண்டபத்தில் கானம் செய்த, வால்மீகியினால் செய்யப்பட்டதான, ராமாயணத்தில் மேற்சொன்ன அகஸ்திய ராம சம்வாதம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது 1569 ஸ்லோகங்கள் கொண்ட 36 சர்க்கங்களையுடையது. ராக்ஷச தத்வம், வானர தத்வம், அஹல்யா தத்வம் முதலிய உண்மைகள் இந்தப் பாகத்திலடங்கியிருக்கின்றன. ராமாயணம் யோக சாஸ்திரமென்றும், பூர்வீக இந்தியா சரித்திரமல்ல வென்றும் உத்தரகாண்டத்தைக் கவனித்து ஆராய்ந்து பார்த்தால் யாருக்கும் எளிதில் விளங்கும். அணிமா முதலிய யோக சித்திகளை அடைந்தவர்களை, வானரர்களாகவும், ராக்ஷசர்களாகவும், யக்ஷர்களாகவும், கந்தர்வர்களாகவும் உருவகப்படுத்தியிருக்கிறதென்பது நிஷ்பக்ஷபாதமாகப் பார்க்கில் நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளலாம். சித்தன் தன்னை யறியாதவன்.

முக்தன் தன்னைப் பிர்மமாயறிந்தவன். ராவணனைச் சித்தனாகவும், ராமனை முக்தனாகவும் தெரிந்து கொள்ளல் வேண்டும். சித்தனுடைய அஹங்கார நாசமே ராவண வதமாகும்.

ராமாயணத்தை ஆதி காவியமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அஸ்வமேத யாகசாலையில் ராமர் சன்னதியில் லவகுசர்கள் கானம் செய்யும்போது அங்கு கூடியிருந்த வித்வான்களில் காவிய லக்ஷணங்களறிந்தவர்களுமிருந்தார்கள் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. லக்ஷியமின்றி லக்ஷணமில்லாததால் ஏற்கனவே காவியங்களிருந்தனவென்று சொல்லவேண்டும்.

ஆகையால் ராமாயணத்தை முதலாவது காவியமென்று சொல்லுவதற்கிடமில்லை. ஒவ்வொரு ஞானயோகியின் சரித்திரமும் ராமாயணந்தான். எத்தனையோ ஞானயோகிகளிருந்திருக்கிறார்கள். அவர்களுடைய சரித்திரங்கள் எத்தனையோ விதங்களில் கல்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அவ்விதம் கல்பனை செய்கிறவர்களே வால்மீகிகளாகிறார்கள். ஆகையால் ராமாயணமும், வால்மீகியும், வேதத்தையும், பிர்ம்மாவையும் போல அனாதிகளேயாம். ராமன், சீதை, ராவணன் முதலிய கதாபாத்திரங்கள் கல்பனா புருஷர்களும், ஸ்திரீகளுமேயாவார்கள். யோக தத்வங்களே கால, தேச, புருஷர்களாக உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

முகவுரையில் ஏற்கனவே விவரித்தபடி அஸ்வமேத யாகம் என்பது மனோநாசமே யாகும். மனது நசித்தால்

55164

வித்தியாச பாவமே யிராது. பிர்மம் சத்தியம், ஜகத் மித்தை என்பது விளங்கும். வேதம், சாஸ்த்ரம், வர்ணம், ஆஸ்ரமம் எல்லாம் ஸ்வப்பனமாய்விடும். பரோக்ஷஞானம் நழுவும். சீதை சுத்தமாயையான பரோக்ஷ ஞானமான படியால் வேதபூமியில் மறைந்தாளென்று கல்பனை. சாஸ்திர வாசனை நீக்கமே பரோக்ஷஞான ஒழிவாகும். அந்திய காலத்தில் கோதானம் செய்வதின் கருத்து இதுதான். (கோ=ஞானம்; தானம்=நழுவுதல்.)

லெக்ஷ்மணன் சீதையை வனத்தில் விட்டுத் திரும்பிய பிறகு ராமன் லெக்ஷ்மணனுக்கு அனேக நீதிகளைப் புகட்டும்படியான கதைகளைச் சொல்லுகிறன். அவைகளெல்லாம் கல்பனைகளே. இருவரும் பிரியாத நட்புக் கொண்ட சகோதரர்களாக யிருக்கும்போது ராமனுக்குத் தெரிந்த கதைகள் லெக்ஷ்மணனுக்குத் தெரியாமலிருக்குமா. இருவரும் ஒரே குருவினிடம் பாடம் கற்றவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. நரநாராயணர்களை கிருஷ்ணன், அர்ஜுனன் என்று உருவகப்படுத்தி பகவத்கீதையை நமக்கு உபதேசிப்பதைப்போல, ராம லெக்ஷ்மண வியாஜமாக நீதிக்கதைகள் நமக்காகக் கல்பிக்கப்பட்டவைகளேயாம்.

கலப்பையினுல் உழுகும்போது பூமியிலிருந்து எடுக்கப்பட்ட சீதையின் வளர்ப்புத் தந்தையாகிய ஜனகராஜனின் பிறப்புக் கதையும் அவைகளில் ஒன்று. உத்தரகாண்டம் 55, 56, 57 சர்க்கங்களில் இது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

சில வியாஜ காரணங்களால் நிமிசக்கரவர்த்திக்கும் வசிஷ்டருக்கும் மனஸ்தாபமுண்டாகி ஒருவருக்கொருவர் சாபமிட்டுக் கொண்டார்கள். இருவருடைய உயிரும் தேஹங்களை விட்டுப் பிரிந்துவிட்டன. தேவர்கள் நிமியினுடைய ஜீவனை ஜனங்களுடைய கண் இமையில் வசிக்கும்படி வரமளித்தார்கள். அக்கால முதற்கொண்டு தான் மனிதர்கள் கண் சிமிட்டுகிறார்கள். நிமி ராஜனுக்குப் புத்திரனில்லாமையால் தேவர்கள் அவனுடைய தேஹத்தைக் கடைந்தார்கள். உயிரற்ற அந்த சரீரத்திலிருந்து ஒரு புருஷனுண்டானான். மதனம் செய்துண்டானதால் 'மிதி' என்றும், ஜனித்ததனால் ஜனகரென்றும், உயிர் பிரிந்த உடலிலிருந் துண்டானதால் வைதேஹரென்றும் அவன் அழைக்கப்பட்டான். அவனுடைய வம்சத்திலுண்டானவர்களெல்லாரும் ஜனகரென்றே பெயர் பெற்று வருகிறார்கள். ஜனகனால் வளர்க்கப்பட்ட அயோனிஜையாகிய சீதைக்கு ஜானகியென்றும், மைதிலியென்றும், வைதேஹியென்றும் காரணப்பெயர்கள் கல்பிக்கப்பட்டிருக்கின்றன.

ராமன் சீதையையும், லெக்ஷ்மணன் ஊர்மிளையையும், பரதன் மான்தேவியையும், சத்ருக்னன் ஸ்ருதகீர்த்தியையும் விவாகம் செய்துகொண்டார்கள். ராமாயண சரித்திரத்தில் சீதையைத்தவிர்த்து மற்றமூன்று ஸ்திரீகளின் விஷயம் சொல்லப்படவே யில்லை. லெட்சுமணன், பரதன், சத்ருக்னன் ஆகிய மூவர்களும் தங்கள் பத்தினிகளுடன் காலங் கழித்தார்களென்ற பேச்சேயில்லை. ஆனால் அவர்களுடைய அந்திய காலத்தில் தங்கள், தங்கள் புத்திரர்

களைத் தனித்தனி தேசங்களுக்கு அரசர்களாக்கினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான்கு பேருக்கும் ஒவ்வொருவருக்கும் இரு குமாரர்களிருந்தார்கள்.

ஏற்கனவே ராமனை துரீயநிலையை யடைந்தவனென்றும், லெட்சுமணனை ஜாக்ரம் அல்லது விழிப்பு நிலையனென்றும், பரதனை ஸ்வப்ன நிலையனென்றும், சத்ருக்னனை சுஷுப்தி அல்லது தூக்க நிலையனென்றும் சொன்னோம்.

சத்ருக்னனுடைய சுஷுப்தி என்பது உலக வியவகாரங்களை மறந்திருப்பதேயாம். பரதனுடைய ஸ்வப்ன நிலை யென்பது உலகத்தை ஸ்வப்பனம் போல் பொய்த் தோற்ற மென்ற நிச்சய புத்தியோடிருப்பதாம். லெட்சுமணனுடைய ஜாக்ரத அவஸ்தை யென்பது ராமனுடைய துரீயநிலைக்கு இடையூறு வராமல் ஜாக்ரதையாய் விழித்திருப்பதேயாம்.

லெட்சுமணனுடைய புத்திரர்களான அங்கதன், சந்திரகேது என்ற இருவர்களுக்கும் அங்கதீபம், சந்திரகாந்தை என்ற நகரங்களில் மகுடாபிஷேகம் செய்யப்பட்டது.

பரதனுடைய புத்திரர்களான தக்ஷன், புஷ்கலன் என்ற இருவர்களும் கந்தர்வர்களுடைய தேசத்தில் தக்ஷசிலை, புஷ்கலாவதம் என்ற நகரங்களில் மகுடாபிஷேகம் செய்யப்பட்டார்கள்.

சத்ருக்னருடைய புத்திரர்களான சுபாகுவும் சத்ருகாதியும், மதுராபுரியையும், வைதிசம் என்னும் நகரத்தை

யும் ராஜதானியாகப் பெற்றார்கள். மதுவென்னும் அசுரனுடைய புத்திரனான லவணாசுரனைக் கொன்று சத்ருக்னன் ஜயித்த நகரம் மதுராபுரியாகும்.

ராமனுடைய புத்திரர்களான குசனும், லவனும் கோசலநாடுகளையும், உத்தரநாடுகளையும் தங்கள் ராஜ்யங்களாகப் பெற்றார்கள்.

சத்ருக்னன் லவணாசுரனைக் கொன்று மதுராபுரியை ஜயித்தான் என்ற வர்ணனையின் கருத்தாவது:- லவணம் என்றால் உப்பு. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே யென்று பழமொழி. சராசரப் பொருள்களில் உப்பு சம்பந்தமில்லாதவைகளே கிடையாது. பிராணனைக் காப்பாற்ற உப்பு அவசியம் தேவை. அசு என்றால் பிராணன். அசுரனைப் பிராணனில் பிரியமுடையவனென்றே சாஸ்திரம் கூறுகிறது. பிராணனுடன் கூடிய ஸ்தூல தேஹத்தையே லவணாசுரன் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சத்ருக்னன் தேஹவாசனையை வென்றவன் என்று தெரிந்துகொள்ள வேண்டும். ஆத்மஞானிகளைத் தவிர மற்றெல்லோரும் லவணாசுரர்கள்தான். ஆத்மஞானிகளுடைய சரீரமே மதுராபுரியாகும். மதுவாகிய அமிர்தபானம் செய்தவனே ஞானியான சத்ருக்னனுகலாம். உலக விவகாரங்களை யொழித்து தேஹத்தையு மறந்து அமிர்தபானம் செய்வதனால் சுஷுப்தி நிலையில் இருப்பவன் என்று வர்ணிக்கப் பட்டிருக்கிறது. பரதன் கந்தர்வர்களைக் கொன்று அவர்களுடைய ராஜ்யத்தைக் கைப்பற்றினான் என்ற விஷயத்தின் கருத்து:- பரதனை யோகியின் ஸ்வப்பன அவஸ்தையாகச் சொல்லப் பட்டது. அவன் உலகத்தை ஸ்வப்பனம்போல் நினைக்கிறவன்.

கந்தர்வநகரம் என்று ஒன்று எங்குமில்லை. மனோராஜ்யத்தால் கட்டப்படுவதே கந்தர்வ நகரம். ஸ்வப்பனத்தில் உண்டாவது போலவே விழித்துக்கொண்டிருக்கும் போது பற்பல நினைவுகள் வந்து போய்க்கொண்டே யிருக்கின்றன. இத்தோற்றங்களையே கந்தர்வர்களென்று வர்ணிக்கப் பட்டிருக்கிறது. மனோசங்கல்பங்களை யொழித்தவனே பரதனாவான்.

பிராணனிருக்கும் வரைதான் துரீய நிலையிருக்க முடியும். காலருத்ரனாகிய யமன் ஸ்ரீ ராமனிடத்தில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தூர்வாச ரிஷியினுடைய உத்திரவுக்குப் பயந்து, தனக்கு மரண தண்டனை விதிக்கப் படும் என்பதைத் தெரிந்தும், லெட்சுமணன் உள்ளே போய், ரிஷியினுடைய வரவைத் தெரிவித்ததால், பிராணனுக்கு சமமான தம்பியை ராமர் திரஸ்கரித்துவிட்டார். இந்த வர்ணனையிலிருந்து ஞானிகள் தங்களுக்கு அந்திய காலத்தை முன்னமேயே தெரிந்து கொள்ளுகிறார்கள் என்று அறியவேண்டும். லெட்சுமணன், பிராணத்யாகம் செய்து கொண்டவுடனே, ராமன், பரதன், சத்ருக்னன், அந்தப்புர ஜனங்கள், அயோத்யாபுரி வாசிகள், இதர தாவர ஜங்கமங்கள் எல்லாவற்றுடனும் சரயூ நதியிலிறங்கி மூழ்கினவுடனே நாமரூபமற்ற பிர்ம்ம சாக்ஷாத்காரத்தை யடைந்தார்கள். இந்த வர்ணனை ஜீவன்முக்தன் விதேஹ முக்தியை யடைந்தான் என்பதைக் காட்டுகிறது.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

முடிவுரை.

முகவுரையில் ராமாயணத்தை காயத்ரீஸ்வரூபமென்று சொல்லப்பட்டிருப்பதை சிறிது இங்கு ஆராய்வோம்.

தேவீபாகவதத்தில், காயத்ரீயின் 24 அக்ஷரங்களும் 24 தத்வங்களை குறிக்கின்றனவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ப்ருதிவீ, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்சபூதங்களும், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம், என்ற பஞ்சதந்மாத்திரைகளும், உபஸ்தம், பாயு, பாதம், பாணி, வாக்கு என்ற பஞ்ச கர்மேந்திரியங்களும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்ச ஞானேந்திரியங்களும் பிராண, அபான, வ்யான, சமான என்ற நான்கு பிராணங்களும் ஆகிய 24 தத்வங்களும் காயத்ரீ மந்திரத்தின் 24 அக்ஷரங்களைக் குறிக்கின்றன. அக்ஷரம் என்றால் சாஸ்வதமான பிர்மம் என்று பொருள். தத்வம் என்றால் பிர்மத்தின் தன்மை என்று பொருள்.

வனத்தில் ராவணன் சீதையை அபகரிக்கவந்த காலத்தில் சீதை தனக்கு 18 வயதென்றும் ராமனுக்கு 25 வயதென்றும் சொன்னதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. விஸ்வாமித்திரர் ராமனை தசரதரிடம் கேட்டுக் கூட்டிக் கொண்டு போகும்போது 16 வயதுக்குக் குறைவு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சீதா கலியாணமான பிற்பாடு அயோத்தியில் 12 வருஷம் சுகமாயிருந்ததாகவும் வர்ணனை. பின்பு 13 வருஷம் வனவாசம். இப்பொழுது ராமனுக்கு 41 வயதுக்கு மேலாகிறதல்லவா. சீதை தனக்கு 18 வயதென்றும், ராமனுக்கு 25 வயதென்றும் எப்படிச் சொன்னாள். ஏன் சொன்னாள். ராவணன் வயதென்ன வென்று கேட்டதாகவு

மில்லையே. ராமன் 25 வயதுடையவனென்றது 24 தத்வங்களுக்கு மேலான 25-வது தத்வஸ்வரூபியான பிர்மம் என்று தாத்பரியம். சீதையை மூலப்ரகிருதியாக யறிந்து லிங்க சரீரமாகிய 17 தத்வங்களின் ஆஸ்தானத்தின் மேல் ஸ்தானமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். தசேந்திரியங்களும், பஞ்சபிராணனும், மனமும், புத்தியும் சேர்ந்தது லிங்கம் அல்லது சூட்சம சரீரமாகும்.

ராமன் சரபங்க ஆஸ்ரமத்திற்கு வரும்போது இந்திராதி தேவர்கள் அங்கே வந்திருந்ததாயும், எல்லாரும் 25 வயது உடையவர்களாய்க் காணப்பட்டார்களென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்திரனாகிய ஜீவாத்மாவும் 25-வது தத்வத்தைத்தான் குறிக்கிறது என்று தாத்பரியம். ஜீவாத்மாவே சப்தப்பிர்மம். சப்தப்பிர்மத்தை அறிந்த பிறகே பரப்பிர்மத்தை யடையக்கூடும். அதைக் குறிப்பிடுவதற்காகவே இந்திரனை சரபங்கர் கண்டவுடனேயே ராம தர்சனம் ஏற்பட்டுப் பிர்மலோகத்தை யடைந்தாரென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பகவத்கீதையில் விபூதியோகத்தில் கிருஷ்ணன் தன்னை 'சந்தஸ்கள் அல்லது விருத்தங்களில் நான் காயத்ரியாயிருக்கிறேன்' என்று சொல்லுகிறார். கிருஷ்ணனை அந்தர்யாமியாகவே அறிய வேண்டுமென்று அத்வைத விளக்கம் 4-ம் பாகத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் காயத்ரியே அந்தர்யாமியாகும். மைத்ராயணி உபநிஷத்தில் காயத்ரியின் அர்த்தமும் மகிமையும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

உலக நாட்டத்தாருக்கும் காயத்ரியாகிய அந்தர்யாமிக்கும் வெகுதூரம். ஆத்மகாமிகளாகிய பிர்ம்மவாதினிகளுக்குத்தான் காயத்ரி உரித்தானது என்று அந்த உபநிஷத் கூறுகிறது.

யாஞ்யவல்கஸ்மிருதியில் காயத்ரி, சந்தியாவென்று சொல்லப்படுகிறது. அது காலையில் காயத்ரியாகவும், பகலில் சாவித்ரியாகவும், மாலையில் சரஸ்வதியாகவும், சொல்லப்படுகிறது. ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியமே சந்தியாகும். இரவும் பகலும் சேருவது காலசந்திதான். தேவிகளாக வர்ணிக்கப்பட்ட மேற்கண்ட நாமங்களில் அர்த்தபேதமில்லை. பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரர்களில் வித்தியாசமில்லாதது போல அவர்களுடைய சக்திகளாகிய தேவிகளிடத்தும் வித்தியாசமில்லை.

சிவஸ்யஹ்ருதயம் விஷ்ணு; விஷ்ணுஸ்ய ஹ்ருதயம் சிவ: என்றறிகிறவர்கள் கல்பனா நாமங்களிலும் ரூபங்களிலும் பேதபுத்தி கொள்ளுகிறதில்லை.

சீதையை ஓங்கார ஸ்வரூபமாகவே உபநிஷத் வர்ணிக்கிறபடியாலும், காயத்ரி அதை வர்ணிக்கும் வாசகமானபடியாலும், சீதா சரித்திரமாகிய ராமாயணம் காயத்ரீ ஸ்வரூபமென்றே சொல்லப்பட்டிருக்கிறது.

ஞானயோகாப்யாசிகளே ராமாயணத்தை ஸ்ரவணம் செய்ய அதிகாரிகளென்றும், ஞானயோகசாஸ்திரமே விஷயமென்றும், ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியமே சம்பந்தமென்றும் துக்க நிவிர்த்தியும் சுகப்ராப்தியுமே பிரயோஜன மென்றும், அத்வைதிகளின் சித்தாந்தமாகும்.

45-ம் பக்கத்திலுள்ள மானச க்ஷேத்திரங்கள்

(பௌம) அல்லது பூமியிலுள்ள க்ஷேத்திரங்கள் இவைகளின் விளக்கம்.

பத்ம புராணம்

வசிஷ்டர் கூறுகிறார் :– "மானச தீர்த்தங்களைச் சொல்லுகிறேன். அவைகளில் ஸ்நானம் செய்தால் பரமகதி கிடைக்கும். சத்யம், பொறுமை இந்திரிய நிக்ரஹம், தயை, த்யானம், த்ருப்தி, இவைகளெல்லாம் தீர்த்தங்கள். ஆத்ம த்யானமும், ஈஸ்வரஸ்மரணையும் தீர்த்தங்களேயாம். எல்லா தீர்த்தங்களையும்விட ஸ்ரேஷ்டமானது மனோசுத்தி தான். கள்ளுக்கலயத்தின் மேல் எவ்வளவு ஜலம் போட்டுக் கழுவினாலும் அது சுத்தமாக மாட்டாததுபோல கெட்ட சித்தமுள்ளவன் எத்தனை பௌம தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தாலும் பரிசுத்தமாகமாட்டான். பௌம தீர்த்தங்களின் மாஹாத்ம்யத்திற்கும் காரணம் சொல்லுகிறேன். மனுஷ்ய சரீரத்தில் முகம்முதலிய சிலபாகங்கள் மற்றவைகளைவிட விசேஷமாயிருப்பது போல மண்பூமியிலும் சில இடங்கள் ஸ்லாக்கியமாயிருக்கின்றன. விசேஷமான காட்சியும், சுத்தமான ஜலமும் இருக்கும் ப்ரதேசங்களை பெரியோர்கள் க்ஷேத்திரங்களாக ஏற்படுத்தியிருப்பதால் அவைகள் புண்ணிய க்ஷேத்திரங்களா யிருக்கின்றன. புண்ணிய காலங்களில் பௌமதீர்த்தங்களிலும், மானச தீர்த்தங்களில் எல்லாக் காலத்திலும் ஸ்நானம் செய்கிறவர்கள் பரமகதியடைவார்கள்"

ஸ்ரீ ஜாபாலதர்சன உபநிஷத்.

ஸ்ரீபர்வதம் சிரசிலும், கேதாரம் நெற்றியிலும், காசி புருவ மத்தியிலும், ஹிருதயத்தில் பிரயாகும், ஹிருதய த்தியில் சிதம்பரமும், மூலாதாரத்தில் கமலாலயமும் இருக்கின்றன. இந்த ஸ்தானங்களில் ஸ்நானம் செய்கிறவர்கள் சுத்தமாவார்கள்.

ஸ்கந்தோபனிஷத்.

தேஹமே தேவாலயம். ஜீவனே ஈஸ்வரன். பாச முள்ளவரைக்கும் ஜீவன். பாசம் நீங்கினல் ஈசன்.

பகவத்கீதை.

இந்த சரீரத்தையே க்ஷேத்ரம் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

ஸ்காந்த புராணம்.

ஈசன் எங்கும் இருக்கிறார். சகல தேவதைகளும் எல்லா மனுஷ்யர்களுடைய சரீரத்திலுமிருக்கிறார்கள். ஒருவரையும் நிந்திக்கலாகாது.

பிர்ம்மவைவர்த்த புராணம்.

பாதாளம் முதல் பிர்மலோகம் வரையுள்ள ப்ரதேசம் பிர்மாண்டமாகும். மண்பூமிக்குமேல் பூலோக மிருக்கிறது. பூலோகமுதல் சத்யலோகம் வரையுள்ள ஏழுலோகங்களும் மானசபூமிகள் தான்.

கருட புராணம்.

இதிஹாச புராணங்களில் வர்ணிக்கப்பட்ட சகல

நதிகளும், மலைகளும், சமுத்திரங்களும், க்ஷேத்திரங்களும் மனிதனுடைய பாரமார்த்திகசரீரத்தில் தானிருக்கின்றன.

ராமபூர்வதாபின் யுபநிஷத்.

சகுணோபாசனை செய்கிறவர்களுக்காக பிர்ம்மத்துக்கு நாமமும் ரூபமும் கல்பிக்கப்பட்டன.

ஹாலாஸ்ய மாஹாத்ம்யம்.

சிவன் சொல்லுகிறார்:— "மூலாதாரம் முதல் பிர்ம் மரந்திரம் வரையுள்ள ஆதாரங்களே: கமலாலயம் (திருவாரூர்), கஜாரண்யம் (திருவானைக்காவல்), அனலாசலம் (திருவண்ணாமலை), சிதம்பரம், தக்ஷிணகைலாசம் (காளஹாஸ்தி), வாராநசி (காசி), ஸ்ரீ கைலாசம், ஆகியவைகள். இவைகளுக்கெல்லாம் மேலான ஸ்தானத்தில் ஹாலாஸ்யம் என்ற த்வாதசாந்தம் ஊனக்கண்களால் பார்க்க முடியாததும் யோகிகள் த்யானத்தினால் ஞானக்கண்ணால் பார்க்கக் கூடியதுமான நித்திய ஜோதியாக விளங்குகிறது. அங்கு நான் சுந்தரேசனாயிருக்கிறேன்"

இத்தகைய மேற்கோள்கள் எத்தனையோ சொல்லலாம்—விரிக்கிற் பெருகும்.

ராம, கிருஷ்ண, சங்கர, பார்வதி, லெக்ஷ்மி முதலிய நாமங்களை ஹிந்துக்களுக்குப் பெயர் வைப்பது போல, மானசக்ஷேத்திரங்களின் நாமங்களை நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பெயர் வைத்திருக்கிறார்கள். மானச தீர்த்தங்களின் நாமங்களை நதிகளுக்கும், தடாகங்களுக்கும் பெயர் வைத்திருக்கிறார்கள். இதிஹாச புராணங்களை அலக்ஷியம் செய்கிற இக்காலத்தில் அவைகளில் கண்ட நாமங்கள்

இன்னும் பூருவும் அழிந்துவிடாமலிருப்பதற்குக் காரணம் அதேதான். மூதாதையர்களான ரிஷிகள் காரணத்தோடு கல்பனை செய்த பெயர்களை மாற்றுமலும், சிதைக்காமலும் இருந்தால் தேசத்திற்கு க்ஷேமமுண்டாகும். ஒவ்வொரு நாமமும் மந்திரசக்தியுடன் கூடினதாகையால் பெயரை அலக்ஷியம் செய்யக்கூடாது. சப்தப் பிர்மத்தை யறிந்து தான் நிர்க்குணப் பிர்மத்தை யடையமுடியும். த்யான யோகியான ஹனுமார் மட்டுமே லங்கையில் பிரவேசிக்க சக்தியுடையவனு யிருந்தார் என்று சுந்தர காண்டத்தில் தெரிந்துகொண்டது போல சுந்தரேஸ்வரனை யறிய த்யான யோகியால்தான் முடியும். ஹாலாஸ்யத்தை ஊனக்கண்ணுல் பார்க்க முடியாதபோது, அங்குள்ள மூர்த்தியை எப்படிப் பார்க்கமுடியும். ஸ்தூலசரீரத்தோடு கூடின வாதவூரானுய்ப் பிறந்து, சப்தப் பிர்மஞானத்தை யுடைய மாணிக்கவாசகனுன பின், ஜீவன் முக்தனுன ஞானசம்பந்தனுகி, சுந்தரேஸ்வரனுன பரப்பிர்மமாயாகலாம்.

இந்நூல் அத்வைத விளக்கம் 5-வது பாகமாகும். இச் சிறு புஸ்தகங்களில் வெளிவந்திருக்கிற விஷயங்கள் பல உபநிஷத்து, புராணம், இதிஹாசங்களிலிருந்து கிரஹிக்கப்பட்டு எழுதியவை. இவ்வாசிரியர் தன் முயற்சிக்குக் கைமாருக விரும்புவது ஒன்றே. யௌவன வயதுடைய படித்த மாணவர்கள் இந்நூல்களை மதப்பற்றில்லாமல், மெய்ப்பொருளறிய வேண்டுமென்ற வைராக்கியத்துடன் படித்தறிந்து ஒவ்வொருவரும் ஆத்மாராமர்களாய் விளங்க வேண்டு மென்பதேயாம்.

ஓம் தத் ஸத்!

அத்வைத சாரம்.

பரமமாம் தத்துவத்தைப்
பார்த்து நன்றுணர்ந் திடாக்கால்
பரவிய நூல்களோதல்
பலமேது மிலாத தாகும்
பரமமாம் தத்துவத்தைப்
பார்த்து நன்றுணர்ந் திடுங்கால்
பரவிய நூல்களோதல்
பலமேது மிலாததே காண். (விவேக சூடாமணி.)

பொய்யை மெய்யென்ற மூடர் புண்ணியமென்று
புராணங் கூப்பிடுமானல்
மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள்
விதித்த சாஸ்திரமுண்டோ
பொய்ய தேதனில் நாமரூபங்களாம்
பூதமாகிய மாயை
மெய்ய தேதனிற் சச்சிதானந்தமாய்
வியாபிக்கும் ஆன்மாவே. (கைவல்ய நவநீதம்.)

பொருளல்லவற்றைப் பொருளாகப் பார்த்திடல் போதமதோ
பொருளைப்பொருளா விசாரித்துக் கண்டிடல் போதமதோ
பொருளிதில் யாதுவிழைவாதி அல்லலைப் போக்கிடுதல்
பொருளதுவாகு முடிவது வாகும் புலமையதே
(ப்ரத்தியக்ஷானுபூதி விளக்கம்.)

சங்கரன்வாழி சதுர்மறைவாழி சமையாது
சங்கையகற்றிடும் வேதாந்த நாட்டிய சங்கரன்றன்
பங்கமில் பீடமோர் நாலெங்கும்வாழி பராபரத்தை
மங்குதலின்றி விளக்கும் குரவர்கள் வாழியவே.

CONNEMARA PUBLIC LIBRARY

பிழை திருத்தம்.

	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
முன்னுரை	ii	13	கோறும்	கோரும்
	iv	3	காருண்மு	காருண்யமு
	xix	13	வாலமீகி	வால்மீகி
நூல்	20	6	படடிருக்கிறது	பட்டிருக்கிறது
	,,	22	முள்ளவும்	முள்ளளவும்
	34	6	கூறப்பட்டிருக்கிறது	கூறப்பட்டிருக்கிறது.
	56	5	தோற்றங்களையே	தோற்றங்களே
	,,	6	பட்டிருக்கிறது	பட்டிருக்கின்றன

அம்ருதவல்லி லேகியம்

புனிதமான சரக்குகளைக்கொண்டு சித்தவைத்ய பண்டிட், வைத்யமணி S. S. மூர்த்தி அவர்களால் தயாரிக்கப்பட்ட இந்த அம்ருதவல்லி லேகியத்தில் காலையில் ஒரு கழச்சிக்காய் அளவும், மாலையில் ஒரு கழச்சிக்காய் அளவும் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் மூளைக் கொதிப்பு, கண்புகைச்சல், நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, தேகக்கடுப்பு, வயிற்றுவலி, இருமல், நீர் சுறுக்கு, அண்டவாதம், உட்காந்தல், மலச்சிக்கல், மேலெரிவு, சொறி, சிறங்கு, வெள்ளை, வெட்டை, புண்கள், கணைச்சூடு முதலியன தீரும். மேலும் நோய்களை அணுகவொட்டாமல் தடுத்து தேகத்தை ஆரோக்ய நிலையில் வைத்துக்காப்பாற்றும்.

அம்ருதவல்லி லேகியம்

பெரிய டப்பி ரூ. 5.

சின்ன டப்பி ரூ. 3.

கிடைக்குமிடம் :—

வைத்யமணி S. S. மூர்த்தி

கமலா வைத்யசாலை

28, தெற்கு சித்திரை வீதி, மதுரை.

சைபால்

வேனல்கட்டி, முகப்பரு,

சொறிசிரங்கு,

தீப்பட்டபுண், கரப்பான்

முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

★

தயாரிப்பவர்கள் :-

தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

கடவுள் சிருஷ்டியை உள்ளபடி
சித்தரிப்பது உருவப்படம்

மாறும் இயற்கையை மறையாது
காப்பதும் மங்காத உருவப்படம்

பால, யௌவன, முதுமை இயல்பை
யும் பாங்காகச் சித்தரிப்பதும்
பழுதிலா போட்டோப்படம்

இவை எங்கு நாம் எளிதிற் பெறலாம்?

உண்மையில் ஓவியக்கலையில் பழகிப்
பயிற்சி பெற்ற பழமை போட்டோ கிராப்பர்

M. கைலாஸ்
ஸ்டுடியோ

**வித்வான் பொன்னுச்சாமி பிள்ளை தெரு
மதுரை.**

என்பதே பலர் நம்பிக்கை.

S. R. B. K.

சேலைகள்

இணையற்ற அழகுள்ளவை

உடுத்த உற்சாகமளிப்பவை

எஸ். ஆர். பி.

S. R. B. குப்புசாமி அய்யர் & சன்

230, கீழமாரட்டு வீதி, மதுரை.

117, நையினியப்ப நாயக்கன் தெரு,

பி. டி. மதராஸ்—**3.**

அந்தஸ்தை அளிப்பது அணிகலமாகும்

நாணயம்! நம்பிக்கை!! நாகரீகம்!!!

உத்திரவாதமுள்ள நகை வியாபாரிகள்

S. முத்துசாமி செட்டியார் & சன்ஸ்

ரிஜிஸ்டர் **S. M.** மார்க்

தங்க நகை வெள்ளிப்பாத்திர வியாபாரம்,

125-A, தெற்காவணிமூல வீதி,

மதுரை.

தந்தி :- TRUTH. டெலிபோன் நிர். **15.**

ரெஜினா மூட்டைப்பூச்சி பவுடர்.

பவுடரை லேசாகத் தூவி விடவும் சுவர் கதவு மற்ற இடங்களிலிருக்கும் எறும்பு, மூட்டைப் பூச்சி, கரையான் ஷை பவுடரின் மணத்தினால் மயங்கிமடிந்துவிடும்

சுகமாக நித்திரை செய்யலாம். ஷை ரெஜினா மூட்டைப் பூச்சி பவுடர் எங்கும் ஏராளமாக விற்பனையாகி வருகிறது.

எங்கும் கிடைக்கும்.

Use REGINA INSECT POWDER.

To be free from all sorts of insects during night times immediate destruction of insects such as Bugs, Ants, Fleas, Whiteants etc.,

A TRIAL SOLICITED.

Best Indian make stands foremost in its effect.

Direction:- **Spray the powder all around the bedding In few minutes bugs, ants, fleas and other insects get paralysed and destroyed. A free sound sleep guaranteed**

Sound sleep is most important for Sound Health.

Proprietor :-

G. PALANIAPPA MUDALIAR,

32, Dhanappa Mudaliar Street, MADURAI.

ஓம்: தத்: தத்:

K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்

"மேல்மாயில் மருந்து"

உலகத்தில் முதன்மைபெற்ற மேக குஷ்டரோக நிவாரணி
மேக நோயால் துன்பப்படுவோருக்கு புத்துயிரளிக்கும்
புனித சஞ்சீவி.

மேகரோக நிவாரண

எண்ணெய் & லேகியம்.

கருமேக, செம்மேகப் படைகள், மேக ரணங்கள், திமிர், மதமதப்பு, குஷ்டம், குழிப்புண், பித்தகாரிகம், சூதகக் கோளாறுகள், வாதம், குன்மம், வெள்ளை, வெட்டை, கிரந்தி, கைகால் எரிச்சல், ரத்த-பலக் குறைவு, சிரங்கு, நமைச்சல் மற்றுமுள்ள எல்லாவித துர்நீர் வியாதிகளையும் ஆச்சரியமாக குணப்படுத்தும்.

பாதமெல்லாம் வெடித்துப்புண் குழிவீழ்ந்து புரையோடி
பார்ப்பவர்கள் பழித்திடவே விரல்கள் வீழ
வேதனைசெய் குட்டமுடன் கருமேகம் திமிர்குஷ்டம்
மிகக்கொடிய கிரந்திப்புண் மேகநோய்கள்
மாதர்களா லுளவாகும் வெள்ளையரை யாப்புவெட்டை
மதமதப்பு குடைச்சலிவை யெல்லாந் தீரும்
தீதகலும் மேல்மாயில் கே. டி. கே. மூர்த்தியின்
தெய்வீக மருந்துகளால் திண்ணம் பாரீர்.

40-நாள் 1-மண்டலம் எண்ணெயும் லேகியமும் ரூ. 5/-

தபால் செலவு வேறு. முழுவிபரங்கள் கேட்லாக்கில் பார்க்கவும்.

K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்,

5-22, மேல்மாயில் போஸ்டு, (காட்பாடி மார்க்கம்)

CONNEMARA ... MADRAS